Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 38 ■ சுடர்: 28 ■ கதிர்: 275 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆவணி 12, புதன் 28.08.2013


ஐக்கிய தேசியக் கட்சி
தியாகராஜா
துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்
X 5

# தமிழருக்குத் தீர்வு கிட்ட தொடர்ந்து போராடுவேன்

## முள்ளிவாய்க்கால் மக்களிடம் நவிப்பிள்ளை திட்டவட்டம்

முல்லைத்தீவு, ஓக. 28
"எனக்கு இருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தித் தமிழர்களாகிய உங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத் தருவதற்குப் போராடுவேன்."

இவ்வாறு நேற்று மாலை முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், கேப்பாபிலவு பகுதிகளில் மக்களை நேரில் சந்தித்து உறுதியளித்தார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை.

"நீங்கள் என்னிடம் தெரிவித்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நேரில் பேசுவேன். அத்துடன் இது தொடர்பா[illegible] விரிவான அறிக்கை ஒன்றை ஐ.நாவில் சமர்ப்பிப்பேன்" என்றும் அவர் அங்கிருந்த மக்களிடம் கூறினார்.



நவிப்பிள்ளையிடம் பிரச்சினைகளை எடுத்துக்கூறும் முள்ளிவாய்க்கால் பகுதி மக்கள்

இரண்டு நாள் பயணமாக வடக்குக்கு வருகை தந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் சந்திப்புக்களை முடித்துக் கொண்டு ஏ-9 வீதி ஊடாக கிளிநொச்சிக்குப் பயணமானார். அங்கிருந்து முல்லைத் தீவுக்குச் சென்ற அவர் இறுதிக் கட்டப்போரில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட முள்ளி வாய்க் கால், புதுமாத்தளன், கேப்பாபிலவு ஆகிய இடங்களுக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது மக்கள் தமது உள்ளக் குமுறல்களை ஐ.நா. ஆணையாளரிடம் கொட்டித் தீர்த்தனர். இதன் பின்னர் அவர்களுடன் ஐ.நா. ஆணையாளர் மனம்திறந்து பேசினார். இதன்போது அவர் மக்களிடம் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

உங்கள் நிலையை நேரில் அறிந்து கொள்வதற்காகவே இங்கு வந்துள்ளேன். நீங்கள் உங்கள் பிரச்சினைகள் தொடர்பில் என்னிடம் எடுத்துக் கூறுவதற்காக நீண்ட நேரம் எனக்காகக் காத்திருந்திருக்கிறீர்கள். அதற்காக உங்களுக்கு எனது நன்றிகள். இப்போது

தொடர்ச்சி: பக்கம் 25

# எமது பிள்ளைகளை மீட்டுத் தாருங்கள் உங்களை நம்பியே வந்திருக்கிறோம்

## நவநீதம்பிள்ளையிடம் முள்ளிவாய்க்கால் மக்கள் கதறல்

முல்லைத்தீவு, ஓக. 28
"எங்கள் பிள்ளைகளை எப்படியாவது மீட்டுத் தருவீர்கள் என்ற நம்பிக்கையில் தான் உங்களிடம் வந்திருக்கிறோம். நீங்கள் எங்களைப் பார்த்து விட்டுப் போங்கள். உங்களிடம் எமது பிரச்சினைகளை முறையிட்டமைக்காக நாங்கள் இன்னும் சில நாள்களில் கொல்லப்படலாம் அல்லது காணாமற்போகலாம்"

நேற்று முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், கேப்பாபிலவு பகுதிகளுக்கு நேற்று நேரில் சென்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் கண்ணீர் மல்கியவாறு தெரிவித்தனர் இறுதிப் போரில் பிள்ளைகளை படையினரிடம் கையளித்த பெற்றோர்.

முல்லைத்தீவுக்குசென்றஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இறுதிப்போரினால் பாதிக்கப்பட்ட முள்ளி வாய்க் கால், புதுமாத்தளன், கேப்பா

தொடர்ச்சி: பக்கம் 25

## நீங்களும் காணாமற்போவீர்கள்

### நவிப்பிள்ளையை சந்தித்த மக்களுக்கு மிரட்டல்

முல்லைத்தீவு, ஓக. 28
"உங்கள் பிள்ளைகள் காணாமற்போயுள்ளனர் என நவநீதம்பிள்ளையிடம் மனுக் கொடுத்துள்ளீர்கள். இதனால் உங்கள் பிள்ளையின் நிலையே உங்களுக்கும் ஏற்படும்."

இப்படி நேற்று மாலை 6.45 மணியளவில் முள்ளிவாய்க்கால் பகுதியில் வீடொன்றுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர் அங்கிருந்தவர்களுக்கு எச்சரிக்கை விடுத்துச் சென்றுள்ளனர்.

அத்துடன் முள்ளிவாய்க்கால், கேப்பாபிலவு, புதுமாத்த ளன் பகுதிகளில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளைக்கு பிரச்சினைகளை எடுத்துக் கூறிய மக்களின்

தொடர்ச்சி: பக்கம் 25

## விபத்தில் தந்தை சாவு மகன் படுகாயம்

யாழ்ப்பாணம், ஓக. 28
உடுப்பிட்டி, தொண்டமானாறு வீதியில் இடம்பெற்ற விபத்தில் தந்தை உயிரிழந்ததுடன் மகன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து நேற்று முற்பகல் 10.30 மணியவில் தொண்டமானாறு உடுப்பிட்டி வீதியில் பொக்கணைச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளும் இ.போ.ச. பஸ்ஸும் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்தனர். உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றவேளை தந்தையார் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் வட்டக்கச்சியைச் சேர்ந்த மாசிலாமணி மனோரஞ்சன் (வயது -38) என்பவர்

தொடர்ச்சி: பக்கம் 25

## நவிப்பிள்ளைக்காகப் பரந்தனில் காத்திருந்த மக்கள் விரட்டியடிப்பு

கிளிநொச்சி, ஓக. 28
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையிடம்தமதுஅவலநிலையை எடுத்துக் கூறுவதற்கு பரந்தன் சந்தியில் காத்திருந்த காணாமற்போனவர்களின் உறவுகள் புலனாய்வாளர்களாலும் பொலிஸாராலும் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் வன்னிக்கான வருகையை எதிர்பார்த்து காணாமற்போனவர்களின் உறவுகளும் வன்னி அன்னையர்

தொடர்ச்சி: பக்கம் 25

## மண்ணில் புரண்டு கதறிய உறவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 28
காணாமல்போனவர்களை மீட்டுத்தருமாறு கோரியும், படையினரின் நில அபகரிப்புக்கு எதிராகவும், தம்மை மீள்குடியேற்றுமாறு வலியுறுத்தியும் யாழ். பொதுநூலகத்துக்கு முன்னால் நேற்று ஆயிரக்கணக்கானோர் கவலை தாங்காது மண்ணில் புரண்டு கதறியழுதவாறு போராட்டம் நடத்தினர்.

தொடர்ச்சி: பக்கம் 25



### சாவகச்சேரியில் நேற்றிரவு

## துப்பாக்கிச் சூடு

### சு.க. ஆதரவாளர்கள் காயம்

யாழ்ப்பாணம், ஓக. 28
வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்கள் இருவரின் ஆதரவாளர் குழுக்களுக்கிடையே நேற்றிரவு சாவகச்சேரியில் துப்பாக்கிச் சூடு மற்றும் கல் வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

இதில் சுதந்திரக் கட்சியில் போட்டியிடும் குமார் சர்வானந்தாவின் ஆதரவாளரான கொடிகாமம் பாலாவி தெற்கைச் சேர்ந்த கனகசிங்கம் நந்தகுமார் (வயது-29) என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிச் சாவகச்சேரி வைத்

தொடர்ச்சி: பக்கம் 25

## நிமலரூபனின் தாயாருக்கு ஆறுதல் கூறினார் நவி

யாழ்ப்பாணம், ஓக. 28
சிறையில் அடித்துக் கொல்லப்பட்ட நிமலரூபனின் தாயாரைச் சந்தித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார் அவரைக் கட்டியணைத்து ஆறுதல் தெரிவித்தார்.

"நடந்தது நடந்து விட்டது. இனிமேல் இவ்வாறு நிகழாமல் பார்த்துக்கொள்வோம்" என்றும் தெரிவித்தார் நவிப்பிள்ளை.

யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, நல்லூரில் அமைந்துள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அலுவகத்தில் நேற்றுக் காலை சிவில் சமூகத்தைச்

தொடர்ச்சி: பக்கம் 25

## நவிப்பிள்ளைக்கு எதிராகவும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 28
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். மாவட்ட செயலகம் முன் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று சிறிது நேரம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி: பக்கம் 25

# இலங்கை-பெலாரஸ் இடையே ஏழு ஒப்பந்தங்கள் கைச்சாத்து



கொழும்பு.ஒக 28 .
இலங்கைக்கும் பெலாரஸுக்குமிடையில்ஏழுஇருதரப்புஉடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. பெலாரஸ் நாட்டுக்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்நாட்டு ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகன்ஷன்கோ ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் தொடர்பான உடன்படிக்கை, இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ விமான பயணச் சீட்டுடையவர்களை விசாக்களிலிருந்து விடுவித்தல். குற்றவியல் தொடர்பான விடயங்களின்போது பரஸ்பர சட்ட ஒத்துழைப்புத் தொடர்பான சாசனம், சட்டம் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை, இரு நாடுகளுக்குமிடையிலான இரட்டை வரி விதிப்பை தடுக்கும் உடன்படிக்கை, சுற்றுலாத்துறையின் ஒத்துழைப்புத் தொடர்பான உடன்படிக்கை மற்றும் இராணுவத் துறையில் தொழில்நுட்ப ஒத்துழைப்புத் தொடர்பான உடன்படிக்கைகளே கைச்சாத்திடப்பட்டன.

> இருதரப்புத் தொடர்புகளை வளர்த்துக் கொள்வதை இலங்கை - பெலாரஸ் தலைவர்கள் உறுதிப் படுத்தினர்.

இதேவேளை, பல் துறைகளில் இருதரப்பு தொடர்புகளை வளர்த்துக்கொள்வதை இலங்கை - பெலாரஸ் தலைவர்கள் உறுதிப்படுத்தினர். பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு, கல்வி, தொழில்நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்திக்கொள்வதை இலங்கை - பெலாரஸ் தலைவர்கள் உறுதிப்படுத்தினர்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, மொஸ்கோவுக்கான இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க, மாகாண சபை உறுப்பினர்களான நவுசர் பௌசி, சோமவங்ச கோதாகொட, அர்ஜுன த சில்வா, வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் நஷனுகா செனவிரத்ன ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (த)

## தென் கொரிய பிரதமர் இன்று இலங்கைக்கு



கொழும்பு.ஒக 28
இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணமாக தென் கொரிய பிரதமர் சன்ங் ஹொன்ங் வொன் இன்று இலங்கை வரவுள்ளார்.

தனது பயணத்தின்போது பிரதமர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட அரசியல் உயர் அதிகாரிகள் பலரையும் தென் கொரியப் பிரதமர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இதன்போது இரு நாடுகளுக்குமிடையிலான உறவை மேம்படுத்துவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பயணத்தின்போது தென் கொரியப் பிரதமர் இலங்கை - கொரிய சுற்றுச் சூழலை அழகுபடுத்தல் தொடர்பான நிகழ்வில் கலந்துகொள்ள உள்ளதுடன் கொழும்புத் துறைமுகத்தையும் பார்வையிட உள்ளார்.

1977ஆம் ஆண்டுக்கு பின்னர் தென் கொரியப் பிரதமர் ஒருவர் இலங்கைக்கு வருவது இதுவே முதன் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கதிர்காமரது காணி சுவீகரிப்புக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு .ஒக. 28
காணி சுவீகரிப்புக்கு எதிராக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மகன் தாக்கல் செய்த வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பிரதிவாதிகளது விளக்க அறிக்கை சமர்ப்பிக்கப்படாத நிலையில் வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் பிரதிவாதிகளாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் மற்றும் யாழ். மாவட்ட காணி சுவீகரிப்பு அதிகாரி ஏ.சிவசாமி உள்ளிட்ட மூவரது பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (ஐ)

## நிலைமைகளை நேரில் அவதானிக்கவே வந்தேன்

### பொதுநூலகத்தில் நவிப்பிள்ளை தெரிவிப்பு

யாழ்ப்பாணம் .ஒக. 28
ஐ.நாவின் கொள்கைகள் அடிமட்டம் வரை நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை நேரில் அறியவும், இங்குள்ள நிலைமைகள் தொடர்பில் கணிப்பீடு மேற்கொள்ளவுமே யாழ்ப்பாணத்துக்கு நான் வருகை தந்தேன். இவ்வாறு தெரிவித்தார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை.

யாழ்.பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் வடமாகாண பிரதம செயளாளர் மற்றும் மாகாண அமைச்சின் செயலாளர்கள், வடக்கின் ஐந்து மாவட்டங்களின் அரச அதிபர்களையும் சந்தித்து மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை கலந்துரையாடினார்.

**மக்கள் பிரச்சினைகளை புறந்தள்ளிய அரச அதிகாரிகள்**

இந்தச் சந்திப்பில் வடமாகாண நிலைமைகள் தொடர்பில் பிரதமசெயலாளர் திருமதி ஆர். விஜயலட்சுமி விளக்கினார். தொடர்ந்து ஐந்து மாவட்டங்களினதும் அரச அதிபர்கள் தமது மாவட்ட நிலைமைகளை விளக்கினார்.

இதன்போது குறித்த மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் மட்டுமே அதிகாரிகளால் விளக்கப்பட்டது. மக்களின் தேவைகள், பிரச்சினைகள் தொடர்பில் எந்தக் கருத்துக்களும் முன்வைக்கப்படவில்லை.

நிகழ்வில் இறுதியாக உரையாற்றிய நவநீதம்பிள்ளை இங்கு தகவல்களைத் திரட்டுவதற்கும் இங்குள்ள நிலைமைகள் தொடர்பில் கணிப்பீடு செய்வதற்குமே நான் வந்தேன். அத்துடன் ஐ.நா.வின் கொள்கைகள் கீழ் மட்டம் வரையில் உரியமுறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும் அவதானித்தேன்- என்றார். (ஐ-5)

## ஐ.நாவில் அடுத்த கூட்டத்தொடரில் இலங்கை ஆபத்தை எதிர்கொள்ளும்

### எச்சரிக்கிறது ஐ.தே.க

கொழும்பு.ஒக.28
இலங்கை வந்துள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பாக பாதகமான அறிக்கையை சமர்பித்தால், நடைபெறவுள்ள மனித உரிமை சபைக் கூட்டத் தொடரில் இலங் கைக்கு ஆபத்தான நிலை ஏற்படக்கூடும் என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

> நவிப்பிள்ளை வழங்கும் அறிக்கை இலங்கைக்கு பாதகமாக அமைந்தால், தேவையற்ற பிரதி பலன்களை அரசு எதிர்நோக்க நேரிடும்

இது குறித்து ஐ.தே.கவின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்துவெளியிடுகையில்,

அரச அழைப்பின்பேரில் வந்துள்ள நவிப்பிள்ளைக்கு எதிராக சண்டித்தனத்தை காட்ட இடமளிக்கக்கூடாது. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் அறிக்கைகளின் உண்மையான நிலைமையை அவருக்கு உறுதிப்படுத்த ஆட்சியாளர்கள் அக்கறை காட்டவேண்டும்.

இலங்கையில் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை தங்கியிருக்கும் மனித உரிமைகள் ஆணையாளர் பல்வேறு இடங்களையும் பார்வையிடுவதுடன், அரச மற்றும் அரசியல் பிரதிநிதிகளையும் சந்தித்து நிலைமைகளை ஆராயவுள்ளார்.

இதன் போது அவர் அறியும் தகவல்கள் மற்றும் விடயங்கள் அடங்கிய விரிவானதும் விவரங்களுடனானதுமான அறிக்கையை எதிர்வரும் நவம்பர் மற்றும் அடுத்தவருடத்தின் மார்ச் மாதங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் முன்வைக்க உள்ளார்.

சில நாடுகள் கொண்டு வரும் யோசனைகள் தொடர்பான விவாதத்தின்போது இது பலத்த அழுத்தங்களைக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நவிப்பிள்ளை வழங்கும் அறிக்கை இலங்கைக்கு பாதகமாக அமைந்தால், தேவையற்ற பிரதிபலன்களை அரசு எதிர்நோக்க நேரிடும் என அத்தநாயக்க கூறியுள்ளார். (ஐ)

## தேர்தல் சட்ட விதிமுறைகளை அரச அதிகாரிகளே மீறுகின்றனர்

### பவ்ரல் குற்றச்சாட்டு

கொழும்பு.ஒக 28
தேர்தல் விதிமுறைகளை மீறுவோர் தொடர்பில் அரச அதிகாரிகளுக்கு எதிராக அதிக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் குற்றம்சாட்டியுள்ளது.

இதுகுறித்து பவ்ரல் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், மூன்று மாகாண சபைகளுக்குமாகத் தேர்தலில், அரசியல் நடவடிக்கைகளுக்காக அரச அதிகாரிகளைப் பயன்படுத்திக்கொள்ளுதல் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரை 192 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவற்றில் அதிகமானவை அரச அதிகாரிகளுக்கு எதிராகவே கிடைக்கப்பெற்றுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## கொழும்பில் முக்கியதூதுவர்களுடன் நவிப்பிள்ளை இரகசிய ஆலோசனை

கொழும்பு.ஒக 28
இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள, ஐ.நா மனிதஉரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, கொழும்பிலுள்ள அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட முக்கியமான நாடுகள் சிலவற்றின் தூதுவர்களைச் சந்தித்து இரகசிய ஆலோசனை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது..

சினமன்லேக் விடுதியில் மூடப்பட்ட அறைக்குள் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இதன்போது, மனிதஉரிமைகள் மற்றும் அதிகாரப்பகிர்வு குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாக, தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் சிசன், இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா, அவுஸ்ரேலியத் தூதுவர் றொபின் முடி, பிரெஞ்சுத் தூதுவர் கிறிஸ்ரின் றொபிசொன், ஐரோப்பிய ஒன்றியத்தின் இராஜதந்திர விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரி ரெர்ஹி லெரினென் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அதிகாரப் பகிர்வு தொடர்பான விவகாரங்கள் குறித்து, இந்தியத் தூதுவர் வை.கே சின்ஹாவும், இலங்கையின் மனிதஉரிமைகள் நிலைவரம் குறித்து ஏனைய மேற்கு நாடுகளின் தூதுவர்களும் கருத்துகளை வெளியிட்டதாக தகவல்கள் கூறுகின்றன. (ஐ)

## ஈழ அகதிகளை நாடு கடத்தாதே

### தமிழக அமைப்புக்கள் ஆர்ப்பாட்டம்




ஈழஅகதிகள் மூவரையும் நாடுகடத்தக்கூடாது என வலியுறுத்தியும், குறித்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ள மத்திய மாநில அரசுகளைக் கண்டித்தும் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தை மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, பெண்கள் விடுதலை முன்னணி ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்தின.

புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியின் சென்னைக் கிளைச் செயலர் வ.கார்த்திக்கேயன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் தலைவர் அ.முகுந்தன் கண்டன உரையாற்றினார்.

அவர் தனது கண்டன உரையில்,

ஈழ அகதிகள் உண்ணாநிலைப்போராட்டம் நடத்துவதால், சிறப்பு முகாம் என்ற பெயரில் அடைத்து வதைப்பது,ஏனைய ஈழ அகதிகளுக்கு உளவுத் துறையினர் இழைக்கும் கொடுமைகள் என்பன வெளிவந்துவிடும் என்பதே மத்திய மாநில உளவுத்துறைகள் இவர்கள் மீது ஆத்திரம் கொள்ளக் காரணம்.

பொலிஸாரின் இத்தகைய முறைகேடுகளை எதிர்த்துப் போராடிய காரணத்தினால்தான் நாடு கடத்தல் என்ற சதியை மத்திய மாநில அரசுகள் அரங்கேற்றுகின்றன.

இவர்களை இலங்கை அரசிடம் ஒப்படைப்பது என்பது அவர்களுக்கு மரண தண்டனை விதிப்பதற்கு ஒப்பானது. இது அகதிகளின் உரிமையை மீறுகின்ற கொடும் குற்றம். எனவே நாம் ஈழ அகதிகள் மீதான அடக்குமுறைகளுக்கெதிராகப் போராட வேண்டும் என்றார். (ஐ)

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100%
சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில்
நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம்.
பெறுமதிமிக்க பரிசில்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன.
Rs.10
ஷைலோ ஐஸ்கிறீம்
No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. : 021 492 6003

தேர்தல் பிரசாரங்களுக்காக

## பொது மண்டபங்கள் எவற்றையும் இலவசமாக வழங்க வேண்டாம்

### தேர்தல் ஆணையாளர் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஓக. 28

உள்ளூராட்சி சபைகள் வசமுள்ள கூட்ட மண்டபங்கள், பொதுக் கட்டடங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றை அரசியல் கட்சிகளுக்கு அல்லது சுயேச்சைக் குழுக்களுக்கு வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்த இலவசமாக வழங்கக் கூடாது என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய வலியுறுத்தி கடிதங்கள் அனுப்பியுள்ளார்.



வடக்கு, மத்திய, வடமேல் மாகாணங் களில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்களுக்கே அத்தகைய கடிதங்களை அனுப்பியுள்ளார். (எ-9)

## ஒதுக்கப்பட்ட தரிப்பிடங்களிலிருந்து தனியார் பஸ்கள் நேற்று சேவையில்

யாழ்ப்பாணம், ஓக.28

உள்ளூர் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் நேற்று அந்தந்த தரிப்பிடங்களில் இருந்து வழமையான சேவையில் ஈடுபட்டன.

யாழ்.மத்திய பஸ்தரிப்பிடத்தில், சேவைக்கான தரிப்பிடங்களில் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர் தரப்புடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக நேற்று முன்தினம் தனியார் பஸ்கள் பொது மக்க ளுக்கான சேவையை இடைநிறுத்தி முழுநாள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டன.

இதன் காரணமாக பயணிகள் இலங்கை போக்குவரத்து சபை பஸ்களில் திக்குமுக்காடி பயணங்களை மேற்கொள்ள நேரிட்டதுடன் ஓட்டோக்களை அதிகமாக பயணத்துக்கென பயன்படுத்தினர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலை தனியார் பஸ், சாரதி, நடத்துநர்களின் பணிப் புறக்கணிப்புக்கான கோரிக்கை நிறைவேற்றப்பட்டதால், நேற்றுக் காலை தொடக்கம் அனைத்து பஸ் சேவைகளும் இடம்பெற்றன.

யாழ்.மின்சார நிலைய வீதியில் வழமையாக ஒதுக்கப்பட்ட தரிப்பிடங்களில் இருந்து உள்ளூர் சேவைகளும், யாழ். ஸ்ரான்லி வீதி ஒழுங்கையில் இருந்து வெளி மாவட்டங்களுக்கான சேவைகளும் இடம்பெற்றன. (வ-14)

# தாமாக முன்வந்து வழங்கப்படும் உதவிகள் பெறுமதி வாய்ந்தவை

### போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.28

யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக்கென பல்வேறு உதவிகள் கிடைக்கப் பெற்றாலும், சில நிறுவனங்கள், சமூக சேவையாளர்கள் தாமாகவே முன்வந்து அன்பளிப்புகளை, நன்கொடைகளை வழங்குகின்றனர். இவ்வாறு வழங்கப்படுகின்ற உதவிகள் வைத்தியசாலைக்கு பெறுமதிமிக்கதாகக் கருதப் படுகின்றன என்று யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.



யாழ்.முஸ்லிம் சம்மேளனத்தால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு 6 சக்கர நாற்காலிகள் கையளித்த வேளையில்...

யாழ்.முஸ்லிம் சம்மேளனத்தால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு 6 சக்கர நாற்காலிகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையின் மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்திய பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீபவானந்தராஜா தனது உரையில் தொடர்ந்து தெரிவித்ததாவது:

யாழ்.போதனா வைத்தியசாலையின் தேவைகளுக்கென பல்வேறு உதவிகள் தேவைப்படும் நிலையில் வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு பல்வேறு உதவிகள் கிடைக்கப் பெற்ற தாலும் மனிதாபிமான உதவிகளாக இத்தகைய நிறுவனங்கள் தாமாக முன்வந்து வழங்கு வது பெறுமதியுடையதாகும். இத்த கைய உதவிகள் பல தேவைகளை நிறை வேற்ற ஏதுவாக அமைந்துள்ளன- என்றார்.

மருத்துவம், கல்வி உட்பட மனிதாபிமான உதவிகளை கடந்த 12 வருடங்களாக வழங்கிவரும் யாழ்.முஸ்லிம் சம்மேளனம், லண்டனில் தலைமைக் காரியாலயத்தைக் கொண்டு சேவை யாற்றி வருவதுடன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு முதல் தடவையாக சக்கர நாற்காலிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.முஸ்லிம் சம்மேளனத்தின் தலைவர் எம். நியாஸ், யாழ்.மாநகர சபை உறுப்பினர் ரமீஸ், வைத்திய கலாநிதி நந்தகுமார் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-14)

## தேர்தல் முறைப்பாட்டு அலுவலகம் தென்மராட்சியிலும்

தென்மராட்சி, ஓக.28

தென்மராட்சிப் பிரதேச செய லகத்தில் தேர்தல் முறைப் பாட்டு அலுவலகம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வன்முறைகள் தொடர் பான முறைப்பாடுகளை எழுத்து மூலம் வழங்குமாறும், தொலை பேசியில் முறைப்பாடு தெரிவிப்பவர்கள் தம்மை இனங் காட்டி முறைப்பாடு செய்யலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள் ளது. (ஒ-9)

மாகாணசபைத் தேர்தல் - 2013
யாழ் மாவட்டம்



X

15

அமரர்.வி.தர்மலிங்கம்
(மானிப்பாய்/உடுவில் தொகுதி முன்னாள் பா. உறுப்பினர்)

"தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடியும் வெல்லும்" எனும் இயற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும்
வழி தேடி விதி இந்தச் செய்கை செய்தான்
கருமத்தை மேன்மேலும் காண்போம், இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம் காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்.....
(மகாகவி பாரதியார்)



தர்மலிங்கம் சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்
சி.சிவநாதன் (முகாமை உதவியாளர்)
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சிவஞானசுந்தரம் சிவக்கொழுந்து**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*பிரிவால் துயருறும்*
**ஊழியர் நலன்புரி சங்கம்**
**நகராட்சி மன்றம் பருத்தித்துறை.**

(சி/11640)(5.6)

## மரண அறிவித்தல்



### *பத்ம கிருஷ்ணன் மகேஸ்வரி*

பிள்ளையார் கோயிலடி, அராலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மகிருஷ்ணன் மகேஸ்வரி நேற்று (27.08.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு- பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் இரத்தினம், பத்மகிருஷ்ணனின் அன்பு மனைவியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2013) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அராலி கிழக்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி கிழக்கு, இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(39265)(23-16-14)

சந்தநாகபூசனி அம்பாள் கோயிலடி,
அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை.

தகவல்:
மாணிக்கராசா குடும்பத்தினர்.

## மின்தடை பற்றிய அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 28

கிளிநொச்சி-சுன்னாகம் இடையே அமைக்கப்பட்டுள்ள 132.000 வோல்ட் அதியுயர் அழுத்த மின்மார்க்கத்தின் இணைப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை மதியம் 12.30 தொடக்கம் மாலை 5.30 மணி வரை சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதி, யாழ்.மாநகர சபைப் பகுதி, குருநகர், பாஷையூர், காக்கைதீவு, மீனாட்சிபுரம், கொட்டடி, நாவாந்துறை, யாழ்.பிரதான வீதி, பண்ணைப் பகுதி, கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், அராலி, காரைநகர் பிரதேசம்-

தீவகப் பிரதேசம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி, சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், கரந்தன் பிரதேசம், நீர்வேலிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, கல்வியன்காடு முதல் திருநெல்வேலி வரையான பிரதேசம் ஆகிய பகுதிகளி லேயே மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் தெரிவித்தார். (ஓ)

## மரண அறிவித்தல்

### அருட்பணி V.P. தனேந்திரா அடிகளார்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளி பரியோவான் ஆலயத்தின் உதவி சபைக்குருவாகவும் பரியோவான் கல்லூரியில் ஆசிரியராகவும் கடமையாற்றிய அருட்பணி v.p. தனேந்திரா அடிகளார் கடந்த (26.08.2013) திங்கட்கிழமை கொழும்பில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் பரமசாமி காலஞ்சென்ற றோசாமலர் தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற S.C. இரத்தினசிங்கம்-புஸ்பராணியின் வளர்ப்பு மகனும், சத்தியேந்திரா, பியூட்டன், மைதிலி, சுகிர்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயசூரியா, துவாரகன், அனுசா, கிறிஸ்ரினா, ஆகியோரின் அன்பு மைத்துனரும், பானுசா, யேசுதாசன், செரீனா ஆகியோரின் மாமனும், கனிலீசா, சுசான், அம்புறோஸ், அசான் அங்கிலி, பெரிடில்ஷான், அரோன், டில்ஷான் ஆகியோரின் அன்பு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.08.2013) புதன்கிழமை அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (29.08.2013) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சுண்டுக்குளி பரியோவான் ஆலயத்தில் நல்லடக்க ஆராதனை நடைபெற்று அதனைத் தொடர்ந்து நல்லூர் பரியாக்கோபு ஆலயத்துக்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும்.அங்கு நடைபெறும் நல்லடக்க ஆராதனையின் பின்னர் பரியாக்கோபு ஆலயத்தின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

39255 14.16.17

தகவல்; குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### *இளைதம்பி கணபதிப்பிள்ளை*

*(ஓய்வு பெற்ற கமநல உத்தியோகத்தர்)*

புளியங்கூடலைப்பிறப்பிடமாகவும வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கணபதிப்பிள்ளை நேற்று (27.08.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான இளைய தம்பி -சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், ஜெகன்மோகன்(MPPS கிளை மேற்பார்வையாளர், ஊர்காவற்றுரை), ஜெகஈசன்(ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் ஜெகேந்திரன், ஜெகசீலன், ஜெகாநந்தன்(ஆசிரியர், கொழும்பு), ஆகியோரின் அன்புத் தகப்பனும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, கதிரவேலு, பொன்னுத்துரை, செல்லப்பா மற் றும் சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.08.2013) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல்வடக்கு,ஊர்காவற்றுறை.

தகவல்; குடும்பத்தினர்.

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பொன்னையா**
**தியாகராசா**
(சாலைப் பரிசோதகர்,
C.T.B, கிளிநொச்சி,
பருத்தித்துறை சாலைகள்)

மலர்வு:
11.11.1939

உதிர்வு:
28.08.1998

அன்பு அப்பாவே!
அன்பு மொழிபேசி எமை
வளர்ந்த அன்புத் தெய்வமே
நீங்கள் எங்களை
விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் பதினைந்து
ஆகிவிட்டது-ஆனால்
உங்கள் நினைவுகள் எம்முடன்
இன்றுபோல் இருக்கின்றது
ஆயிரம்தான் உறவுகள்
இருந்தாலும் அப்பா என்று
அழைக்க நீங்கள் இல்லையே
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும்
என்றும் எமக்கு
நீங்கள்தான் அப்பா!

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

இல. 47, பென்ரிகோஸ் லேன்,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



### *சந்திரபாலா ஜெயராணி*

சரவணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, முதலி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரபாலா - ஜெயராணி நேற்று (27.08.2013) செய்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசு - முத்தாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கதிரவேலு- யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கதிரவேலு சந்திரபாலாவின் (அஞ்சலர், தபாலகம் வேலணை) அன்பு மனைவியும் பிரியந்தா, கோவியா ஆகியோரின் அன்புத் தாயும் நகுலசிறி, ரமேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் மகேஸ்வரன் (லண்டன்), மனோகரன், சர்வேஸ்வரன், ஜெயமதி, ஜெயதீஸ்வரன், ஜெயலீலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவபாக்கியம், கிருஷ்ணபாலா, சபீபா (லண்டன்), கமலாதேவி, சிவரூபி, ரமேஸ், சுகந்தினி, மோகனராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொக்குவில் இல்லத்தில் இன்று (28.08.2013) புதன்கிழமை நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் பி.ப. 2.30 மணியளவில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் முதலி கோயிலடி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(39258)(23-16-14)

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு
20.11.1944

உதிர்வு
01.08.2013

**கடந்த 01.08.2013 அன்று இறைவனடி சேர்ந்த**
**எமது அன்புத் தெய்வம்**

### அமரர் சிங்காரம் கனகராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை நாளை (29.08.2013) வியாழக்கிழமை காலை 07.30 மணியளவில் கீரிமலையிலும், 30.08.2013 வெள்ளிக்கிழமை வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அவரின் இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**20 வீட்டுத்திட்டம், பாவிநகர்,**
**வவுனிக்குளம், வவுனியா.**

குடும்பத்தினர்.

(20506) (10.16.14)

# தேர்தல் விதிமுறைகளை மீறிச் செயற்படுகிறது அரசு

## அடைக்கலநாதன் எம்.பி.குற்றச்சாட்டு



வட மாகாண சபை தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது தேர்தல் விதிமுறைகளை மீறி அரசு செயற்பட்டு வருவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட தேர்தல் நடவடிக்கைகளைப் பார்வையிடத் தென்னிலங்கையில் இருந்து சென்ற ஊடகவியலாளர்களை அங்கு உள்ள விருந்தகமொன்றில் சந்தித்து கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:-

உளவுத் துறையினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களைப் பின் தொடர்ந்து தொல்லைகளை ஏற்படுத்தி வருகின்றனர். அமைச்சர் ஒருவர் அமைச்சு வாகனங்களை தாராளமாக பயன்படுத்தி வருகின்றார்.

அண்மையில் அரச சேவையில் தற்காலிகமாக தினச் சம்பளத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்கள் பரப்புரைகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

அரசு முழுப் பலத்தையும் பிரயோகித்து எதிர்க் கட்சிகளின் பரப்புரைகளை தடுத்து வருவதாகவும் இது தொடர்பாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளபோதிலும் அவரின் பணிப்புரைகளை நடைமுறைப்படுத்தாமல் இராணுவம் மூலம் அடக்க முனைகின்றனர் என்றும் அவர் கூறினார்.

> அண்மையில் அரச சேவை யில் தற்காலிகமாக தினச் சம்பளத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்கள் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்கள் எல்லை கடந்து மீன் பிடிப்பது தொடர்பாக கருத்து தெரிவித்த அவர், ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச சட்டங்களின் அடிப்படையில், அவர்கள் மீது நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

ஆனால் இலங்கைக் கடற்படையினர் வன்முறையை பிரயோகித்து தாக்குதல் நடத்தி, தமிழர்களான அவர்களின் உடைமைகளுக்கு சேதம் விளைவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்தார். (த-200)












# வடக்கு முஸ்லிம் மக்களுக்காகவே கூட்டமைப்புடன் இணைந்து போட்டி

## மன்னார் வேட்பாளர் அயூப் கூறுகிறார்

கொழும்புத்துறை. ஓக.28
வடக்கு முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் மற்றும் வாழ்வாதாரப் பின்னடைவுகள் தீர்க்கப்பட வேண்டுமெனில் அந்த மண்ணில் அங்கீகாரம் பெற்ற கட்சியுடன் இணைந்திருப்பதே சிறந்தது என முடிவு செய்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுகிறோம்.

இன ரீதியான நல்லுறவுவை ஏற்படுத்தும் அங்கமாக எமது இணைவு அமைகிறது என்றும் பிரிக்க முடியாத உடன் பிறப்புக்களாக நாம் பயணிப்போம்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுக பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மன்னார் மாவட்ட வேட்பாளர் ஜனாப் முகமட் அஸ்மின் அயூப் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்:

இங்கு மண்டபம் நிறைந்து வழிகின்ற தொண்டர் கூட்டம் பணம் கொடுத்து வாங்கிய கூட்டமல்ல. கட்சி, இன விடுதலை உணர் வில் திரண்ட கூட்டம். பதவி, சலு கைகளுக்காக சோரம் போகாத தலைமையும் வேட்பாளர் களும் தொண்டர்களும் நிறைந்த குறிக்கோளுடன் பயணிக்கும் கூட்டமாகும்.

நீதிமுறைகள் மேம்படுத்தும் விழுமியங்களை அரசியலில் வெளிப்படுத்த வேண்டுமென்று ஆரம்பிக்கப்பட்டதுதான் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம். நீதி சமாதானத்துக்கான முன்னணி. முஸ்லிம் சமூக முன்மாதிரி அமைப்பான எம்மை அடையாளப்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்க முடிவெடுத்தோம்.

இன்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடைபெறு கின்ற பிரச்சினைகளை முஸ் லிம் தலைவர்கள் கண்டு காணாதிருக்கின்ற போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு எதிராகக் குரல் கொடுத்து வருகிறது.

நான் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்ட பின் இரண்டு முறை புலனாய்வாளர்கள் என்று வீட்டுக் கதவைத் தட்டினார்கள்.

தமிழர் பிரசேத்தினதும் இனத்தினதும் விடுதலைக்காக உழைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து வெற்றி பெறச் செய்வது தமிழ் பேசும் அனைத்து மக்களின் கடமையாகும் - என்றார். (த 135)

# பான் கீ மூன் தெரிவித்த விடயங்களை நடைமுறைப்படுத்த தவறிய ஜனாதிபதி

## வவுனியாக் கூட்டத்தில் சம்பந்தன் உரை



வவுனியா. ஓக.28
ஐ.நா.சபை செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஜனாதிபதியிடம் தெரிவித்த விடயங்கள் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:

பரந்த அடிப்படையில் பேச்சு நடைபெற்று இணக்க அரசியல் மூலமாக தமிழர்களுக்கான தீர்வினை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முன் வர வேண்டும். இந்த நான்கு ஆண்டுகளிலும் தமிழ் மக்களின் துன்பங்களை அரசு போக்கவில்லை. போர் முடிந்த பிறகு வீடுகளை இழந்தவர்கள் அனைவருக்கும் வீடுகளை அமைத்துக் கொடுக்குமாறு அரசிடம் வற்புறுத்திக் கூறினோம். ஆனால் இன்னமும் வீடுகள் இல்லாது ஏராளமான மக்கள் அல்லல்படுகின்றனர். இந்தியாவிடம் கோரிக்கை விடுத்ததன் மூலமாக சில வீடுகள் இந்திய வீட்டுத்திட்டம் மூலமாகக் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாகவே இந்த மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலை சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானிக்கின்றது. எமது இறையாண்மை தொடர்பாக பேசுவதற்கு இந்த அரசுக்கு அருகதை கிடையாது. எமது மக்களேதமது இறையாண்மை தொடர்பாகப் பேசுவதற்குரிய அதிகாரத் தைக் கொண்டிருக் கின் றனர். இந்தத் தேர்தலில் குறைந்தது 30 ஆசனங்களை யாவது நாம் கைப்பற்றுவோம்.

வவுனியா மாவட்டத்தில் மிகப் பெரிய ஆதரவு எமக்குக் கிடைத்து வருகின்றது. நியாயமான தேர்தல் நடைபெற வேண்டும். அரசு எமக்கு விரைவில் தீர்வை வழங்க வேண்டும். இனியும் எமது மக்கள் அழிவுகளைச் சந்திக்க முடியாது என்று தெரிவித்தார். (க-402)

# தெய்வங்கள் ஒன்று சேரும்போது நாம் ஒன்று சேர மறுக்கின்றோம்

## அமைச்சர் றெஜினோல்ட் தெரிவிப்பு

யாழ்ப்பாணம். ஓக.28
பௌத்த ஆலயங்களில் பிள்ளையார் உட்பட இந்துக் கடவுள்கள் இருக்கின்றார்கள். தெய்வங்கள் ஒன்று சேரும்போது நாங்கள் ஏன் ஒன்று சேர மறுக்கின்றோம் என்று சிறு ஏற்றுமதிப் பயிர் ஊக்குவிப்பு அமைச்சர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

யாழ். சிறுப்பிட்டியில் இடம் பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

13 வது திருத்தச்சட்டத்தை ஏற்றுக் கொள்ளும் நான் ஆளுங்கட்சியை சேர்ந்த ஒருவனாக இருந்தாலும் கூட 13 வது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு அளிக்கின்றேன். உண்மையில் வெளியில் நின்று உரிமைகளைக் கேட்பதை விட உள்ளுக்குள் நின்று அவர்களுடன் போராடி உரிமையை கேட்டு பெற்றால் தான் வெற்றி கிடைக்கும்.

> 13 வது திருத்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளும் நான் ஆளுங்கட்சியை சேர்ந்த ஒருவனாக இருந்தாலும் கூட 13 வது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு அளிக்கின்றேன்.

நான் யாழ்ப்பாணத்திற்கு நிறையத் தடவைகள் வந்துள்ளேன். கடந்த தடவை வந்த போது இடம்பெற்றிருந்த அபிவிருத்தியை விட இந்த முறை பார்க்கும் போது முன்னேற்றம் காணப்படுகின்றது.

இவற்றுக்கு காரணம் அரசே. எனவே அரசுடன் இணைந்து அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும். அதற்கு அங்கஜன் இராமநாதனை நீங்கள் ஆதரிக்க வேண்டும் என்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், சுற்றாடல் துறை அமைச்சருமாகிய சுசில் பிரேம்ஜயந்த உரையாற்றும்போது.

இப்பிரதேச மக்கள் தமது கல்வியில் காட்டும் ஆர்வமும், அக்கறையும் பாராட்டத்தக்கது.

ஆனால் இவர்களுக்கான வளங்கள் அதிகமாக வழங்கப்பட வேண்டும். இங்குள்ள பாடசாலையின் கட்டுமானங்கள் ஆசிரிய வளங்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இவை அனைத்தையும் நிச்சயமாக அங்கஜன் கவனத்தில் எடுத்து தீர்த்து வைப்பார் என்றார். (எ)

# அதிபர்களும் ஆசிரியர்களும் தமக்கு உள்ள அரசியல் உரிமைகளைப் பயன்படுத்த வேண்டும்

## வேண்டுகோள் விடுக்கிறது தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம். ஓக.28
நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் அதிபர்களும், ஆசிரியர்களும் தமது அரசியல் உரிமைகளைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் இது தொடர்பாக சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

அரசியல் சார்ந்த கருத்துக்களில் தெளிவில்லாதவர்களுக்கு தெளிவை ஏற்படுத்த வேண்டியது அதிபர்கள், ஆசிரியர்களின் தலையாய கடமையாகும். மாணவப் பருவத்திலேயே அரசியல் அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு வழிகாட்டிகளாக இருப்பவர்கள் ஆசிரியர்களே. அரசியல் விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இதில் மிக முக்கியமானவர்கள்.

அரசியலில் ஈடுபடுதல், வாக்களிக்கும் உரிமை, வாக்களிப்பு முறை என்பன தொடர்பாக எமது மக்களிடத்தே நெடுங்காலமாக தெளிவின்மை காணப்படுகின்றது. அதற்கு கடந்த காலங்களில் தேர்தல்களில் மக்களுக்கு முறையான விருப்பங்கள் இருக்கவில்லை என்பது உண்மை. ஆனால் நடைபெறவுள்ள வட மாகாண சபைத்தேர்தலில் அனைத்து வாக்காளர்களும் வாக்களிக்கும் உரிமையைச் சரியாகப் பயன்படுத்துவதற்கு அதிபர்களும், ஆசிரியர்களும் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும்.

ஆரம்ப வருடாந்த சம்பளமாக 74,160 ரூபாவும் அதற்கு மேலே பெறுபவர்களுக்கும் வருடாந்த சம்பள ஏற்றமாக 1,560.00ரூபாவும் அதற்கு மேலே பெறுகின்ற பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கும் அரசியல் உரிமைகள் கிடையாது. அதாவது இலங்கை கல்வி நிர்வாக சேவை அனைத்து தரத்திலும் உள்ளவர் களுக்கும், இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவையின் அனைத்து தரத்திலும் உள்ளவர் களுக்கும் அரசியல் உரிமை கிடையாது. ஆனால் அதிபர் சேவை ஆசிரிய சேவை அனைத்து தரத்திலும் உள்ளவர்களுக்கு அரசியல் உரிமை உண்டு. இதனை அதிபர்கள், ஆசிரியர்கள் சரியாகப் புரிந்துகொண்டு நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் தமது பங்களிப் பினை பூரணமாக பயன்படுத்தி மாணவர்கள், இளைஞர், யுவதிகள், மக்கள் என அனைவருக்கும் முறையான தேர்தல் விதிமுறைகளையும், வாக்களிக்கும் முறைகளையும் தெளிவுபடுத்தி சகலரையும் வாக்களிக்கச் செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க)












## யாழ்.நூலகத்துக்கு வருகை தந்த வேளையில்...



யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் நவிப்பிள்ளை உரையாற்றுகிறார்.


அரச அதிகாரிகள், பிரமுகர்கள் சகிதம் அம்மையார்...



நவிப்பிள்ளைக்கு வடக்கு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நினைவுப் பரிசு வழங்குகிறார்.


நவிப்பிள்ளையை வரவேற்பதற்காக யாழ்.பொதுநூலக வாயிலில் போடப்பட்டிருந்த கோலம், அவரது காலால் தவறுதலாக சிறியளவில் அழிந்துவிட்டது. அதனைக் கவனித்துவிட்ட நவநீதம்பிள்ளை அம்மையார், கோலத்தை அதேபோன்று வடிவமைத்து விட்டார். அம்மையாரின் பெருந்தன்மையை இங்கே காண்கிறீர்கள். (ஒ-4-20)


பதினாறாம் திருவிழாவான கார்த்திகைத் திருவிழாவில் நேற்று நல்லூரான் வெளிவீதியுலா வந்து பக்தர்களுக்கு காட்சி கொடுத்த வேளை....

### விழுமியமாய் அருள்வான்

மாலை உலாக் காண வீதி வழியாக
மாறனென வருவான் மயூரன் நல்லூரான்
வேலேந்தி வருவான்; வினை தீர்க்க வருவான்
வேல்விழியார் இருவருடன் சதிராடி வருவான்
சோலை வளம், வேம்பசையும் சுகம் தரும் தமிழ் மண்ணில்
சொக்கன் மைந்தன் சுந்தரன், சுதந்திரமாய் வருவான்
காலைப் பிடித்துக் கந்தன், கருணையினை நாடி
கண்களிலே கங்கை பாயக் காத்திருப்போர் கோடி
வேலனென வருவான், விமலனென மகிழ்வான்
விஞ்சு புகழ் நல்லையின் விழுமியமாய் அருள்வான்!

தேவி கணேஸ்
இராசாவின் தோட்டம்

### விடுபடும் துயரே

கயிலையங்கிரியுறை நிலவணி விரிசடை
அரன் நுதல் விழி விடு- எரிபொறி
தீயின் விளை சுடர்ஒளி திகழ் பொழி
கருணை எழிலுறு திருவுடை- ஆறுருவாய்
தாயின் வளைக் கரம் அணைமணிமடி
தவழ் ஒரு வடிவொடு உருவெடு- கந்தனாய்
தயிர் களவெடு உறிதொடு அரிதிரு மருகன்
தலைவிழ வேல்விடு தானை - தலைவனாய்
குயில் மொழி மடமகள் குஞ்சரமங்கை
குலவு குறவள்ளி புணர்- இளங்குமரனாய்
அயில்வேல் அணி செய் கருவறையுள்தெரி
தரு அருள்மழை குறைவற சொரி- வேலவனாய்
உயிர் தங்கு உடலது சூழ் பிணி படுதுயர்
விடைபெற ஒரு தரம் வரம்கொடு- முருகா
மயிலது நடமிட புவிமிசை வலம்வரும் சேயனை
ஒரு நொடி வழிபட விடுபடும் துயரே

கந்த- தியாகராசா, கோண்டாவில்.

### புதுமை ஒன்று செய்திடையா புவிமீது

அருவமும் உருவமாகி அவனியில் வடிவேலனாகி
திருவருள் பொழியும் நல்லை- சிவபாலா
திருவிழா உனக்கு என்றால் தெருவையே அடைத்து மாற்றி
பெருவிழா எடுக்க வைக்கும்- புகழ்வேலா
குருவருள் பொழியும் நல்லைக் கருவறையில் தங்கமாகி
வருமடியார் வினையகற்றும்- விறலோனே
கருவினில் உருவாகி வந்து தமிழராய்ப் பிறந்துநொந்து
தெருவெலாம் அலைய வைத்தல்- தருமோசொல்
மறுமுறை பிறக்க வைக்கும் திருவுளம் உனக்கிருந்தால்
தமிழராய்ப் பிறந்து அழிய- வைக்காதே
அருந் தமிழின் தெய்வமென்றால் அதனை உண்மை என்று நம்ப
புதுமை ஒன்று செய்திடையா - புவி மீது

கவிமணி அன்னைதாஸன், ஊரெழு

## 60 ஆயிரம் ரூபா அபராதத்துடன் மணலையும் பறிகொடுத்த இருவர்

யாழ்ப்பாணம், ஓக.27

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற இருவருக்கு 60 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது ஊர்காவற்றுறை நீதி மன்று. மணலும் பறிமுதல் செய் யப்பட்டது.

வேலணை, மண்கும்பா னைச் சேர்ந்த யோகராசா முகுந் தன் மற்றும் வேலணை 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் விஜயரூபன் ஆகியோரே சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றவர்களாவர்.

பொலிஸாரால் கைது செய்யப் பட்ட இருவரும் ஊர்காவற் றுறை நீதிமன் றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திர ராஜா முன்னிலையில் முற்படுத்தப் பட்டனர். இருவரும் தம் மீதான குற் றத்தை ஒப்புக் கொண்டு இருவருக்கும் தலா 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித் தது மன்று. வாகன உரிமைக் கோரிக்கைக்காக இருவருக்குமான வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை சட்டவிரோத மாக மது விற்பனை செய்த நாராந்தனை சூரிய வத்தை யைச் சேர்ந்த ஜோன்பிள்ளை அமலதாஸ்க்கு 10 ஆயிரம் ரூபா அபரா தம் விதிக்கப்பட்டது. (ஒ-4)

## நயினையிலிருந்து நல்லூருக்கு பஜனைப் பாத யாத்திரை

### ஞாயிறு அங்கிருந்து ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், ஓக.28

நல்லூர் முருகன் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திரு விழாவை முன்னிட்டு சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாசத்தின் சார்பில் நடத்தப்படும் நயினை நாகபூஷணி ஆலயத்திலிருந்து நல்லூர் முருகன் ஆலயத்துக்கான 49 ஆவது திருத்தலப் பஜனைப் பாத யாத்திரை எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்ப மாகவுள்ளது.

நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் அன்றைய தினம் அபிஷேக பூசைகள் இடம்பெற்று, வேல் பூசையுடன் வேல் எடுத்துக் கொண்டு திருத்தலப் பஜனையாக பாத யாத்திரை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும்.

இந்தப் பாத யாத்திரை குறிகட்டுவான், புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, பண்ணை, யாழ்ப்பாணம், வில்லூன்றி,கந்தர்மடம் வழியாக எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழா அன்று அதிகாலை நல்லூர் ஆலயத்தை வந்தடையும். (ஒ-14)




### பணப் பெறுமதி வீழ்ச்சி குறித்து கவலை வேண்டாம்

புதுடில்லி, ஒக.28
இந்தியப் பணப்பெறுமதி வீழ்ச்சியடைவது குறித்துக் கவலையடையாது பொறுமை காக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் இந்திய மத்திய நிதி அமைச் சர் ப.சிதம்பரம்
இந்தியப் பணப் பெறுமதி வீழ்ச்சியடைவது குறித்து நாடாளுமன்றத்தில் விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:
"பணப்பெறுமதி சரிவு குறித்து கவலை அடையாமல் பொறுமை காக்க வேண்டும். முதலீட்டை அதிகரிக்க அனைத்து தரப்பிலும், மத்திய அரசு தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது"- என்று தெரிவித்தார். (ற)

# எல்லையில் மீண்டும் மோதல்

## தொடர்கின்றது இந்திய - பாகிஸ்தான் முறுகல்



ஸ்ரீநகர், ஒக.28
இந்திய காஷ்மீர் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் மீண்டும் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தியுள்ளது என்று கூறப்படுகின்றது.
பூஞ்ச் மாவட்ட எல்லைப் பகுதியில் அமைந்துள்ள இந்திய இராணுவ நிலைகள் மீதும், பொதுமக்கள் வசிக்கும் பகுதியிலும் ரொக்கெட் குண்டுகளை வீசி பாகிஸ்தான் இராணுவத்தினர் தாக்குதலில் ஈடுபட்டனர் என்று இந்திய இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இதுகுறித்து இந்திய இராணுவச் செய்தித் தொடர்பாளர் கேர்ணல் ஆர்.கே.பால்டா கருத்துத் தெரிவிக்கும்போது.
"நள்ளிரவு 12.15 மணிக்கு இத்தாக்குதல் நடைபெற்றது. சிறிய ரக தானியங்கி ஏவுகணைகள் மூலம் இந்திய இராணுவ நிலைகளை நோக்கி ரொக்கெட் குண்டுகளை வீசினர்.
இராணுவ நிலைகள் மீது மட்டுமல்லாது பொதுமக்கள் வசிக்கும் பகுதியை நோக்கியும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அதையடுத்து இந்திய இராணுவமும் பதிலடித் தாக்குதல் நடத்தியது. இந்த மோதல்கள் அதிகாலை 5 மணி வரையிலும் நீடித்தன. இதில் உயிரிழப்போ, எவருக்கும் காயமோ ஏற்படவில்லை" என்று அவர் தெரிவித்தார்.
தொடரும் இவ்வாறான தாக்குதல்கள் காரணமாக இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும் தாக்குதல்கள் தொடர்பில் பாகிஸ்தான் தரப்பில் இருந்து எதுவிதக் கருத்துக்களும் வெளியாகவில்லை.(ற)

### அரசியலில் ஈடுபடுவோர் அனைவரும் மோசமில்லை



லண்டன், ஒக.28
அரசியல் கட்சிகளில் உள்ள அனைவருமே மோசமானவர்கள் அல்லர் என்று இந்திய முன்னாள் இராணுவத்தலைமை தளபதி வி.கே.சிங் கூறியுள்ளார்.
அன்னா ஹசாரேயின் இயக்கம் சார்பாக அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள வி.கே.சிங் அங்கு வைத்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் இதுகுறித்துக் கூறியதாவது:
"எதிர்வரும் 2014ஆம் திகதி நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. சார்பில் நான் போட்டியிடப் போவதாக வெளியாகும் தகவல்கள் தவறானவை. தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற நினைப்பு கூட இதுவரை எனக்கு வந்ததில்லை. இன்றுவரை இந்த விழிப்புணர்வு இயக்கத்தில் தான் பணியாற்றி வருகிறேன். மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் எங்களின் முக்கிய நோக்கமாகும்.
மக்களவைத் தேர்தலில் எங்கள் இயக்கம் போட்டியிடப் போவதில்லை. வாக்காளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையில் மட்டும் ஈடுபடுவோம்.
அரசியல் கட்சிகளில் உள்ள அனைவருமே மோசமானவர்கள் அல்லர்" என்றார் வி.கே.சிங்.(ற)

## 10 ஆம் வகுப்பு மட்டுமே கல்வி கற்ற வைத்தியர் சிக்கினார் பொலிஸாரிடம்

சென்னை, ஒக.28
பத்தாம் வகுப்பு மட்டுமே படித்த பெண் மருத்துவர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தமிழ்நாட்டில் நடைபெற்றுள்ளது.
தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியை சேர்ந்தவர்கள் மணி -வனிதா தம்பதியினர். இவர்களுக்கு இரு பெண் குழந்தைகள் உள்ளனர். இந்தநிலையில் வனிதா மீண்டும் கர்ப்பமானார். மருத்துவமனைச் சோதனைகளின்போது இம்முறையும் பெண் குழந்தைதான் பிறக்கவுள்ளது என்று அறிந்த தம்பதியினர், கருக்கலைப்புச் செய்ய முடிவு செய்தனர்.
அதையடுத்து வைத்தியசாலைத் தாதி ஒருவர் மூலம் ரேணுகா என்ற பெண் மருத்துவரிடம் அழைத்துச் செல்லப்பட்டார் வனிதா. வனிதாவைச் பரிசோதித்த ரேணுகா அவருக்கு கருக்கலைப்புச் செய்ய முடியும் என்று தெரிவித்தார். அதையடுத்து கருக்கலைப்பும் நடைபெற்று முடிந்தது.
இந்தநிலையில், கருக்கலைப்புச் செய்த சில நாள்களில் வனிதாவின் உடல்நலம் பெரிதும் பாதிக்கப்பட்டது. அதையடுத்து அவர் அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
அங்குதான் ரேணுகாவின் குட்டு உடைந்தது. வனிதாவை பரிசோதித்த அரச மருத்துவமனை வைத்தியர்கள் கருக்கலைப்புத் தவறாகச் செய்யப்பட்டுள்ளதைக் கண்டறிந்தனர். அதையடுத்து பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் ரேணுகா. அவரிடம் நடத்திய விசாரணைகளில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
தான் 10ஆம் வகுப்பு வரைக்குமே கல்வி கற்றுள்ளதாகவும், ஆனாலும் சிறப்பாக மருத்துவத் தொழிலை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார் அவர். அத்துடன் ரேணுகா இவ்வாறு இருமுறை ஏற்கனவே கைதாகியுள்ளார் என்பதும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.(ற)

## சோனியாவுக்கு உடல்நலக்குறைவு



புதுடில்லி, ஒக.28
திடீர் உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சோனியா காந்தி 5 மணி நேர சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளார்.
மூச்சுவிடுவதில் ஏற்பட்ட சிரமத்தை அடுத்து சோனியா காந்தி எய்ம்ஸ் மருத்துவமனையின் இதய சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.
அதையடுத்து தீவிர மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. சோதனைகளின் முடிவில் அவரது உடல்நிலை சீரான இருப்பதாகத் தெரிவித்த மருத்துவர்கள், வழமையான செயற்பாடுகளை அவர் மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தனர்.
அதையடுத்து 5 மணி நேர மருத்-துவ சோதனைகளின் பின் வீடு திரும்பியுள்ளார் சோனியா.(ற)

Congratulations பாராட்டி வாழ்த்துகின்றோம்



P. உமாசங்கர்
(முது வணிகமாணி - M.Com)

இன்று BMICH இல் நடைபெறும்
களனிப் பல்கலைக்கழக
பட்டமளிப்பு விழாவில்
முது வணிகமாணி (M.Com)
பட்டம் பெறும்
P. உமாசங்கர் அவர்களை
மனதாரப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல. 04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# ஆபத்தை நோக்கி அமெரிக்கா

## வேண்டாம் விபரீதம் என்கின்றது ரஷ்யா

மொஸ்கோ, ஒக.28
சிரியாவுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டால் மிகவும் ஆபத்தான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அமெரிக்காவை எச்சரித்துள்ளது ரஷ்யா.

சிரிய அரசு உள்நாட்டுப் போரில் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றது என்று எழுந்த குற்றச்சாட்டை அடுத்து அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் இராணுவ நடவடிக்கைக்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

இதுகுறித்து ரஷ்ய வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

"சிரியா இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துகின்றது என்ற குற்றச்சாட்டுடன் அந்நாடு மீது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொண்டு வருகின்றது. அதுகுறித்து அதிகாரிகள் தரப்பில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. அவ்வாறான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம் என்று நாம் வலியு றுத்துகின்றோம்.

சிரியாவில் நேரிடக் கூடிய புதிய இராணுவத் தலையீடு மத்திய கிழக்கு நாடுகள் முழுவதும் மற்றும் வட ஆப்பிரிக்க மண்டலத்திலும் மிகவும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தி விடும். சகல விதத்திலும் சிரிய அரசை குற்றம்சாட்ட வேண்டும் என்ற குறிக்கோளுடன் கிளர்ச்சியாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பாசாங்கு வேலைதான் இரசாயன குண்டுகள் வீசப்பட்ட சம்பவம். அதற்கு மலை போல் ஆதாரங்கள் உள்ளன" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கேய் லாவ்ரோ, அமெரிக்க வெளியுறவுத் துறை இணையமைச்சர் ஜோன் கெரியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கடுந்தொனியில் அழுத்தம் கொடுத்துள்ளார்.(ற)

### கைப்பொம்மையாக மாறாது சிரியா - அசாத்



டமாஸ்கஸ், ஒக.28
சிரியா மீது அமெரிக்கா மேற்கொள்ளும் எந்தவொரு இராணுவத் தலையீடும் தோல்வியிலேயே முடியும் என்று எச்சரித்துள்ளார் சிரிய ஜனாதிபதி பசார் அல் அசாத்.

"சிரியாவைத் தமது கைப் பொம்மையாக மாற்றுவதில் மேற்குலக நாடுகள் வெற்றி பெறமாட்டார்கள். சிரியா மீது அமெரிக்கா மேற்கொள்ளும் எந்தவொரு இராணுவத் தலையீடும் தோல்வியிலேயே முடிவடையும். அதற்குரிய விளைவுகளையும் அமெரிக்கா அனுபவிக்கும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.(ற)



சிரியாவில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஐ.நா.குழுவினர்.

"ஆயிரத்து 300 பேர் உயிரிழக்கக் காரண மான இரசாயனத் தாக்குதலை சிரிய இராணுவத்தினர்தான் நடத்தினார்களா என்பதில் சிறியள அளவிலான சந்தேகமே காணப் படுகின்றது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. எனினும் குறித்த தாக்குதலை கிளர்ச்சியாளர்களே நடத்தியுள்ளனர் என்று சிரிய அரசு குற்றஞ் சாட்டியுள்ளது."

## ஐ.நா. குழு மீது சிரியாவில் சூடு

டமாஸ்கஸ், ஒக.28
சிரியாவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இரசாயன ஆயுதத் தாக்குதல் குறித்து ஆய்வு செய்வதற்காகச் சென்ற ஐ.நா. அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மர்ம நபர்கள் சிலர் ஐ.நா. அதிகாரிகள் சென்ற வாகனங்களை நோக்கிச் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அதையடுத்து இரசாயன ஆயுதத் தாக்குதல் தொடர்பாக ஆய்வில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் ஆய்வுகள் நிறுத்தப்பட மாட்டாது என்று ஐ.நா. உறுதியளித்துள்ளது. அதேவேளை கிளர்ச்சியாளர்களே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கக்கூடும் என்று சிரிய அரசு தெரிவித்துள்ளது.(ற)

## பரவுகின்றது கலிபோர்னியா காட்டுத் தீ

சான் பிரான்சிஸ்கோ, ஒக.28
அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத் தில் உள்ள யோஸ்மைட் தேசிய பூங்காவிற்கு அருகே ஏற்பட்ட காட்டுத் தீ வேகமாக பரவி வருகிறது. தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளபோதும், அந்த முயற்சி இதுவரை பயனளிக்கவில்லை. தீயினால் ஏற்பட்டுள்ள சாம்பல், சான் பிரான்சிஸ்கோ நகருக்கு தண்ணீர் வழங்கி வரும் முக்கிய நீர்த்தேக்கத்தின் மீது படர்ந்து வருவதால் தண்ணீர் இணைப்புகள் துண்டிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (ற)

## விண்ணில் இருந்து விண்ணுக்கு பாயும் ஏவுகணை



பீஜிங், ஒக.28
விண்ணில் இருந்து விண்ணில் பாயும் ஏவுகணையை சீன இராணுவம் நேற்றுமுன்தினம் வெற்றிகரமாகச் சோதனை செய்தது.

சீன இராணுவத்துக்குச் சொந்தமான டபிள்யூ.இசட்-10 என்ற அதிநவீன ஆயுத ஹெலிகொப்டர் இந்த ஏவுகணையை வானில் பறந்தபடியே விண்ணில் செலுத்திச் சாதனை படைத்தது. தெற்கு சீனாவில் உள்ள குவாங்டாங் மாகாணத்தில் அந்நாட்டு இராணுவ வீரர்கள் வானில் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டபோது இந்த ஏவுகணையை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தினார்கள்.

அப்போது அவர்கள் சிறப்புத் தாக்குதல், இறகுப் பகுதியில் விமானத்தை இறக்குதல் உள்பட 6 விதமான பயிற்சிகளை மேற்கொண்டனர்.

2012 ஆம் ஆண்டு குவாங்டாங் பகுதியில் உள்ள ஜுகாய் நகரில் நடைபெற்ற 9ஆவது சீன விமானம் மற்றும் விண்வெளிக் கண்காட்சியில் டபிள்யூ. இசட்-10 ரக அதிநவீன ஆயுத ஹெலிகொப்டர் முதன்முதலாக வெளியுலகக்குக் காட்டப்பட்டது. (ற)

## 30 ஆண்டுகளின் பின் மழை

### மகிழ்ச்சியில் மக்கள்

அடகமா, ஒக.28
உலகின் மிகவும் வறண்ட பகுதிகளில் ஒன்றாக கருதப்படும் சிலி நாட்டிலுள்ள அடகாமா பாலைவனத்தில் 30 ஆண்டுகளுக்கு பின்னர் மழை பெய்துள்ளது.

மழையை அடுத்து அந்தப் பகுதியில் மணல் சரிவு ஏற்பட்டு போக்குவரத்துக்கு பாதிக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் வாகனங்கள் சகதியில் சிக்கியுள்ளன. வீதியில் சரிந்துள்ள மணலை நீக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. எனினும் அவற்றை எல்லாம் கணக்கில் எடுக்காத அந்தப் பகுதி மக்கள் நீண்ட ஆண்டுகளுக்கு பிறகு மழை பெய்ததைக் கொண்டாடி மகிழ்கின்றனர். (ற)



மெக்சிகோவின் வெராகுரூஸ் பகுதியில் பெய்த கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 13பேர் உயிரிழந்தனர். அப்பகுதியைத் தாக்கிய பெர்னாண்ட் புயல் காரணமாக பலத்த காற்றுடன் கனமழை பெய்து வருகின்றது. அதனால் நகரம் முழுவதும் வெள்ள நீர் தேங்கியுள்ளது. தாழ்வான பகுதிகளில் உள்ளவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டு வருகின்றனர். (ற)

## அழகிப் போட்டி வேண்டாம்

### இந்தோனேஷியாவில் போர்க்கொடி

பாலி, ஒக.28
இந்தோனேஷியாவில் நடைபெற உள்ள உலக அழகிப் போட்டியைத் தடை செய்ய வேண்டும் என்று போர்க்கொடி தூக்கியுள்ளன அங்குள்ள முஸ்லிம்அமைப்புக்கள். இந்தோனேஷியாவின் பாலித்தீவில் அடுத்த மாதம் உலக அழகிப் போட்டி நடைபெறவுள்ளது. அதில் ஒரு பிரிவில் நீச்சல் உடைக்கான போட்டியும் நடைபெறவுள்ளது.

முஸ்லிகள் அதிகம் வசிக்கும்பகுதியான பாலித்தீவில் இவ்வாறான போட்டி நடத்தப்படுவது இஸ்லாமிய விதிமுறைகளுக்கு முரணானது என்று அங்குள்ள முஸ்லிம் அமைப்புக்கள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

"உலக அழகிப் போட்டி என்பது பெண்களின்உடம்பைக்காண்பிக்கும் போட்டி. இது இஸ்லாமிய விதிக்கு முரணானது. எனவே இந்தப் போட்டிக்கு இந்தோனேசியாவில் தடை விதிக்கவேண்டும்என உலமா சபை அந்நாட்டு அரசிடம் வற்புறுத்தியுள்ளது.

அதேவேளை, எதிர்ப்புகளை அடுத்து இந்த முறை நீச்சல் உடைப் பிரிவுக்கான நிகழ்ச்சி நடக்காது என உலக அழகிப் போட்டியின் ஏற்பாட்டாளர் ஜூலியா மோர்லி லண்டனில் வைத்துக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற இருந்த பொப் இசைப் பாடகி லேடி ககாவின் நிகழ்ச்சியும் இவ்வாறான எதிர்ப்புகளால் இரத்து செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

## அடித்துக் கொன்றார் மனைவி கணவனை

### பெண் தொடர்பே காரணமாம்

டோக்கியோ, ஒக.28
வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்த கணவரை சாப்பாட்டுக் கோப்பையாலேயே அடித்துக் கொன்றுள்ளார் மனைவி. இந்தச் சம்பவம் ஜப்பானில் நடைபெற்றுள்ளது.

ஜப்பானின் டோக்கியோ நகரைச் சேர்ந்தவர் பல்கலைகழக பேராசிரியராக பணிபுரியும் 70 வயதுடைய யாசோ ஹிராஸ். அவரது மனைவி எமிகோ.

அண்மைக்காலமாக ஹிராஸ் வீட்டில் தங்கும் நேரம் குறைந்தது. அவரின் செயற்பாடுகளில் சந்தேகம் கொண்ட எமிகோ அவருக்குத் தெரியாமல் அவரைக் கண்காணித்துள்ளார். அதில் ஹிராஸின் குட்டு உடைந்தது. ஹிராஸ் வேறோரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்ததைக் கண்டுபிடித்தார் எமிகோ.

அதையடுத்து இருவருக்கும் வீட்டில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

வாய்த்தர்க்கம் கடுமையாகி இருவருக்கும் இடையே கைகலப்பானது. ஒரு கட்டத்தில் ஹிராஸைப் பிடித்து வைத்த எமிக்கோ, சாப்பாட்டுக் கோப்பையை எடுத்து "போவியா? போவியா?" என்று வடிவேலு பாணியில் போட்டுத்தாக்கியுள்ளார்.

இயன்றவரை அடிவாங்கிய ஹிராஸ் ஒரு கட்டத்தில் மயங்கி விழுந்தார். உடனடியாக வைத்திசாலைக்குக் கொண்டு சென்றபோதும், சிகிச்சை பயனின்றி உயிரைவிட்டார் ஹிராஸ். (ற)

## "50 ஆண்டுகளுக்கு முந்திய உள்ளாடையே இப்போதும்"


### நான் ரொம்ப எளிமையானவன் என்கிறார் ஊழல் குற்றம் சுமத்தப்பட்ட சீனக் கட்சித் தலைவர்

பீஜிங், ஒக.28
நான் எளிமையானவன். 50 ஆண்டுகளுக்கு முன் வாங்கிய உள்ளாடையைத்தான் நான் இன்னமும் அணிந்து கொண்டிருக்கிறேன். சந்தேகமிருந்தால் காண்பிக்கின்றேன்" என்று நீதிமன்றில் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளார் ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள சீன கம் யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவர் போ சிலாய்.

சீன அரசியலில் மிகவும் புகழ்பெற்ற தலைவரான போசிலாய் மீது ஊழல் மற் றும் அதிகார துஷ்பிரயோக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு உள்ளன. அது குறித்த நீதிமன்ற விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. நேற்று முன்தினம் ஐந்தாவது நாளாக சிலாய் மீது விசாரணை நடைபெற்றது. அப்போது "சிலாய் ஆடம்பர வாழ்க்கை நடத்தியுள்ளார். ஊழல் வழக்கில் அவருக்கு அதிகபட்ச தண்டனை அளிக்க வேண்டும்" என்ற அரசு தரப்பில் கோரப்பட்டது.

அப்போது நீதிமன்றத்தில் இருந்த சிலாய், "நான் எளிமையானவன். ஆடை விடயத்தில் கூட நான் அதிக அக்கறை செலுத்தியதில்லை. 50 ஆண்டுகளுக்கு முன் என் தாய் வாங்கி கொடுத்த உள்ளாடையைத்தான் இன்னமும் அணிந்து கொண்டிருக்கிறேன். சந்தேகமிருந்தால் காண்பிக்கின்றேன். நானா ஆடம்பர வாழ்க்கை நடத்தினேன்?" என்று கேட்டு அரச தரப்பினருக்கு அதிர்ச்சி கொடுத்துள்ளார். (ற)

# பொன்னாலை திருவருள்மிகு ஸ்ரீ



# தேர்த்திருவிழா சிறப்பு

### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



உலகெலாம் காத்து ரட்சிக்கும் ஸ்ரீமந் நாராயணன் பொன்னாலை யிலே இன்று தேரேறி வருகின்றான். காத்தற் கடவுளான ஸ்ரீ மகா விஷ்ணு மூர்த்தியானவர் இந்த ஆல யத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி தம்மை வழிபடும் அடியார்களின் அல்லல் போக்கும் ஸ்ரீ வரதராஜப் பெருமாளாக வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார்.

இந்த ஆதிகேசவ மூர்த்தியான வரதராஜப் பெருமாளுக்கு இன்று தேர்த்திருவிழா. அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தொழிப் பதற்காக எம் பெருமாள் இன்று ரதத்திலே ஆரோ கணிக்கின்றார். இன்று தேர் விழாக்காணும் விஷ்ணு பக்தர்களும் மற்றும் ஆலய அறங்கா வலர்களும், தொண்டர்களும், நல்வாழ்வு பெற்று ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் திருவருட் கடாட் சமும் அடைந்து சிறப்புற அருளாசிகள் நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

பொன்னாலையில் புகழ்பெற்று அடியார் குறை நீக்கும் வள்ளலாக விளங்குகின்ற நாராயணன் தேர்த் திருவிழா சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல விஷ்ணு மூர்த்தியை வாழ்த்தி வணங்கி நல்லை குருமணி யின் பாதம் பணிந்து உளமார வாழ்த்துகின்றோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை ஆதீன குருமுதல்வர்.

### பிரதம குருவின் ஆசிச் செய்தி



சிவபூமி என திருமூலரால் போற்றப்பட்ட ஈழமணித்திரு நாட் டில் ஸ்ரீவிஷ்ணு தலங்கள் மிக அரி தாகவே காணப்பட்டது. ஆனால் தட்சிண கைலாச புராணத்தில் பொன்னாலை எனும் நாமத்துடன் இன்று அழைக் கப்படும் கிராமம் அன்று சுவர்ணாலயபுரி எனும் பட்டினமாக இருந்ததா கவும், கூர்ம அவதாரத்தில் ஸ்ரீதேவி பூதேவி சமேத வரதராஜப் பெருமாள் சேவை சாதித்த வண்ணம் மூலஸ்தானத்தில் காணப்படுகின்றார்.

இவ்வாறு அரியும் சிவனும் ஒன்று என்ற தத்து வார்த்த அடிப்படையில் சிவ பூமியின் விஷ்ணு இல்லை என்ற எண்ணம் இல்லாது இருவரும் ஒன்றே என்ற அடிப்படை யில் காணப்படுகின்றது.

அவ்வாறே ஆணவம் கன்மம் மாயை என்கின்ற மும்மலங்களை அழிக்க காத்தல் கடவுளாகிய மகா விஷ்ணு இன்று ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி தினத்தில் திருத்தேர் பவனி செய்து சேவை சாதிக்கின்றார். அடி யார்கள் வேண்டுவனதந்தருளும் ஸ்ரீ வரதராஜப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பெற ஆசி கூறி அமைகின்றேன்.

கோவிந்த நாம சங்கீர்த்தனம்
பிரதிஷ்டா சிரோன்மணி விஷ்ணு ஆகமரத்னா
ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ க.ச. சோமஸ்கந்த
குருக்கள்
பொன்னாலை தேவஸ்தானம்.

வசந்த மண்டப பூசை முற்பகல் 10.30 மணி
தேரில் ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆரோகணிப்பது நண்பகல் 12 மணி

### பொன்னாலை வாசன் தேரேறி பூலோகம் காவல் செய்கிறார்



பிரதான வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்டு விளங்கும் ஆலயம் பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலயமாகும். தஷ்ண கைலாய புராணம் இவ்வாலய பூர்வீக அற்புத வரலாற்றுச் சிறப்புக்களைக் கூறுகின்றது.

வலைஞனாக பிறந்த இந்திரன் ஒருநாள் இப்போது ஆலயம் அமைந்துள்ள இடத்திற்கு அருகிலுள்ள கடலில் வலை வீசினான். வலையில் ஓர் ஆமை அகப்பட்டது. அதனை அவனால் தனித்துக் கரை சேர்க்க முடியவில்லை. தன் இனத்தின் துணையை நாடி அவர்களை அழைத்தான். வந்தவர்கள் அனைவரும் அங்கே ஓர் அதிசயத்தைக் கண்டனர். அச்சமயத்தில் ஆகாயமார்க்கமாக பொன்னொளி வீசும் விமானம் ஒன்று காணப்பட்டது. அதனைக்கண்டு அதிசயம் நிறைந்தவர்களாக ஆமையின் பக்கத்தில் விரைவாகச் சென்று அடைந்தனர். அச்சமயத்தில் அவ் ஆமை கல்லாயிருத்தலைக் கண்டார்கள். இது என்ன அதிசயம் என்று வியந்தார்கள். பின்பு அவர்கள் அனைவரினதும் மனத்தில் இவ் ஆமை இலக்குமி என்றும் காணப்பட்ட இவ்விமானம் அவருடையது என்றும் ஒரு துணிவு உண்டானது. அத்துணிவை முன்னிட்டு நாராயணனின் பிரதிஷ்டைக்குரிய இந்த இடத்தில் நல்ல நாளில் நல்ல மூகூர்த்தத்தில் உத்தம பிராமணரைக்கொண்டு பிரதிஷ்டை செய்தார்கள். அவர்கள் அப்படி முயற்சித்து விஷ்ணுவை பிரதிஷ்டை செய்த வரதராசப் பெருமாள் என நாமம் சூட்டினர். இத்தகு பெருமையுடைய ஆலயத்தில் இன்று (28.08.2013) தேர்த் திருவிழா நடைபெறுகின்றது. காத்தல் கடவுளாகிய பொன்னாலை வரதராசனை நாமும் பணிந்து நல்ல வண்ணம் வாழ்வோமாக.

மதுரகவி.
காரை.எம்.பி.அருளானந்தன்.

### வாழ்த்துச் செய்தி



கருணைநிறைந்த கண்ணபிரான் திருக்கோயில்களில் பொன்னாலைத் திருக்கோயில் புகழ்மிக்கது. வேண்டுவார் வேண்டுவதைத் தரும் வேய்ங்குழல் வேந்தன் வாழும் இடம். பல நூறு பக்தர்கள் நாடித் தேடி வழிபாடு செய்யும் அற்புதத் திருக்கோயில். இந்தத் திருக்கோயில் தேர்த்திருவிழா, தனிச் சிறப்புமிக்க பெருவிழா. ஆடுவார்கள், பாடுவார்கள் ஆனந்த கிருஷ்ணனை அகத்தில் இருத்தி மகிழும் அடியார் கூடும் பெருவிழா.

இந்தத் திருநாள் சிறக்க வரம் தரும் வரதராஜனைப் பிரார்த்தித்து அனைத்து அடியவர்களும், அபய கரங்களோடு வரும் அருட்தெய்வத்தின் கடாட்சம் பெற்று நிறைவாக வாழப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

ஆறு.திருமுருகன்,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.


★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★ பிரசுர அனுசரணை

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**
இல.06, கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.
T.P: 077 592 5088, 021 222 8680

**கரன் ஸ்ரோர்ஸ்**
பல்பொருள் வாணிபம்
முளாய் றோட், வட்டுக்கோட்டை.

**கணேசா ஹாட்வெயர் ஸ்ரோஸ்**
மின்சார உபகரணங்கள் ஏக விநியோகஸ்தர்
காரைநகர் றோட், மூளாய்.

பொன்னாலை வரதராஜப் பெருமாளே அரகரோகரா
பலசரக்குப் பொருள்கள் மொத்தமாகவும்
சில்லறை யாகவும் பெற்றுக்கொள்ள
**க.கு. கந்தையாபிள்ளை அன்சன்ஸ்**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**இளவரசி சேலைச்சோலை**
பட்டுப்புடைவைகளின் சாம்ராஜ்யம்
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ முருகன் களஞ்சியம்**
புதினப் பத்திரிகை முகவரும்
L.P.GAS விற்பனையாளரும்
மூளாய் றோட், வட்டுக்கோட்டை.

**சாரங்கா** நாணயமாற்று சேவை
Sharanga Money Exchange (Pvt) LTD.
(Permit No: Eod/In/Aut/Mc/164)
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 6972
சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.No: 222 6972,
Fax.No: 222 8869
மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்
இணை நிறுவனம்:
சாரங்கன் நகையகம்
இல.1,
புதிய கட்டடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**
ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

**சிவம் களஞ்சியம்**
**பல்பொருள் வாணிபம்**
மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாய
விலைக்கு பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
வழக்கம்பரை, சுழிபுரம்.
தொ.பே. 021 225 0160, 077 721 7304



சமூக சேவையாளர் வின்சன் டிபோலுக்கு பருத்தித்துறை மக்களால் அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் வின்சன் டிபோல் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும். பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு ஜே.மவுலிஸ் அடிகளார் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினரான யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரால் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (ஒ-8)

உள்ளூராட்சி வாரத்தையொட்டி

# நல்லூர் பிரதேச சபை விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஓக. 28
உள்ளூராட்சி வாரத்தையொட்டி விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது என வெள்ளிக் கிழமை நடைபெற்ற நல்லூர் பிரதேச சபையின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.
பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.
செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள உள்ளூராட்சி வாரத்தையொட்டி பிரதேசசபை தனது விளையாட்டரங்கில் விளையாட்டுப் போட்டிகளைப் பெரிய அளவில் நடத்துவதுடன், சுகாதாரக் கண்காட்சி, சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், வருமானத்தை அதிகரிப்பது தொடர்பான கலந்துரையாடல்கள், டெங்கு ஒழிப்பு, சிரமதானம், நடமாடும் வைத்திய சேவை (ஆயுள்வேதம்), மக்கள் குறைகேள் சேவைகள் என்பனவற்றை நடத்துவதெனவும் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (வ-7)

## காண்பியங்களுடன் உரையரங்கு இன்று பல்கலையில்

யாழ்ப்பாணம், ஓக. 28
இலங்கையின் தலையாய காண்பியப் படைப்பாளிகளில் ஒருவரும் , கொழும்பு காண்பியல் மற்றும் ஆற்றுகைக் கலைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளருமான சந்திரகுப்த தேனுவர அவர்களின் 'கலையென்பது எதிர்ப்பு' எனும் தலைப்பிலான காண்பியங்களுடன் கூடிய உரையரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புதிய கலைப் பீடக் கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது.
கலைவட்டம் மற்றும் நுண்கலைத்துறையின் ஆதரவில் இடம்பெறும் இந்த உரையரங்கில் ஓவியர்கள், சித்திரம் கற்கும் பாடசாலை மாணவர்கள் மற்றும் கலை ஆர்வலர்களைக் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஒ-400)

சாவகச்சேரி வைத்தியசாலை முன்பாக

# ஓட்டோ தரிப்பிடம் அமைக்கக் கோரிக்கை

தென்மராட்சி, ஓக. 28
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை முன்பாக ஓட்டோ தரிப்பிடமொன்றை அமைக்குமாறு நோயாளர்களால் கோரப்பட்டுள்ளது.
வைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருப்போர் மற்றும் வெளிநோயாளர் பிரிவுக்கு வருவோர் வீடு செல்வதற்கு ஓட்டோவில் செல்வதானால் 250 மீற்றருக்கு அப்பால் உள்ள சாவகச்சேரி பஸ் நிலைய வளாகத்தில் உள்ள ஓட்டோ தரிப்பிடத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது.
சாவகச்சேரி நகர சபையால் மீற்றர் பொருத்தப்பட்ட ஓட்டோ சேவை வைத்தியசாலையிலிருந்து நடத்தப்பட்டதாகவும், அந்தச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் ஓட்டோ சேவையை நோயாளர்கள் பெற முடியாதுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் வைத்தியசாலைக்கு முன்பாக ஓட்டோ தரிப்பிடம் அமைக்குமாறு கோரியுள்ளனர்.
இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;
வைத்தியசாலை வளாகத்தினுள் ஓட்டோக்கள் தரிப்பதற்கு இடவசதி இல்லை எனவும், வைத்தியசாலை முன்பாக ஏ-9 வீதி உள்ளதால் அந்தப் பகுதியில் ஓட்டோவை தற்காலிகமாக நிறுத்தி நோயாளர்களுக்கு சேவைகளை வழங்க முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (வ)

# வரணி வைத்தியசாலையில் சிகிச்சை பெற சிக்கல் இல்லை

வரணி,ஓக. 28
வரணி பிரதேச வைத்தியசாலையில் தற்போது 24 மணி நேரமும் நோயாளிகள் சிகிச்சை பெறும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
தற்போது சேவையில் உள்ள வைத்தியர் இரவு நேரமும் விடுதியில் தங்கியிருந்து 24 மணி நேரமும் சேவை செய்யும் வகையில் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.
அதேவேளை வைத்தியசாலை அம்புலன்ஸ் சேவையும் 24 மணி நேரமும் இடம்பெறும் வகையில் இரண்டு சாரதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பொது மக்கள் இச் சேவையை எந்நேரமும் பெற்றுக் கொள்ள முடியும்.
பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை தினங்களில் பூச்சி மருந்து வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ-122)

## நாயன்மார்கட்டு சிறுவர் கிராமத்தில் கணினிப் பயிற்சி

யாழ்.நாயன்மார்கட்டில் நிறுவப்பட்டுள்ள எஸ்.ஓ.எஸ்.அமைப்பின் சிறுவர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள கணினிப் பயிற்சி நிலையத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த மாணவர்களும் பயன்பெற வசதி செய்து கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
சிறுவர் கிராம சூழலில் வசிக்கும் வசதி குறைந்த மாணவர்களின் கணினிக் கல்வி மேம்பாட்டை கருத்தில் கொண்டு அவர்களையும் தமது கணினிப் பயிற்சி நிலையத்தில் இணைத்துக்கொள்ள திட்டமிட்டுள்ளதாக சிறுவர் கிராம முகாமையாளர் எஸ்.அருச்சுனன் தெரிவித்துள்ளார். ஒ-135)


# டெங்கு கட்டுப்பாட்டுக் குழு அமைக்க முடிவு




கரவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட பிரிவில் டெங்கு கட்டுப்பாட்டு குழுவொன்றை அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.
இந்த முடிவு நேற்று செவ்வாய்க்கிழமை கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் வியாகேசு தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.
இதில் பிரதேச சபை, பிரதேச செயலகம், சுகாதாரப் பணிமனை, கிராம சேவகர்கள், பொதுமக்கள் போன்றோரை உள்ளடக்கியே இந்தக் குழுவை அமைக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
சந்தைகளில் மருந்தடிக்கப்பட்ட பழங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.
இது தொடர்பில் விழிப்புணர்வு அளிக்கப்பட்டு வீட்டில் பழவகைகளை தயார் செய்வதற்கு ஊக்கம் வழங்குவதோடு, பழ வியாபாரிகளுக்கும் கூட்டம் ஒன்றை நடத்தி மருந்தடிக்கப்பட்ட பழங்கள் விற்பதைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (வ-422)

# ரயில் பாதை புனரமைப்பில் மூடப்படும் பழைமையான மதகு

## இத்தாவில் மக்கள் எதிர்ப்பு



பளை,ஓக. 28
பளை, இத்தாவில் சந்திக்கு அருகில் ரயில் பாதை அமைக்கப்பட்ட காலம் தொடக்கம் காணப்பட்ட மதகு, தற்போதைய ரயில் பாதை புனரமைப்பின் போது மூடப்படுவது குறித்து அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.
மழைக் காலங்களில் இத்தாவில் பகுதிகளில் ஏற்படும் மழை வெள்ளம் குறித்த மதகு ஊடாக வேம்பொடுகேணி, நவுணவெளி, கச்சார்வெளி தொடர் குளங்களுக்கு வாய்க்கால் வழியாகச் செல்வது வழமை.
ஏ-9 வீதி புனரமைப்பின் போது மழை வெள்ளம் வழிந்தோட மதகு அமைக்கப்பட்டுள்ள போதிலும் ரயில் பாதை புனரமைப்பின் போது ஏற்கனவே காணப்பட்ட மதகை மூடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் இத்தாவில் பகுதியில் வெள்ளம் தேங்காமல் இருப்பதற்கு வசதியாக ரயில் பாதையை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு இத்தாவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் உரிய அதிகாரிகளைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# பல்கலை மாணவர் 26 பேருக்கு விரைவில் மடிக்கணினிகள்

## இந்து மாமன்றம் வழங்கும்

யாழ்ப்பாணம், ஓக.28
அகில இலங்கை இந்து மாமன்றத்தால் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் 26 பேருக்கு மிக விரைவில் மடிக் கணினிகள் வழங்கப்படவுள்ளன என்று மன்றத்தின் செயலாளர் கந்தையா நீலகண்டன் தெரிவித்தார்.
யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த போர்ச் சூழலால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் ஏழை மாணவர்களின் நவீன கற்றல் தேவைகளுக்கு ஏற்ப அகில இலங்கை இந்து மாமன்றத்தால் புலம் பெயர் வாழ் நன்கொடையாளர்களால் தற்போது மடிக்கணினிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 68 மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

> இதுவரை 68 மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அறப்பணிச் சேவையாக போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக மாணவர்கள் தற்போதைய நவீன முறையிலான கற்றல் தேவைக்கு இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் நன்மையடைந்துவருகிறார்கள். (வ-14)

# கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் உறுப்பினரின் வாழ்வாதாரத்துக்கு உதவவும்

### கால்நடை உற்பத்தித் திணைக்கள யாழ்.மாவட்ட பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

அச்சுவேலி, ஓக.28
"கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் காலத்துக்கு ஏற்ற வகையில் தமது வேலைத் திட்டங்களை உருவாக்கி சங்க உறுப்பினர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உறுதுணையாக இருந்து உதவ வேண்டும். இதற்கு கால்நடை வைத்தியர்கள் ஏற்புடைய வகையில் ஒத்துழைப்பு வழங்கி உதவ வேண்டும். முரண்பாடுகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட பிரதிப் பணிப்பாளர் திருமதி.வக்சலா அமிர்தலிங்கம்.
திருநெல்வேலியில் உள்ள கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தில் பிரதேச கால்நடை வைத்தியர்கள் மற்றும் யாழ்.மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் நடைபெற்றது.
கலந்துரையாடலுக்குத் தலைமை தாங்கி திணைக்கள பிரதிப் பணிப்பாளர் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் 1989 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மிகநெருக்கடியான காலகட்டத்தில் அரும் பணியாற்றின. அவற்றின் பணி முன்னெடுப்பில் தற்போது தளம்பல் நிலை ஏற்பட்டுள்ளது. கால்நடைகளுக்கான உணவு விற்பனை தனியார் துறைக்குக் கைமாறிவிட்டது. இது கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களை தளம்பல் நிலைக்கு உள்ளாக்கி உள்ளது.
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், பண்ணையாளர்கள் மற்றும் கால்நடை வளர்ப்போரின் நலனை கருத்தில் கொண்டு பிரதேச கால்நடை வைத்தியர்கள் செயற்பட வேண்டும். அவர்களின் வளர்ச்சிக்கு ஏற்புடைய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.
கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குத் தேவையான கொள்வனவை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் மேற்கொள்வது வரவேற்கத்தக்கது. இந்த விடயத்தில் தனியார் துறையினரை நாடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.-என்றார். (வ-11)

# சிகரெட் விற்றவருக்கு ரூ.45,000 அபராதம்

அக்கரைப்பற்று,ஓக.28
அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் சட்ட விரோத சிகரெட்டுக்களை விற்பனை செய்து வந்ததாக கூறப்படும் வர்த்தகருக்கு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிவான் ரீ.சரவணராஜா திங்கட்கிழமை ரூபா 45.000 ரூபா அபரா தம் விதித்துத் தீர்ப்பளித்தார்.



கடந்த 20 ஆம் திகதி பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றுவளைப்பின் போதே இந்த வர்த்தகர் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுதலையாகி இருந்தார்.
ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழக வீதியைச் சேர்ந்த குறித்த வர்த்தகர் 11 பைக்கற் சட்ட விரோத சிகரெட்டுக்கள் வைத்திருந்துள்ளார்.
இந்த நபர் திங்கட்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகியபோதே நீதிவான் 45.000 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளார். (ச)

# சூடைக்குடாவில் மீள்குடியமர்வு



**"சூடைக்குடா கிராமத்தில் விநாயகர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் தமது காணிகளை துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டனர்."**

திருகோணமலை.ஓக.28
திருகோணமலை, மூதூர் கிழக்கு சூடைக்குடா கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்த 56 குடும்பங்கள் திங்கட்கிழமை மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.
இந்தப் பிரதேச மக்கள் தமது சொந்தக் காணிகளை துப்புரவு செய்வதற்கான அங்கீகாரத்தை மாவட்ட செயலர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வா வழங்கியுள்ளார்.
தமது சொந்தக் கிராமத்திற்குச் செல்வதற்காக கிளிவெட்டி நலன்புரி நிலையத்தில் தங்கி யிருந்தவர்கள் இராணுவத் தினரால் பஸ்கள் மூலம் அழைத்து வரப்பட்டனர்.
கூனித்தீவில் இருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ள சூடைக்குடா கிராமத்துக்குக் கால் நடையாகச் சென்ற மக்கள் அங்குள்ள விநாயகர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டபின்னர் தமது காணிகளைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டனர். (ச)

# குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தித்தர வேண்டும்

### புன்னக்குளம் மக்கள் கோரிக்கை

மட்டக்களப்பு.ஓக.28
மட்டக்களப்பு, போரதீவுப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புன்னக்குளம், பிலாலிவேம்பு, பொறுகாமம் போன்ற கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்காக நிர்மாணிக்கப்பட்ட குடிதண்ணீர்த் தாங்கியும் அதற்குரிய கட்டடமும் தற்போது பாழடைந்துள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.
இதனால் பொதுமக்களுக்குரிய குடிதண்ணீர் விநியோகத் திட்டமும் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது.
தற்போது வறட்சி நிலவி வருகின்ற நிலையில் குடிதண்ணீர் திட்டத்துக்குரிய வசதியை உடன் சீர்செய்து தருவதற்கு போரதீவுப்பற்று பிரதேச சபை முன்வர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# தற்காப்பு அங்கிகளை எமக்கு வழங்குங்கள்

### மட்டக்களப்பு மீனவர் வேண்டுகோள்




மட்டக்களப்பு,ஓக.28
மட்டக்களப்பு மாவட்டத்தில் கடல் மற்றும் வாவியில் மீன் பிடித்தொழிலில் ஈடுபடுகின்ற மீனவர்கள் தங்களுக்கு தற்காப்பு அங்கிகளை வழங்குமாறு அந்த மாவட்ட கடற்றொழில் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 24.000 குடும்பங்கள் கடல் மற்றும் வாவியில் மீன் பிடித்தொழில் மேற்கொள்வதை தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளன.
அடுத்த வருடத்திலிருந்து தற்காப்பு அங்கிகள் இன்றி மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட முடியாது என்று கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ள நிலையில், தங்களுக்கு இதுவரையில் தற்காப்பு அங்கிகள் வழங்கப்பட வில்லை என்ற மீனவர்கள் தெரிவித்தனர்.
சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் 100 தற்காப்பு அங்கிகள் மட்டக்களப்பு மாவட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்டன. அதன் பின்னர் தற்காப்பு அங்கிகள் வழங்கப்படவில்லை. தற்போது குறைந்தது 1000 தற்காப்பு அங்கிகள் தேவைப்படுகின்றன என்று மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டொமின்கோ ஜோர்ஜ் தெரிவித்தார். (ச)



மட்டக்களப்பு,பாலையடிவேட்டை,புதுமுன்மாதிரிச்சோலை ஆகிய கிராமங்களுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் சென்று அங்கு கிராம மக்களை சந்தித்து அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

# கல்லடி வாவியில் அதிக இறால்கள்



மட்டக்களப்பு.ஓக.28
மட்டக்களப்பு, கல்லடி வாவியில் கடந்த சில நாள்களாக அதிகளவான இறால்கள் பிடிபடுகின்றன. வாவியில் இறால்கள் பிடிப்பதற்காக அதிகளவான படகுகள் ஈடுபட்டு வருகின்றன.
மட்டக்களப்பு மீனவர்கள் கல்லடி புதிய மற்றும் பழைய பாலங்களை அண்டிய வாவிகளிலேயே இறால் பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான இறால்கள் பிடிக்கப்படுவதால் 750 ரூபாவுக்கு விற்பனையாகி வந்த ஒரு கிலோ இறால், தற்போது 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்று கடற்றொழில் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஏ.ஜோர்ஜ் தெரிவித்தார்.
இங்கு பிடிக்கப்படும் இறால்கள் உள்ளூரில் விற்பனை செய்யப்படுவதுடன், வெளிப் பிரதேசங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# மட்டக்களப்பு மாநகரசபை வரிப்பகுதி கணினி மயம்

மட்டக்களப்பு,ஓக.28
மட்டக்களப்பு மாநகரசபையின் வரிப்பகுதி கணினி மயமாக்கப்பட்டுள்ளது.
ஆசிய பவுண்டேசனின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட மாநகர சபையின் கணினி மயமாக்கப்பட்ட வரிப்பகுதியின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்வில், கொரிய நாட்டின் அபிவிருத்திக்கான அமைப்பின் உதவிப் பணிப்பாளர் ஜின்சியோல் ஜோ பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார். (ச)



# மட்டு நகர் அபிவிருத்தி பணி பூர்த்தியடையும் நிலையில்



**மட்டக்களப்பு நகர நுழைவாயிலில் நவீன முறையில் காந்தி பூங்கா, முதியோர் பூங்கா என்பன அமைக்கப்பட்டுள்ளன.**

மட்டக்களப்பு.ஓக.28
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் வழிகாட்டலில் மட்டக்களப்பு நகரம் 102 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.
இந்த அபிவிருத்திப் பணிகள் இன்னும் இரு வாரங்களுக்குள் பூர்த்தியடைந்து விடும் என்று மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன் தெரிவித்தார்.
மட்டக்களப்பு நகர நுழைவாயிலில் நவீன முறையில் காந்தி பூங்கா, முதியோர் பூங்கா என்பன அமைக்கப்பட்டுள்ளன.
பூர்த்தியடையும் இந்த நகர அபிவிருத்தித் திட்டத்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அடுத்தமாதம் நடுப்பகுதியில் திறந்து வைக்கவுள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தொலைத்தொடர்பு கோபுர நிர்மாணம் இடைநிறுத்தம்

பொத்துவில்.ஓக.28
எயார் ரெல் நிறுவனத்தினரின் பொத்துவில் பிரதேச சேவை விஸ்தரிப்பு மற்றும் கோபுர நிர்மாணிப்பு பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.
பொத்துவில் பிரதேசத்தில் தனது சேவையை விஸ்தரிப்புச் செய்வதற்கு மக்கள் செறிந்து வாழும் பழைய காதியர் வீதியில் தனியார் ஒருவருக்கு சொந்தமான காணியில் தொலைத்தொடர்பு கோபுர நிர்மாண ஆரம்பக் கட்டவேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன்போது குறித்த தொலைத் தொடர்பு கோபுரத்தினால் ஏற்படும் பாதிப்புக்களை உணர்ந்த சில கல்வியியலாளர்கள் தொலைத்தொடர்புக் கோபுரத்தை மக்கள் குடியிருப்புக்கள் அற்ற திறந்த வெளிப் பிரதேசத்துக்கு மாற்றுமாறு கோரியதையடுத்து கோபுர நிர்மாணிப்பு பணிகள் இடை நிறுத்தப்பட்டன. (ச-10)

# நெல் அறுவடை இயந்திரம் தீக்கிரை

அம்பாறை.ஓக.28
அம்பாறை மாவட்டத்தின் தமண பொலிஸ் பிரிவில் நெல் அறுவடை இயந்திரமொன்று இனந்தெரியாதோரினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது என்று தமண பொலிஸில் இயந்திரத்தின் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.
சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதியான நெல் அறுவடை இயந்திரமே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது என்று நெல் அறுவடை இயந்திரத்தின் உரிமையாளர் தெரிவித்தார்.
தமண பிரதேசத்தில் நெல் அறுவடையை முடித்துவிட்டு அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நெல் அறுவடை இயந்திரமே தீக்கிரையாக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச)

# வடக்கு மாகாணசபை தேர்தல்; ஜனாதிபதி 5 கூட்டத்தில் உரை

கொழும்பு.ஓக.28
வட மாகாண சபைத் தேர்தலையொட்டி வடக்கில் 5 தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்கவுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியின் செயலர் சுசில் பிரேம் ஜெயந்த தெரிவித்தார்.



இந்தக் கூட்டங்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9 ஆம்.14 ஆம். 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.
அந்தத் தினங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கில் 5 கூட்டங்களில் உரையாற்றுவார் என்று அவர் கூறினார்.
இந்தக் கூட்டங்கள் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெறும்.
ஜனாதிபதி செப்டெம்பர் 9 ஆம் திகதி வவுனியா மாவட்ட கூட்டத்திலும் 4 ஆம் திகதி மன்னார், கிளிநொச்சி புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களிலும் நடைபெறும் மூன்று கூட்டங்களிலும், 15 ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா ஸ்ரேடியத்தில் நடைபெறும் கூட்டத்திலும் உரையாற்றுவார் என்று அவர் தெரிவித்தார். (ச)

# ஆளும்கட்சி தேர்தல் பிரசாரத்தில் இலக்கத் தகடற்ற வாகனங்கள்

கொழும்பு.ஓக.28
இலக்கத் தகடற்ற வாகனங்கள் தேர்தல் பிரசாரத்துக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெசனல் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.
இந்த வாகனங்கள் வடமேல் மற்றும் மத்திய மாகாணசபைத் தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன.
ஆளும் கட்சியின் வேட்பாளர்களும், அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இவ்வாறு தேர்தல் விதிகளை மீறிச் செயற்படுகின்றனர்.
பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்தி தேர்தல் பிரச்சாரப் பணிகளில் ஈடுபடுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது.
ஆளும் கட்சி வேட்பாளர்கள் அரச கட்டடங்களில் கட்சிக் அலுவலகங்களை அமைத்துள்ளனர் என்று டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெசனல் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. (ச)

> **பொதுச் சொத்துக்களைப் பயன் படுத்தி தேர்தல் பிரச்சாரப் பணிகளில் ஈடுபடுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது.**

# பால்மாக்களில் டி.சி.டி. இல்லை

## உறுதிப்படுத்திவிட்டது மருத்துவ ஆராய்ச்சி நிலையம் என்கிறது சுகாதாரஅமைச்சு




கொழும்பு.ஓக.28
அங்கர், மெலிபன் , லக்டோஜன் உள்ளடங்கலான இறக்குமதி செய்யப்படும் 12 வகை பால்மா மாதிரிகளில் டி. சி. டி. இரசாயனம் இல்லை என இரசாயனப் பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கப் பட்டுள் ளது என்று சுகாதார அமைச்சு திங்கட்கிழமை அறிவித்துள்ளது.
பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிலையத்துக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்ட 12 பால்மா மாதி ரிகளில் பொட்யூலியம் பக்டீரியா இல்லை.
அதனால் அவற்றை துறைமுகத்தில் இருந்து சந்தையில் விட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
இறக்குமதி செய்யப்படும் பால் மா மற்றும் பாலுற்பத்திகள் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினையையடுத்து 200இற்கும் அதிகமான பால்மா மற்றும் பாலுற்பத்தி மாதிரிகள் ஆய்வுக்காக கைத்தொழில் தொழில் நுட்ப நிறுவனத்துக்கும் ஐ. ரி. ஐ. மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிலையத்துக்கும் அனுப்பப்பட்டன.
இந்த விவகாரம் தொடர்பில் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் ஆலோசனைக்கமைய இது தொடர்பான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.
அதற்கமைய மெலிபன் பால் உற்பத்தி நிறுவனம், பொன்டெரா நிறுவனம், லயிட் சேர்ப் தனியார் நிறுவனம் என்பவற்றினூடாக தருவிக்கப்படும் 12 பாலுற்பத்தி மாதிரிகளில் டி. சி. டி. இல்லை என்று உறுதி செய்யப்பட்டது.
மைலோ உற்பத்திகளுக்காக உள்நாட்டுபாலுடன் வீ2 புரோட்டீன் உள்ளடங்கிய பொருள்களை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
டி. சி. டி. இரசாயனம் தொடர்பான விவகாரத்தினால் இறக்குமதி செய்யப்படும் பல பால்மா வகைகள் மற்றும் பாலுற்பத்திகளுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தன. இதனால் அதிகமான பால்மா வகைகள், பாலுற்பத்திகள் என்பவற்றை துறைமுகத்தில் இருந்து சந்தைக்கு விடுவதும் தடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் ஒரு மாத காலத்துக்கு மேலாக நீடித்த பால்மா தொடர்பான பிரச்சினைக்கு முடிவு எட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# திஹாரி எரிபொருள் நிலையத்தில் ரூ.22 லட்சம் கொள்ளை



கொழும்பு.ஓக.28
கம்பஹா, திஹாரியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து திங்கட்கிழமை 22 லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் திங்கட்கிழமை பிற்பகல் 1.15 மணிக்கு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க சிறிவர்தன தெரிவித்தார்.
காரொன்றில் வந்த இனந்தெரியாத ஐவரடங்கிய கொள்ளைச் கும்பலே ஆயுதங்களைக் காட்டி அங்கிருந்த ஊழியர்களை பயமுறுத்தி 22 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளது. (ச)


# மும்பைக்கு தங்கம் கடத்த முயன்ற ஒருவர் மாட்டினார்



கொழும்பு.ஓக.28
கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.
திங்கட்கிழமை இரவு 11.45 மணிக்கு கைது செய்யப்பட்ட குறித்த நபரிடமிருந்து 600 கிராம் எடையுடைய தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன என்று அவர்கள் குறிப்பிட்டனர்.
நீர்கொழும்பைச் சேர்ந்த இந்த நபர் இந்தியாவின் மும்பை நோக்கி பயணிக்கவிருந்த நிலையிலே கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

# பஸ் நிலைய நேரக் கணிப்பாளர் கடத்தப்பட்டு விடுதலை

கொழும்பு.ஓக.28
குருணாகல் பிரதான பஸ் நிலைய நேரக் கண்காணிப்பாளர் எஸ்.டபிள்யு.ஜயவர்த்தன கடந்த 22 ஆம் திகதி இரவு வெள்ளைவானில் வந்தவர்களால் கடத்தப்பட்டு கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் புஞ்சிபொரளை பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டதாக குருணாகல் பொலிஸார் தெரிவித்தனர்.
தற்போது குருணாகல் பிரதான வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றவரும் அவரின் இரு கைகளும் முறிவடைந்து, உட்காயங்கள் பல காணப்படுவதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக ஜயவர்த்தன தெரிவித்ததாவது:-
சம்பவம் நடைபெற்ற தினம் இரவு பணி முடிவடைந்து வீடு நோக்கிச் சென்றபோது வெள்ளை வான் ஒன்று பாதையில் என்னைக் குறுக்காக மறித்தது. அதில் எட்டுப் போ வரை இருந்தனர். என்னைப் பல வந்தமாக வாகனத்தில் ஏற்றி கைகளைக் கட்டி விலங்கிட்டனர். நீ என்ன சண்டியனா? கப்பம் வாங்குகிறாய் அல்லவா எனக் கேட்டுத் தாக்கினர்.
நீ பாதாளக் கும்பலைச் சேரந்தவனா என்று கேட்டுக் கொண்டே பொல்லுகளால் கடுமையாக தாக்கிய அவர்கள் கால்களாலும் உதைத்தனர். மூன்று மணித்தியாலங்கள் வரை வாகனத்தில் தாக்கியபடி சென்ற அவர்கள் ஓரிடத்தில் வாகனத்தை நிறுத்தி கீழே இறக்கி மீண்டும் தாக்கினர்.
நான் அவரகளிடம் நீங்கள் யாரெனக் கேட்டேன். நாம் பாதாளக் கோஷ்டி எனத் தெரிவித்த அவர்கள் இருபது நிமிடங்கள் வரை பயணித்த பின் என்னை வானில் இருந்து கீழே தள்ளிச் சென்றனர். அது புஞ்சி பொரளை எனத் தெரிந்து கொண்டேன்.- என்றார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குருணாகல் பொலிஸார் தெரிவித்தனர். (ச-200)



உலக வங்கிக் கடன் உதவித்திட்டத்தின் மூலம் கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக 500 மில்லியன் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள இயந்திரங்கள் இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டன.

# அடைவு வைப்பதில் இலங்கையரே புலிகள்

## 'ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ்' தெரிவிப்பு

கொழும்பு.ஓக.28
'ஸ்டான்டர்ட் அன்ட் புவர்ஸ்' என்ற நிறுவனத்தின் புதிய தரப்படுத்தலுக்கு அமைய தங்க ஆபரணங்களை அடைவு வைக்கும் நாடுகள் வரிசையில் இலங்கை உலக சாதனை படைத்துள்ளது.
இலங்கையில் வங்கிகளில் இருந்து பெறப்படும் கடன்களில் 15 வீதமான கடன்கள் தங்க ஆபரணங்களை அடைவு வைத்து பெறப்படுவதாக அந்த நிறுவ னம் சுட்டிக்காட்டியுள்ளது.
இந்தியாவில் இந்த நிலைமை 4.5 வீதமாக இருக்கின்றது. இந்தியாவுடன் ஒப்பிடும்போது, இலங்கையின் இந்த வீதம் மூன்று மடங்கு அதிகமாகும்.



இந்த நிலைமை காரணமாக உலகில் தங்கத்தின் விலை வீழ்ச்சியடையும் சந்தர்ப்பங்களில் இலங்கை வங்கிகள் கொடுத்த கடனை திரும்பப் பெறுவதில் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றன.
அதேவேளை இலங்கையில் வாழ்க்கை செலவு அதிகரித்துள்ளதால், மக்கள் தமது தங்க ஆபரணங்களை அதிகளவில் வங்கிகள் மற்றும் தனி யார் நிறுவனங்களில் அடைவு வைத்து வாழ்க்கை நடத்தி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-சி)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நவிப்பிள்ளையின் கருத்தும் கண்டனமும் அரசின் காதுகளில் ஏறுமா, என்ன?

இலங்கை வந்துள்ள, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று அரசாங்கத்திடம் வலியுறுத்தி இருக்கிறார்.

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்து உரையாடிய போதே அவர், பயங்கரவாதச் சட்டம் போர் முடிவுற்று நான்கு வருடங்கள் கடந்து சென்ற நிலையிலும் அது நீக்கப்படாதிருப்பது குறித்துச் சுட்டிக்காட்டி, அதனை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இடித்து உரைத்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் எந்த மட்டத்துக்கு, அளவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மற்றும் மனித உரிமைகள் தொடர்பிலான நிலைவரங்கள் குறித்தும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், நீதி அமைச்சரிடம் துருவித் துருவிக் கேட்டறிந்தார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பயங்கரவாதத் தடைச்சட்டம் வெகுவிரைவில் நீக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்திருந்தபோதிலும், அதனை அவரால் உரத்த தொனியில் உறுதியாகக் கூறமுடியவில்லை எனலாம். இப்போதைய சூழ்நிலையில் அந்தச் சட்டத்தை நீக்குவதற்கு அரசு அஞ்சுவதாகச் சொல்லி இருக்கிறார் என்பதே பொருத்தம்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் இலங்கையில் நடைமுறைக்கு வந்த காலத்தில் சர்வதேச சட்ட நிபுணர்கள் ஆணைக்குழு இந்தச் சட்டம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில், 'ஜனநாயக நாடு என்று சொல்லிக் கொள்ளும் இலங்கையின் சட்டப்புத்தகத்தில் இருக்கும் அசிங்கமான கறை' என்று வர்ணித்திருந்தது. ஆனால் இப்போதும் அரசு அதனைத் தனது மடிக்குள் போர்த்தி வைத்திருக்கின்றது.

2011 ஓகஸ்டில் அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்ட போது, அதில் இருந்த சில சரத்துகளும் பயங்கரவாதத் தடைச்சட்டத்துடன் இணைக்கப்பட்டு மிகவும் வலுவான ஒரு சட்டமாக்கப்பட்டு இலங்கை அரசின் ஜனநாயக விரோத அடக்குமுறைகளுக்குத் துணைபோகும் ஒரு கொடூரமான சட்டமாக, நச்சுப் பாம்பு போன்று, அது தலைவிரித்து நிற்கின்றது. செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தச் சட்டம் முழுக்க முழுக்க இலங்கையிலுள்ள தமிழ் மக்களை குறிவைத்து, அவர்களை அடக்கி கொடுமைப்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட ஒன்றாகும்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டதும் தடுத்து வைக்கப்பட்டதும், தெற்கில் அஸாத் சாலி கைதுசெய்யப்பட்டதும் இந்தச் சட்டத்தின் பிரகாரமே. தெற்கில் தற்பொழுது அரச எதிர்ப்பாளர்களை அடக்குவதற்கு இச்சட்டம் பயன்படுத்தப்படுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தமது இலங்கை விஜயத்தின் முதல்நாளிலேயே இரு முக்கிய பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்த பொலிஸ் திணைக்களத்தை தனியாகக் கையாள்வதற்கென புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு ஜனாதிபதி வசம் இருப்பதற்கு நவநீதம்பிள்ளை ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வசமுள்ள சட்டம், ஒழுங்கு அமைச்சு, பயங்கரவாத தடைச்சட்டம் ஆகியவை குறித்து நவநீதம்பிள்ளை தெரிவித்த கருத்துகள், அவரது ஒருவார கால இலங்கை விஜயத்தின்போது அவர் விடயங்களை எவ்வாறு கையாளப்போகிறார் என்பதற்கான முன்னெச்சரிக்கைப் பாணி என்று கருதுவது தப்பன்று.

கடந்த 33 வருடங்களில் பயங்கரவாத தடைச் சட்டத்தால் அப்பாவித் தமிழ் மக்கள் அனுபவித்த கொடுமைகளும், இழப்புகளும் கொஞ்சநஞ்சமல்ல. கைதுகள், சித்திரவதைகள், கொலைகள், அடக்குமுறைகள், காலவரையறையற்ற சிறைவாசம் என அத்தனை கொடுமைகளும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழேயே கட்டவிழ்த்துவிடப்பட்டன, அரங்கேறின. தமிழர்கள்மீது கட்டுக்கடங்காத வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்ட அரச பயங்கரவாதத்துக்கு பாதுகாப்பு வழங்கிய சட்டம் இது. 1979இல் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டவுடனேயே இச்சட்டத்தின் கீழ் படையினருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் மூலம் யாழ். நகரில் இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பதனைச் சரித்திரம் ஊன்றி எழுதியுள்ளது. அன்றிலிருந்து தமிழ் மக்களின் கைதுகளும், படுகொலைகளும், சித்திரவதைகளும், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டது வரை தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காக இச்சட்டத்தைப் பயன்படுத்துகிறோம் எனச் சொல்லிக்கொண்டு படையினருக்கு கட்டுக்கடங்காத அதிகாரங்கள் வழங்கப்பட்டதன் மூலம் மனித உரிமை மீறல்களும், சித்திரவதைகளும் இடம்பெற்றதற்கான சாட்சியங்கள் நிறைய உண்டு.

ஒருவர் மீது கனதியான குற்றச்சாட்டு ஒன்றைச் சுமத்துவதாயின், குற்றம் புரிந்தமைக்கான தடயப் பொருட்களும் அதற்கு வலுவான சாட்சியங்களும் இருக்கவேண்டும். ஆனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இவையின்றி ஒருவருக்குத் தண்டனை வழங்க முடியும். விசாரணை செய்யும் பொலிஸ் அதிகாரி தாம் விரும்புகின்ற குற்றங்களை எழுதி கைதுசெய்யப்படும் நபரிடம் கையொப்பம் பெற்றுக்கொண் டால் அதுவே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஒருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்குப் போதுமான சான்றாகக் கொள்ளப்படுகிறது.


மொத்தத்தில் தமிழர்களின் ஜனநாயக குரல்களை அடக்கி அவர்களை அடிமைகளாக வைத்திருப்பதற்கே பயங்கரவாதத் தடைச் சட்டம் பெரும் பல்பரிமாணத்தில் பயன்படுத்தப்படுகிறது.

இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு இந்தச் சட்டம் துட்டுக்கும் உதவப்போவதில்லை. வடக்கில் அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டம் ஆரம்பமானபோது அதனை முறியடிக்கவெனக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம், நீடிக்கப்படுவது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல.

அதனை நீக்குமாறு சொல்வதற்கு, நவநீதம்பிள்ளை என்ன, எங்களுக்கு கடவுளா என்று, அரசு தனக்குள்ளேயே கேள்வி கேட்டுச் சபித்தாலும் ஆச்சரியமில்லை.

# இந்தியா திருந்துமா அல்லது வருந்துமா?

வி.கே.ராஜன்



இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது தமிழர்கள் ஈவு இரக்கமற்ற வகையில் கொல்லப்பட்ட வேளையில் இந்தியாவின் பக்கமிருந்து அனுதாபம் எதுவும் கிளம்பவில்லை.

இலங்கையின் தற்போதைய அரசுத் தலைவரின் கீழ் இலங்கைத்தமிழர்கள்மகிழ்ச்சியாக வாழ முடியும். இவ்வாறு திருவாய் மலர்ந்திருப்பவர் வேறு யாருமல்ல- தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் ஞானதேசிகன் தான் அவர்.

சத்தியமூர்த்தி, காமராஜர் எனப் பெருந்தலைவர்களால் அலங்கரிக்கப்பட்ட பதவியொன்றில் அமர்ந்துள்ள ஞானதேசிகன் ஒருவரைக் கொண்டே தமிழ்நாடு காங்கிரசின் இன்றைய அவல நிலையைப் புரிந்து கொள்ள முடியும். திராவிடக் கட்சிகளின் ஆதரவில் தொங்கிக் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சிக்கு ஞானதேசிகன் போன்றவர்கள்தான் மிகப் பொருத்தமானவர்கள்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது தமிழ் மக்கள் வரலாறு காணாத கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருந்தபோது தமிழ்நாடு காங்கிரஸார் ஒரே இனத்தவர் என்ற ரீதியில் கூட தமது அனுதாபத்தைத் தெரிவிக்கவில்லை. மாறாக மத்தியில் ஆட்சியில் இருந்து கொண்டு இலங்கை அரசுக்குப் பல வகையிலும் உதவிகளை வழங்கிக்கொண்டிருந்த காங்கிரஸ் தலைமையிலான அரசின் செயற்பாடுகளை ஊக்குவித்த வண்ணம் இருந்தனர். மேலும் இலங்கைத் தமிழர்களின் அவலநிலை தொடர்பாகக் குரல்கொடுத்த ஏனையவர்களுடன் முரண்பட்டும் நின்றனர். இவர்களையெல்லாம் தமிழர்கள் என்று எவ்வாறு கூற முடியும்?

### தமிழின அழிவுக்கு துணைபோன தமிழர்கள்

ராஜீவ் காந்தி என்ற தனி மனிதனின் மரணத்துக்காக இலங்கையிலுள்ள தமது உடன் பிறப்புக்களான தமிழர்களை வெறுத்து ஒதுக்கும் இவர்கள் இலங்கையினால் இந்தியாவுக்கு ஏற்படுகின்ற நெருக்கடிகள் தொடர்பாகச் சிந்திக்காதது வேதனையைத் தருகின்றது. மேலும் ராஜீவ் காந்தியின் கொலையில் இந்தியாவிலுள்ள சிலரும் தொடர்புபட்டதாகத் தெரிவிக்கும் செய்திகளை இவர்கள் கருத்தில் கொள்வதாகவும் தெரியவில்லை. சில வேளை இது தொடர்பான விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுமாயின் தமது கட்சியைச் சேர்ந்த சிலர் பிரச்சினைக்குள் சிக்கிவிடலாம் என்ற அச்ச உணர்வு இதற்கொரு காரணமாக இருக்கலாம்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது தமிழர்கள் ஈவு இரக்கமற்ற வகையில் கொல்லப்பட்ட வேளையில் இந்தியாவின் பக்கமிருந்து அனுதாபம் எதுவும் கிளம்பவில்லை. மாறாக போரை நிறுத்துவதற்கு இலங்கை செல்வதாக பொய் கூறிக்கொண்டு இங்கு வந்த இந்திய மத்திய அரசின் உயர் நிலைத் தலைவர்கள் போரின் வேகத்தை அதிகரிக்குமாறு ஆலோசனை வழங்கிச் சென்றனர். இவர்களில் ஒருவர் இந்தியாவின் அதியுயர் பதவியிலும் அமர்ந்துள்ளார். ஆம் அவர் தான் தற்போதைய இந்திய ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் பிரணாப் முகர்ஜி.

அவரை விட்டு விடுவோம், ஏனென்றால் அவருக்கும் தமிழர்களுக்குமிடையில் எந்தவிதமான ஒட்டுறவும் இல்லை. ஆனால் தமிழர்களாகப் பிறந்த ஞானதேசிகன், சிதம்பரம், நாராயணசாமி போன்றவர்களுக்கு என்ன நடந்தது? தமிழன் என்ற உணர்வை விட பதவி மோகம்தான் இவர்களை ஆட்டிப் படைக்கின்றது.

### தமிழர்கள் இந்தியாவிடம் எதையும் எதிர்பார்க்க முடியாது

ஆனால் இந்தியா ஈழத் தமிழர்களுக்கு சகல வகையிலும் துரோகங்களையே மேற்கொண்டு வந்தாலும் இலங்கைத் தமிழர்கள் இந்தியாவை இன்னமும் தமது தாய் வீடாகவே போற்றிப் புகழ்கின்றனர், உளவு பாராட்டுகின்றனர். ஆனால் தென்பகுதி மக்களின் நிலை இதற்கு எதிர்மாறாக உள்ளது. இதை இந்தியா இன்னமும் புரிந்து கொள்ளாததுதான் வேதனை தருகின்றது.

இலங்கை அரசு இந்தியாவை ஒரு பொருட்டாக மதிப்பதாகத் தெரியவில்லை. இந்திய நாட்டின் துணிவில்லாத பலவீனமான நிலையை இலங்கை அரசுத் தலைவர்களை விட வேறு எவருமே சரியாக எடை போட்டிருக்கமாட்டார்கள். அதிலும் இந்தியாவுக்கு சீனா என்ற பலம் பொருந்திய நாட்டைச் சுட்டிக்காட்டியே தனது காரியங்கள் யாவற்றையும் சாதித்து வருகின்றது.

ஆனால் இந்தியாவின் நிலையோ பரிதாபகரமாக மாறிவிட்டது. தனக்கு மிக அருகிலுள்ள சின்னஞ்சிறிய நாடொன்று தனது கண்ணில் விரல்விட்டு ஆட்டுகின்ற போதிலும் எதுவுமே செய்ய முடியாத கையறு நிலையில் இந்தியா காணப்படுகின்றது. இதற்கொரு முக்கிய காரணத்தையும் கூறலாம். தற்போது இந்தியப் பிரதமர் பதவியை வகித்து வரும் மன்மோகன் சிங் காங்கிரஸ் கட்சியின் தலைவியான சோனியாகாந்தியின் ஒரு டம்மியாகவே அந்தப் பதவியில் அமர்ந்துள்ளார். சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் அதிகாரம் இவரின் கரங்களில் இல்லை. சோனியா குடும் பத்தினர் கூறுவதையே இவர் நிறைவேற்றி வருகின்றார். இந்தியாவின் சிறுபான்மை இனங்களில் ஒன்றான சீக்கிய சமுதாயத்தைச் சேர்ந்த முதலாவது இந்தியப் பிரதமரான இவர் சோனியாவின் நம்பிக்கைக்குரியவர். சோனியா எள் என்றால் இவர் எண்ணெயையே கொண்டு வந்து தரக் கூடியவர். இந்த நிலையில் இலங்கைத் தமிழர்கள் மீது தீராத கோபமும், வெறுப்பும் கொண்ட சோனியாவின் விருப்பத்துக்கு மாறாக இவரால் எதையுமே செய்ய முடியாது. ஆகவே மன்மோகன்சிங் பிரதமர் பதவியில் இருக்கும்வரை இலங்கைத் தமிழர்கள் இந்தியாவிடமிருந்து எதனையும் எதிர்பார்க்க முடியாது.

### நவிப்பிள்ளையின் வருகையால் இந்தியாவும் அச்சத்தில்

இலங்கை தற்போது இருவிடயங்களில் உலகின் கவனத்தை ஈர்த்து நிற்கின்றது. ஒன்று பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு இங்கு இடம்பெற உள்ளமை, இரண்டாவது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை இங்கு வருகை தருவது. இவையிரண்டுமே இந்திய நாட்டின் வயிற்றில் புளியைக் கரைத்துள்ளன. மேலும் பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்ற குரல்களும் இந்தியாவின் பல்வேறு தரப்பிலிருந்தும் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்துள்ளன. எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா இந்த விடயத்தில் விடாப்பிடியாக நிற்கின்றது. தமிழ்நாட்டில் காங்கிரஸ் தவிர்ந்த அநேகமாக சகல கட்சிகளும் இந்த விடயத்தில் போர்க் கொடி தூக்கி நிற்கின்றன. ஏற்கனவே தமிழ்நாட்டில் நலிந்து போயிருக்கும் காங்கிரஸ் கட்சி இந்த விடயத்தில் மாறுபட்ட உணர்வைத் தொடர்ந்து காட்டுமேயானால் அதன் நிலை பரிதாபகரமாகவே மாறிவிடும்.

மேலும் நவிப்பிள்ளையின் வருகையால் இறுதிப் போரின்போது இடம்பெற்ற தமிழர்களுக்கெதிரான கொடுமைகளில் உள்ள தனது பங்கு தொடர்பான உண்மைகள் வெளிப்பட்டு விடுமோ என்ற அச்ச உணர்வு இந்தியாவிடம் நிறையவே உள்ளன. எனவே வழக்கம் போலவே தனது இராஜதந்திர நடவடிக்கைகளை இந்தியா ஆரம்பிக்குமென்பதில் மாறுபட்ட கருத்துக்கு இடமே இல்லை. எனவே நவிப்பிள்ளையின் வருகையால் இங்கு மனித உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பாக ஏதாவது தகவல்கள் சேகரிக்கப்பட்டாலும் அதனை ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்தியாவால் தடைகள் ஏற்படுத்தப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்தே காணப்படுகின்றன. ஏனென்றால் இலங்கையைப் போன்று இந்தியாவும் இறுதிப் போரின் போது இங்கு இடம்பெற்ற மனித உரிமை மீறல்களில் சம பங்கை வகித்தன. அதிலும் இலங்கைக்கு முழு ஆதரவையும் உதவிகளையும் இந்தியாவே வழங்கியதால் அது எளிதில் நழுவி விட முடியாது. மேலும் இலங்கையில் வடமாகாண சபைக்கான தேர்தல் இடம்பெறுகின்றமை ஒரு முக்கியமான விடயமாகவே உள்நாட்டில் மட்டுமல்ல உலக நாடுகளாலும் கருதப்படுகின்றது. அதிகாரங்கள் எதுவுமற்ற நிலையிலும் தமிழர்களை பொறுத்த வரையில் மாகாண சபையின் அதிகாரங்களைக் கைப்பற்றுவதென்பது முக்கிய தேவையாக அமைந்துள்ளது. தமிழர்கள் தமது அதிகாரங்களைப் பெறுவதற்கான முதற்படியாகவே இதனைக் கொள்ளவும் முடியும். எனவேதான் இது முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. இந்த நிலையில் இலங்கைத் தமிழர்கள் மீதான இந்தியாவின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அதிலும் தமிழ்நாட்டில் வாழுகின்ற தமிழர்களின் உணர்வுகளை அது மதித்து நடக்க வேண்டும்.

இதிலிருந்து இந்தியா தவறுமேயானால் அதன் பலாபலன்களை அந்த நாடு நிச்சயம் அனுபவித்தேயாக வேண்டும்.

# யாரொடு நோவோம்



## குமுறும் பட்டதாரிகள்

கனகு

பட்டங்கள் பெற்று பாரினை ஆள்வோம் நல்ல சட்டங்கள் செய்வோம்" என்றான் மகாகவி. நம் நாட்டில் பட்டங்கள் பெற்று அரச சட்டங்களால் ஆளப்படுகின்ற பட்டதாரிகள் நிரந்தர நியமனம் தொடர்பாக அலசுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கடந்த வருடம் நாடளாவிய ரீதியில் பட்டதாரிகள் நியமனத்துக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பம் கோரப்பட்டு அந்தந்த மாவட்டச் செயலகங்களில் நேர்முகத்தேர்வை மேற்கொள்ளப்பட்டு 2011.12..31 இற்கு முன்னர் பட்டம் பெற்ற சுமார் ஐம்பதாயிரத்து ஐநூறு பட்டதாரிகள் பயிலுநர்களாக மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், மற்றும் பல் வேறு திணைக்களங்கள் என பல்வேறு அரச சேவை நிறுவனங்களில் இணைக்கப்பட்டிருந்தார்கள். அரசு மேற்குறித்த தொகைப்பட்டதாரிகளை பயிலுநர்களாக உள்வாங்கிய போது என்றுமே இல்லதாவாறு அரசசேவை யில் பட்டதாரிகளை உள்வாங்கியிருப்பதாக அரச ஆதரவு தமிழ் அரசி யல்வாதிகள் சிலர் மார்தட்டிக்கொண்டனர். பயிலுநர்களாக நியமிக்கப்படுவதற்கான நியமனங்களைக்கூட தங்களது கட்சியின் அரசியல் பிரச்சார மேடையாக்கி வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டதாக நாக்கூசாமல் உரத்துக்கூறினர்.

பட்டதாரிப்பயிலுநர்களாக உள்வாங்கப்பட்டவர்களுக்கு மாதமொன்றுக்கு பத்தாயிரம் ரூபா வீதம்(பட்டதாரிப்பயிலுநர்களின் பாணியில் சொல்வதானால் பிச்சைச் சம்பளம்) படியாக வழங்கப்படும் என்றும் சேவை யில் இணைத்துக்கொள்ளப்பட்டு ஒரு வருட நிறைவில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் என்றும் மாவட்ட செயலகங்கள் ஊடாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்றறிக்களையும் அனுப்பத் தவறவில்லை.

பயிலுநர்களாக இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளில் சிலர் ஆசிரிய ஆட்சேர்ப்புக்கான பரீட்சையில் தோற்றி நிரந்தர நியமனத்தைப்பெற்றுள்ளார்கள். அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு ஒரு மாதகாலமானநிலையில் ஏனைய வடமாகாண மாவட்டங்களில் பட்டதாரிப்பயிலுநர்களாக உள்வாங்கப்பட்டவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

இது ஒருபுறமிருக்க பட்டதாரிப் பயிலுநர்கள் தற்போது நடத்தப்படும் விதம் வேதனைக்குரியது. கடந்த வருடம் அனைத்துப் பட்டதாரிப் பயிலுநர்களையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் பிரமாண்டமானமுறையில் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் சகலரும் கட்டாயம் கலந்து கொள்ளவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் கொழும்புக்குச் சென்ற பிறகே அரசினுடைய அரசியல் பின்னணியிலான ஏற்பாடுகளைப் அவர்களால் உணர முடிந்தது. சுகததாச திறந்த வெளியரங்கில் நிரம்பி வழிந்த பட்டதாரிப்பயிலுநர்களது கைகளில் சிங்கக்கொடி கொடுக்கப்பட்டதில் இருந்து மைதானத்தில் மூன்று பகுதிகளில் அகலத்திரையில் முள்ளிவாய்க்காலில் தமிழர்கள் தோற்கடிக்கப்பட்ட செய்தி காணொலி வடிவத்தில் காண்பிக்கப்பட்டுக்கொண்டிருக்க மஹிந்த அந்த மைதான மேடையில் தோன்றி அரசியல் கருத்துக்களை அள்ளி வீசியது மட்டுமன்றி மைதானத்தில் வலம் வந்து பட்டதாரிகள் ஒவ்வொருவருக்கும் கைலாகு கொடுத்தது வரை எல்லாமே அரசியல் ஆதாயம் தேடும் நடவடிக்கைகளே. குடும்பப் பொருளாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு எப்படியாவதுநிரந்தர நியமனம் பெற்று விடவேண் டும் என்ற எண்ணத்துடன் இந்தப் பட்டதாரிகள் எத்த னையோ தடைகளையும் சுமைகளையும் தாண்டி ஒருவருடத்தைப் பூர்த்தி செய்தும் என்னபயன்?

### பட்டதாரிப்பயிலுநர்கள் எதிர்நோக்கும், சவால்களும் பிரச்சினைகளும்

இன்று பட்டதாரிகள் எதிர்நோக்குகின்ற சவால்கள், பிரச்சினைகள் சொல்லிலடங்காதவை. உள்வாங்கப்பட்ட பட்டதாரிகளில் சுமார் பதினாறாயிரம் பேர் பொருளாதார அமைச்சின் வேலைத் திட்டங்களுக்காக இணைக்கப்பட்டு பதினைந்து நாள்கள் கட்டாய தலைமைத்துவப் பயிற்சிக்காக இராணுவ முகாம்களுக்கு அழைக்கப்பட்டு பயிற்சியை நிறைவு செய்திருக்கிறார்கள். மேற்படி பயிற்சிக்கு செல்வதில் எவருக்கும் உடன்பாடில்லை என்ற போதும் தமக்கு நிரந்தர நியமனங்கள் கிடைத்து விடும் என்ற நம்பிக்கையிலேயே இப்பயிற்சியைப் பூர்த்தி செய்தனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் உள்வாங்கப்பட்டபட்டதாரிகளில் திட்டமிடல் அலுவலகங்களில் கடமையாற்றுபவர்களைத்தவிர ஏனையோர் நாடு முழுவதுமுள்ள பதினைந்தாயிரம் கிராம அலுவலர் பிரிவுகளில் கள உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றி வருகின்றார்கள். இவர்களில் கணிசமானவர்கள் இளநிலைப்பெண்கள். இவர்கள் கள உத்தியோகத்தர்களாக கிராமங்களில் கடமையாற்றும் போது பல்வேறு சமூகப்பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். சில கிராம அலுவலர் பிரிவுகளில் கடமையாற்றும் பெண் பட்டதாரிகளை கிராம சேவகர்களின் உதவியாளர்கள் என்றே மக்கள் அழைக்கின்றார்கள். அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என்ற பதவியில் பட்டதாரிகள் கடமைக்கு அமர்த்தப்பட்டிருப்பதாக அரசு கூறிவருகின்ற போதும் இவர்களுக்கான வேலை என்ன என்பதை சரியாகக் குறிப்பிடவில்லை. சில பிரதேச செயலகங்களில் பட்டதாரிப் பயிலுநர்கள் நடத்தப்படும் விதம் வேதனைக்குரியது எனப் பலர் விசனம் தெரிவிக்கின்றனர். அதாவது பட்டதாரிகள் நியமனத்துக்கு முன் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களாகவும், முகாமைத்துவ உதவியாளர்களாகவும் உள்வாங்கப்பட்ட பட்டதாரிகள் அல்லாத சிலர் தமக்குரிய நியமனச் சிரேஷ்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி பட்டதாரிகளை மிகவும் தரக்குறைவாக நடத்துகின்றனர் என்றும் அந்தப் பிரதேச செயலகங்களின் பிரதேச செயலர்கள், உதவித் திட்டமிடல் பணிப் பாளர்கள் அமைதியாக இருக்க மேற்படி உத்தியோகத்தர்களே பிரதேச செயலகங்களை நடத்துகின்றார்கள் என்று ஆதங்கப்படுகின்றார்கள். கிளிநொச்சியில் உள்ள ஒரு பிரதேச செயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே பிரதேச செயலரது கடமையை ஆற்றுவதாக வேதனைப்படுகின்றனர். பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற வேண்டிய கூட்டங்கள் மேற் குறிப்பிட்ட அரச நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையில் மேற்கொள்ளப்படுகின்றதாகக் குறிப்பிடுகின்றனர்.

அதுமட்டுமன்றி சில பிரதேச செயலகங்களில் பட்டதாரிப்பயிலுநர்களுக்கான கடமைகள் முருங்கைக்கன்று பப்பாசிக்கன்று வழங்குதலும் வழங்கப்படாமல் இருக்கின்ற மேலதிக பயிர்களை வாடிவிடாமல் நீர் ஊற்றுதலும் அதுதொடர்பான முன்னேற்ற அறிக்கையை வழங்குதலும் ஏற்கனவே வழங்கப்பட்ட பயிர்வகைகள், விலங்கினங்களை நல்ல நிலையில் மக்கள் பராமரிக்கின்றார்களா என வீடுவீடாக சென்று ஆய்வு செய்து அறிக்கையிடலும் ஆகும். இவ் வேலையை செய்வதற்கு நான்கு வரு டங்கள் பல்கலைக்கழகத்தில் கற்க வேண்டுமா என சில பட்டதாரிகள் ஆதங்கப்படுகின்றார்கள்.

இது ஒரு புறமிருக்க கிராமங்களில் கிராம சேவகர்களாக கடமையாற்றுபவர்களுக்கும் பட்டதாரிப் பயிலுநர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்ற ஆரம்பத்துள்ளன. தமது பிரதேசங்களில் ராஜாக்களாக கடமையாற்றி வந்த கிராம சேவையாளர்களுக்கு பட்டதாரிப் பயிலுநர்களின் இணைப்பு விருப்பமற்ற ஒன்றாகவே காணப்படுவதுடன் சில கிராமப்பிரிவுகளில் பெண் பட்டதாரிப் பயிலுநர்கள் கடமையாற்றும்போது அவர்களை கிராமசேவையாளர்கள் அடக்கியாளவும் முற்படுகின்றனர்.

அண்மையில் பட்டதாரிப் பயிலுநர்களுக்கான கடமைப்பட்டியல் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு கிராமசேவகர் பிரிவில் நடைபெறும் சகல அமைச்சுக்களினதும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஒருங்கிணைக்கும் பணி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகிய பட்டதாரிப் பயிலுநர்களுக்கு வழங்கப்பட்டிருப்பினும் கணிசமான பிரதேசச் செயலகங்களின் பிரதேச செயலாளர்களுக்கோ உதவித்திட்டமிடல் பணிப்பாளருக்கோ இது தொடர்பான தெளிவான அறிவுறுத்தல் வழங்கப்படவில்லை. இதனால் சில பிரதேசசெயலாளர்கள் கிராம மட்டத்தில் நடைபெறும் அபவிருத்தி வேலைத்திட்டங்களை கிராமசேவையாளர்களுடன் இணைந்து பட்டதாரிப் பயிலுனர்களை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகின்றனர். இதனால் கிராம சேவையாளர்களுடன் மேலும் முரண்பாடுகள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

அதுமட்டுமன்றி அண்மையில் அரசியல் செல்வாக்கின் நிமித்தம் நாடுதழுவிய ரீதியில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றார்கள். உண்மையில் மேற்படி வேலைத்திட்டத்துக்கு பொருத்தமான தகைமைகளை உடைய போரால் மிகவும் பாதிக்கப்பட்ட பல இளைஞர். யுவதிகள் அரச ஆதரவாளர்கள் இல்லை என்ற ஒரே காரணத்துக்காக புறக்கணிக்கப்பட்டு தகைமைகள் எதுவுமற்ற பலர் நியமனம் பெற்றுள்ளார்கள். தொண்டராசிரியர் நியமனத்திலும் இதே நிலமை காணப்படுகின்றது. 2005 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே தொண்டராசிரியராக கடமையாற்றிய வர்கள் புறக்கணிக்கப்பட்டு குறிப்பிட்ட பாடசாலைகளுடன் தொடர்புபடாத பாடசாலையின் அமைவிடம் கூடத்தெரியாத பலர் அரசியல் செல்வாக்குக் காரணமாக வேறு பிரதேசங்களில் இருந்து வன்னிப்பாடசாலைகளில் நியமிக்கப்பட்டிருப்பதால் பாதிக்கப்பட்டவர்கள் கொதிப்படைந்துள்ளார்கள்

அரசியல் செல்வாக்கில் நியமனம் பெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்களை மாகாண சபைத் தேர்தலில் தமக்குச் சார்பாக பிரசாரம் செய்யுமாறு அரச ஆதரவுக் கட்சிகளைச் சேர்ந்த சிலர் அழுத்தம் கொடுக்கின்றார்கள். சிலர் தாமாகவே முன்வந்து நன்றிக்கடனுக்காக அரசுக்கு ஆதரவு திரட்டும் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளார்கள். எனவே மேற்படிநியமனங்கள் அனைத்தும் மாகாண சபைத்தேர்தலை அடிப்படையாகக்கொண்டே வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆகமொத்தத்தில் எந்த ஒரு திட்டமும் இல்லாமல் தமது அரசியல் நலனுக்காக அரசு ஆட்சேர்ப்பைச்செய்கின்றது. அரைகுறைத் தகைமைக ளுடன் அரச ஆதரவுக்கட்சிகளின் ஆதரவில் சமுர்த்தி உத்தியோகத் தர்கள் நிரந்தர நியமனத்தில் உள் வாங்கப்பட்டிருப்பது ஒருவருடம் பயிலுநர்களாக கடமையாற்றியும் நிரந்தர நியமனம் வழங்கப்படாமல் இருக்கும் பட்டதாரிகள் மத்தியில் கோபத்தையும் வேதனையையும் ஏற்படுத்தி உள்ளது. இதனால் எதிர்காலத்தில் பட்டதாரிகள் நிரந்தர நியமனத்தை வழங்கக்கோரி அரச எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ளவும் கூடும். ஏனெனின் அது அவர்களது ஜனநாயக உரிமையாகும்.

# நலமருளும் கிருஷ்ண ஜெயந்தி விரதம்

எஸ்.கே.என்.தவராஜா
உதவிப் பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம்

இந்து மதத்தில் இறைவனை வழிபடும் முறைகளுள் விரதம் மிக எளிமையானதாகும். மனத்தை ஐம்புலன்களின் வழி போக விடாது, கட்டுப்படுத்தி, உணவை விடுத்தேனும், சுருக்கியேனும், மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும் இறைவனை வழிபடுதல் விரதம் எனப்படுகின்றது.

வைஷ்ணவ சமய முழுமுதற் கடவுளான ஸ்ரீமத் நாராயணனின் அவதாரமான ஸ்ரீகிருஷ்ணன் இந்தப்பூமியில் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்வதற்காக அவதரித்த தினமே ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தியாகும். இது கோகுலாஷ்டமி, ஜன்மாஷ்டமி என்ற பெயர்களில் கொண்டாடப்படுகின்றது. ஆவணி மாத அபரபக்க அட்டமித் திதியும் , ரோகிணி நட்சத்திரமும் கூடிய நாளில் இந்த விரதத்தை அனுஷ்டிக்கிறார்கள்.

கம்சன் என்ற அசுரத்தன்மையுள்ள கொடிய அரசனின் சகோதரியான தேவகிக்கும் வாசு தேவருக்கும் அர்த்தஜாமத்தில் சிறைக்கூடத்தில் பிறந்த கிருஷ்ணன், இடம்மாறி இடையர் குலத்தில் பலராமன் தம்பியாக நந்தகோபன் யசோதை தம்பதியரின் குழந்தையாக வளர்ந்தவன். துவாபர யுகத்தில்அசுரவதம் செய்தமை, தீயோரை அழித்து நல்லோரைக் காத்தமை, மகாபாரதப் போரில் பாண்டவரைக் காக்க தேர்ச்சாரதியாகி, ஸ்ரீமத் பகவத் கீதையெனும் தேவாமிர்தத்தை நல்கியவன் கிருஷ்ணபரமாத்மாவே. இத்தகைய ஸ்ரீகிருஷ் ணனின் ஜெயந்தி தினம் எமது வீட்டுக் குழந்தையொன்றின் பிறந்தநாள் கொண்டாட்டம் போலவே கொண் டாடப்படுகின்றது.

நாரத முனிவருக்கு பிரம்மதேவரால் உபதேசிக்கப்பட்டதும், சனற்குமார முனிவரால் அரிச்சந்திரனுக்கு உபதேசிக்கப்பட்டதும், அம்பரீஷன், சிசுபாலன், காசிராஜன் போன்ற மன்னர்களாலும், வசிஷ்டர்,வான்மீகி, கௌதமர் .ஜமதக்கினி போன்ற முனிவர்களாலும் அனுஷ்டிக்கப்பட்ட இந்த விரதம் பாவ நீக்கத்தை வழங்கி புண்ணியம் தரவல்லது.

வைஷ்ணவ ஆலயங்களில் பக்தர்கள் இரவு பன்னிரண்டு மணிக்குக் கிருஷ்ணன் பிறந்த நேரம் வரை பூரண உபவாசம் இருந்து பஜனை போன்ற திவ்விய நாம சங்கீர்த்தனத்திலும் ஏனைய சமய நிகழ்வுகளிலும் ஈடுபடுவர். அன்று நாவற்பழம், வெள்ளரிப்பிஞ்சு, அவல், பால் பாயாசம், வெண்ணெய், தயிர் போன்ற அறுசுவை உணவும் படைத்து வழிபடுவர். மறுநாள் உதயத்தில் பாரணை மேற்கொண்டு இந்த விரதத்தைப் பூர்த்தி செய்யலாம்.

இன்று சைவ ஆலயங்களிலும் ஸ்ரீகிருஷ்ண னுக்குசிறிய ஆலயங்களைஅமைத்து அந்த ஆலயங்களில் ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி கொண்டாடி அடியவர்கள் வழிபாடு செய்வதை எம்மால் காண முடிகின்றது. நாமும் இன்றைய கிருஷ்ண ஜெயந்தி அன்று பகவான் ஸ்ரீகிருஷ்ணரை மனதிருத்தி வழிபட்டு பகவான் ஸ்ரீகிருஷ்ணனின் அருள் பெற்று உய்வோமாக.

**இன்று (28,08.2013) புதன்கிழமை கிருஷ்ண ஜெயந்தி தினமாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**






# நவநீதம்பிள்ளை அம்மா எங்கள் உறவுகளை மீட்டுத் தர உதவுங்கள்



கடத்தப்பட்டவர்கள், காணாமற் போகச் செய்யப்பட்டவர்களை மீட்டுத்தருமாறும், படையினரின் நில அபகரிப்புக்கு எதிராகவும் தம்மை மீள்குடியேற்றம் செய்யுமாறும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த நவநீதம்பிள்ளை அம்மையாரிடம் வலியுறுத்தி நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.
காணாமற் போனோரின் பெற்றோர், மனைவிமார், சகோத்ரங்கள், பிள்ளைகள் எனப் பலரும் நிலத்தில் புரண்டு கண்ணீர் விட்டு கதறியழுத காட்சிகள் அனைவரையும் நெஞ்சுருகச் செய்தன. அந்தக் காட்சிகளையே இங்கு காண்கிறீர்கள். (ஒ-4)

## அரசு பக்கம் தாவினார் வேட்பாளர்

வட மாகாண சபைத் தேர்தலில் சுயேச்சைக் குழுவின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் நேற்று முன்தினம் அரசு பக்கம் தாவினார்.
வசந்தநாதன் சிவநாதன் என்ற வலி.தெற்கு பிரதசே சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் உறுப்பினரே தற்போது சுயேச்சைக் குழுவிலிருந்து அரசு பக்கம் தாவியுள்ளார்.
யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அலுவலகத்தில் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தலைமையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இந்தத் திடீர் தகவல் தொடர்பில் தெரிவிக்கப்பட்டது. (த-5)

## குண வழிபாடு

தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள அருட்தந்தை எம். எஸ்.ராஜ் அடிகளாரால் குண வழிபாடு திருப்பலி ஒப்புக் கொடுக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.
சங்கானை புனித சலேசியார் ஆலயத்தில் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறும். (ந-29)

## வலி. தென்மேற்கு பிரதேச சபை 'பிக்கப்'பை பாவிக்கக் கட்டுப்பாடு

### தவிசாளர், செயலாளர் இருவருக்கும்

வலி.தென்மேற்கு, ஒக.28
சபையின் நிதி விரயமாவதைத் தவிர்க்கும் வகையில் வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் 'பிக்கப்' வாகனத்தைப் பயன்படுத்துவதற்குக் கட்டுப்பாடு விதித்த உறுப்பினர்கள் சொந்தத் தேவைகளுக்கு வாகனத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு தவிசாளரையும், செயலாளரையும் கோரியுள்ளனர்.
மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் சபையைப் பொறுப்பேற்க முன்பு செயலாளரின் நிர்வாகத்திலிருந்த காலப்பகுதியில் அலுவலகத் தேவைகளுக்குப் பயன் படுத்துவதற்காக வலி.தென் மேற்குப் பிரதேச சபைக்கு அரசால் 'பிக்கப்' வாகனம் வழங்கப்பட்டது.
அக்காலப் பகுதியில் வாகனம் பாவிப்பது பற்றிக் கட்டுப்படுத்த எவருமில்லாததனால் செயலாளர் அந்த வாகனத்தை சகல தேவைகளுக்கும் பயன்படுத்தி வந்தார். ஆனால் தற்பொழுது மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் சபையின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுள்ளனர்.
இவ்வாறான நிலையில் சபையின் தேவைக்கு மட்டும் பயன்படுத்தவேண்டிய மேற்படி வாகனத்தை தவிசாளரும் செயலாளரும் சொந்தத் தேவைக்குப் பயன்படுத்துவதாக ஆதாரத்துடன் குற்றஞ்சாட்டிய உறுப்பினர்கள்; எரிபொருள் விரயமாவதைத் தவிர்க்கும் வகையில் காரியாலயத்தின் தேவைக்கு மட்டும் வாகனத்தை பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.
வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் ஜூலை மாதத்துக்கான தொடர்கூட்டம் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.
இக் கூட்டத்தில் கலந்து கொண்ட எதிரணிஉறுப்பினரானபி.நாகேந்திரன், மேற்படி வாக னத்தை செயலாளர் சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்து வதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து ஏனைய உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.
அதை அடுத்து வாகனம் பாவிப்பதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. (ஒ-115)

## சிட்டிவேரம் திருட்டுச் சம்பவம்; சந்தேகநபர் விளக்கமறியலில்

வரணி, ஒக.28
வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட வயோதிபரை எதிர் வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
மோப்ப நாயின் உதவியுடன் கைது செய்யப்பட்ட வயோதிபரை கொடிகாமம் பொலிஸார் திங்கட்கிழமை நீதிமன்றில் முற்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.
கடந்த சனிக்கிழமை இரவு ஆலய தெற்கு வாசல் கதவு உடைக்கப்பட்டு ஆலய மூலஸ்தான விக்கிரகம் மற்றும் விக்கிரகத்துக்கு அடியில் வைக்கப்பட்டிருந்த இயந்திரத் தகடு போன்றவை திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-9)



## நிர்வாகிகள் தெரிவு

வலி.வடக்கு, ஒக. 28
யாழ். மாவட்ட சமுர்த்தி அபி விருத்தி உத்தியோகத்தர்களுக் கான வருடாந்தப் பொதுக் கூட் டம் நல்லூர் பிரதேச செயலக வளாகத்தில் ப.ஐங்கரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.
இதன்போது நடப்பாண்டுக் கான புதிய நிர்வாகிகளாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட் டுள்ளார்கள்.
தலைவர் எஸ்.செந்தூரன் (சாவகச்சேரி) உப தலைவர்- சு.சுபாநாதன் (நல்லூர்) செயலாளர்- கே.விமலராஜ் (நல்லூர்) உப செயலாளர்- சி. பாஸ்கரன் (உடுவில்) பொருளாளர்- க. சிவகுமார் (சங்கானை) பொது மக்கள் தொடர்பு அலுவலர் ப.ஐங்கரன் (காரை நகர்)மற்றும் யாழ். மாவட்டத்தைச் சோந்த பதினைந்து பிரதேச செயலகங்களுக்கும் தலா ஒருவர் என்ற அடிப்படையில் பதினைந்து நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ந-86)

★ ★ ★

பூநகரி, ஒக.28
பூநகரி கௌதாரிமுனை அருள்மிகு கற்பகப் பிள்ளையார் கோயில் பரிபாலன சபைக் கூட்டம் சபைத் தலைவர் பொ.அருமைநாயகம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.
இந்தச் சபையின் புதிய தலைவராக இ.பூபாலசிங்கமும், செயலாளராக ச.கணேசமூர்த்தியும், பொருளாளராக ச.பாலசுப்பிரமணியமும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 9 பேர் அடங்கிய செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (ந-8)

## பொன்னாலையில் இன்று தேர்

யாழ்ப்பாணம், ஒக.28
பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத் தேர்த் திருவிழா இன்று புதன்கிழமை முற் பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது. முற்பகல் 1.30 மணிக்கு உறியடி உற்சவமும் நடைபெறும்.
நாளை காலை 9 மணிக்கு ஸ்ரீதேவி, பூமி தேவி சமேத ஸ்ரீவரதராஜப் பெருமாள் திருவடி நிலை தீர்த்தத்துக்குச் சென்று முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (ந)

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி, ஒக.28
தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளி யீடான ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகையின் 188 ஆவது ஆவணி மாத மலர் வெளியீட்டு விழா எதிர் வரும் 30 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
பேரவை [illegible] கே.அருணகிரிநாதன் தலைமையில் [illegible] நிகழ்வில் உடுப்பிட்டி அமெரிக்க [illegible] ர் க.ஸ்ரீசந்திரன் வெளியீட்டு [illegible] ர் தெணியான் மதிப்பீ[illegible] (ந-8)

## கிளிநொச்சியில் நாமல்

பளை, ஒக.28
வடக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்துக்கென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கிளிநொச்சி மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளார்.
கிளிநொச்சி மாவட்டத்தின் பல கிராமங்களுக்கும் சென்று அவர் பிரசாரப் பணிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# வசதியீனங்களுக்கு மத்தியில் வெள்ளாங்குளம் மருத்துவமனை

மன்னார், ஓக.28

மன்னார் வெள்ளாங்குளம் மருத்துவமனை பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியில் இயங்கி வருவதால் இந்தப் பகுதி மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிய வருகின்றது.

மன்னார் மாவட்டத்திலுள்ள வெள்ளாங்குளம் மருத்துவமனைக்கு இதுவரை நிரந்தரமாக மருத்துவர் நியமிக்கப்படவில்லை. இதனால் வெள்ளாங்குளம், தேவன்பிட்டி, பாலியாறு, தேத்தாவடி, இலுப்பைக் கடவை, கள்ளியடி, சிப்பியாறு, சேவாலங்கா கிராமம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள், பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக அறிய முடிகின்றது.



மேலும் அவசர நோயாளிகளை இங்கிருந்து வேறு மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்வதற்குரிய அம்புலன்ஸ் வசதிகளும் காணப்படவில்லை. இதனால் நோயாளர்களையும் வெள்ளாங்குளத்திலிருந்து 10 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள முழங் காவில் மருத்துவமனைக்கோ அல்லது 40 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மன்னார் நகர வைத்திய சாலை ஆகியவற்றுக்கு எடுத்துச் செல்வதில் பல்வேறு சிரமங்கள் தோன்றியுள்ளன.

எனவே இந்த மருத்துவமனைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறும், அம்புலன்ஸ் மற்றும் இதர வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-6)

# அனைத்து சனசமூக நிலையங்களையும் இயங்கச் செய்யுமாறு கோரிக்கை



முல்லைத்தீவு, ஓக. 28

முல்லை மாவட்டத்தில் உள்ள அனைத்து சனசமூக நிலையங்களும் செயற்படுமாயின் தமக்குப் பல்வேறு வகையிலும் பயன் கிடைக்குமென மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மாவட்டத்தில் அமைந்திருந்த சனசமூக நிலையக் கட்டடங்கள் போரினால் அழிவடைந்த நிலையிலும் பராமரிப்பின்றி இயங்காத நிலையிலும் உள்ளன. அத்துடன் சனசமூக நிலைய நிர்வாகிகளும் செயற்படாத நிலையில் காணப்படுகின்றனர். இதே வேளை வேறு மாவட்டங்களில் அமைந்துள்ள சனசமூக நிலையங்கள் ஊடாக பல்வேறு மக்களுக்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் இவற்றினூடாக பத்திரிகைகள் மற்றும் நூல்களை மாணவர்களும் ஏனைய பொதுமக்களும் பயன்படுத்தக் கூடிய நிலையும் காணப்படுகின்றது.

எனவே முல்லைத்தீவிலுள்ள அனைத்துக் கிராமங்களிலும் உள்ள சனசமூக நிலையங்களையும் இயங்கச் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென இங்குள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

# வன்னேரிக்குளம் பகுதியில் நீர் விநியோகத் திட்டம்

கிளிநொச்சி, ஓக.28

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் 190 மில்லியன் ரூபா செலவிலான குழாய் மூலமான நீர் விநியோகத் திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

ஜெய்க்கா திட்டத்தின் கீழ் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. வன்னேரிக்குளம், திக்காய், சோலை, குஞ்சுக்குளம், ஐயனார்புரம் ஆகிய கிராமங்களில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. குறித்த கிராமங்கள் தொடர்ந்தும் நல்ல நீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர் கொண்டு வரும் நிலையில் மேற்படி திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப வேலைகள் கடந்த மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் நிறைவடையும் போது மேற்படி பகுதிகளைச் சேர்ந்த 6 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் நன்மையடைவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (க-6)

# பாதிக்கப்பட்ட நிலையில் தற்காலிக வீடுகள்

## அவலத்தில் முல்லை மக்கள்


முல்லைத்தீவு, ஓக. 28

முல்லை மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப்பட்டுத் தற்காலிக வீடுகளில் தங்கி வாழ்வோரின் வீடுகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் அவல வாழ்வு வாழ்வதாகத் தெரிய வருகின்றது.

முல்லை மாவட்டத்தில் மீள்குடியமர்ந்து நான்கு வருடங்கள் ஆகிய போதிலும் நிரந்தர வீடுகள் கிடைக்காதவர்கள் தொடர்ந்தும் தமது தற்காலிக வீடுகளிலேயே வசித்து வருகின்றனர்.

ஆனால் இந்த வீடுகள் சேதமுற்று, முறிந்து விழும் நிலையில் உள்ளதால் தாம் பாதிப்புக்களை எதிர்கொள்வதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழை காலம் ஆரம்பிக்கவுள்ளதால், தாம் வாழுகின்ற தற்காலிக வீடுகள் தாக்குப் பிடிக்க முடியாத வகையில் கறையானால் அரிக்கப்பட்டு எந்த வேளையிலும் தடிகள் முறிந்து விழுந்து விடக் கூடிய நிலையிலுள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.



மேலும் இந்த வீடுகளுக்குள் மழைநீர் புகும்போது தமது நிலைமை மிக மோசமாக மாறி விடுமெனவும் இவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனவே இனியும் தாமதிக்காது தமக்கு நிரந்தர வீடுகளை வழங்குமாறும் இந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

# புதுப்பொலிவு பெறுமா தபாலகம்? கேள்வி எழுப்பும் பாலிநகர் மக்கள்



முல்லைத்தீவு, ஓக.28

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள பாலிநகர் கிராமத்தில் முற்றாக அழிந்த நிலையில் காணப்படும் தபாலகம் புதுப் பொலிவு பெறுமா என இங்கு வசிக்கும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்த உப தபாலகம் போருக்கு முன்னர் சிறந்த முறையில் இயங்கி வந்தது. போரின்போது அழிவடைந்து புனரமைக்கப்படாத நிலையில் தற்போது காணப்படுகின்றது.

மேலும் தற்போது தனியார் ஒருவரின் வீட்டில் இந்த உப தபாலகம் இயங்கி வருகின்றது. இங்கு போதிய வசதிகள் இல்லாததால் இதனை நாடி வருகின்ற மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இதனால் சேதமடைந்த நிலையில் காணப்படும் தபாலகத்தின் கட்டடத்தைப் புனரமைத்து போதிய வசதிகளையும் ஏற்படுத்துமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-415)

# நிரந்தர வீடுகளை வழங்குமாறு பாலியாறு மக்கள் கோரிக்கை

மன்னார், ஓக.28

மன்னார் பாலியாற்றுக் கிராம மக்கள் தமக்கு நிரந்தர வீடுகளை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாலியாறு கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு இதுவரை நிரந்தர வீட்டுத் திட்டங்கள் எவையும் வழங்கப்படவில்லை. மீள் குடியமர்வின்போது வழங்கப்பட்ட தற்காலிக வீடுகளிலேயே இவர்கள் தங்கியுள்ளனர்.

இந்த வீடுகள் ஆறு மாத காலப் பாவனைக்கென இவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. பாலியாறு கிராமத்தில் 98 குடும்பங்களும் ஏனைய தேத்தாவடி, தேவன்பிட்டி ஆகிய கிராமங்களில் சுமார் 100 குடும்பங்களும் தற்போது வசித்து வருகின்றன.

பருவமழை ஆரம்பமாவதற்கு முன்னராவது தமக்கு நிரந்தர வீட்டுத் திட்டங்களை வழங்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

# குடிதண்ணீர் நெருக்கடியில் மாந்தை மக்கள்

அக்கராயன், ஓக. 28

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் மக்கள் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

இங்குள்ள வெள்ளாங்குளம், தேவன்பிட்டி, மூன்றாம்பிட்டி, அந்தோனியார்புரம், இலுப்பைக்கடவை, கள்ளியடி, பள்ளமடு ஆகிய கிராமங்களிலேயே மோசமான குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இங்கு மாந்தை மேற்கு பிரதேச சபையினரால் பவுசர் மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின் றது. ஆனால் சில கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நீண்ட தூரம் நடந்து சென்று குடிதண்ணீரைப் பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

எனவே குடிதண்ணீர் நெருக்கடி காணப்படும் இடங்களில் அதை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-18)

### துணுக்காயில் பண்பாட்டு விழா

அக்கராயன், ஓக. 28

துணுக்காய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் பண்பாட்டு விழா எதிர் வரும் ஒக்ரோபர் மாதத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த விழாவில் வெளியிடவிருக்கும் சிறப்பு மலருக்கான ஆக்கங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

இந்த மலர் வெளியீட்டு விழாவில் தமிழர்களின் பல்வேறு கலை, பண்பாட்டு அம்சங்களைத் தாங்கிய நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளில் துணுக்காய் பிரதேச செயலகம் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. (க-18)

# கசிப்பு விற்பனையை ஒழிக்குமாறு கண்டாவளை மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஓக. 28

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் தொடர்ந்து இடம்பெற்று வரும் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையை ஒழித்துக் கட்டுவதற்கு உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஊரியான், இரண்டாம் யுனிற் பகுதி, புலிங்கதேவன்முறிப்பு, மருதங்குளம் ஆகிய பகுதிகளில் என்றுமில்லாதவாறு கசிப்பின் ஆதிக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனவும், இதனால் அயலில் வசிக்கும் குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை விட புலிங்கதேவன் முறிப்பு மற்றும் மருதங்குளம் ஆகிய பகுதிகளில் வேறு இடங்களைச் சேர்ந்தவர்களுடன் இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களும் இணைந்து கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுவருகின்றனர். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இங்கு வசிக்கும் மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-6)

**கண்டாவளைப் பிரதேசத்துக்கு உட்பட்ட ஊரியான், இரண்டாம் யுனிற் பகுதி புலிங்கதேவன் முறிப்பு, மருதங்குளம் ஆகிய பகுதிகளில் என்றுமில்லாதவாறு கசிப்பின் ஆதிக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.**



கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் பிரதேசத்தில் கூட்டம் கூட்டமாக வந்து சிறுபோக நெற்பயிர்களை அழிக்கும் காட்டெருமைகள். (க-18)

தருவது
வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் திணறுவீர்கள். நண்பர்கள். உறவினர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள். சிலரின் நய வஞ்சகச் செயலை நினைத்து வருந்துவீர்கள். மற்றவர்கள் பிரச்சினையில் தலையிடுவதால் வீண் பழிச் சொல் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் விட்டுக்கொடுத்துப்போவது நல்லது.

**இடபம்:** விலை உயர்ந்த பொருள்களைக் கவனமாகக் கையாளுங்கள். உறவினர்களுடன் விரிசல்கள் வரக்கூடும். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.

**சிங்கம்:** பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரச காரியங்களில் வெற்றியுண்டு. நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துவிட்டு சேமிக்கத் தொடங்குவீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். உதவி கேட்டு உறவினர்களும் தர்மசங்கடத்துக்கு ஆளாக்குவார்கள் . அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம்.

**நாளை**

ஆவணி-13 வியாழக்கிழமை 29.08.2013
திதி: அட்டமி கா.06.41 வரை
நட்சத்திரம்: ரோகிணி மா.06.26 வரை
சுபநேரம்: 07.35 - 09.05 வரை
இராகுகாலம்: 01.35 - 03.05 வரை

**துலாம்:** நீண்டநாள்களாக மனதளவில் இருந்து வந்த பிரச்சினைகளுக்கு இன்று முடிவு கட்டுவீர்கள். உத்தியோகத்தில் மதிப்புக்கூடும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். கோபம் குறையும்.

**விருச்சிகம்:** மன நிறைவுடன் காணப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். இள வயது நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் மிகுதிகளை அதிரடியாகச் செயற்பட்டு வசூலிப்பீர்கள்.

**தனுசு:** ஆடம்பரமான செலவுகளைக் குறைப்பீர்கள். மறைமுகப் போட்டிகளுக்கு பதிலடி தருவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் உதவி கிடைக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**மகரம்:** சோர்வு நீங்கி சுறுசுறுப்புடன் செயற்படுவதன் மூலம் காரியங்கள் வெற்றியடையும். வியாபாரத்தில் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். பிரார்த்தனைகளை நிறைவேற்றுகள்.

**கும்பம்:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். பணப் புழக்கம் அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் புதிய சலுகைகளை அறிமுகப் படுத்துவீர்கள்.

**மீனம்:** வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி கிட்டும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அரச காரியங்களில் அனுகூலமான நிலைக் காணப்படும். உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | | 4 | 5 | | |
| | | 9 | 6 | 5 | | 3 | | 1 |
| 6 | | 5 | 2 | | 1 | 7 | | 4 |
| | | | | 7 | 2 | 1 | | 5 |
| | | | | | | | | |
| 1 | | 2 | 3 | 4 | | | | |
| 2 | | 7 | 5 | | 8 | 6 | | 9 |
| 9 | | 1 | | 2 | 6 | 8 | | |
| | | 6 | | | | 4 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 4 | 6 | 5 | 9 | 1 | 8 | 3 |
| 8 | 9 | 3 | 1 | 2 | 7 | 4 | 6 | 5 |
| 6 | 5 | 1 | 8 | 4 | 3 | 9 | 7 | 2 |
| 2 | 7 | 8 | 5 | 3 | 1 | 6 | 9 | 4 |
| 9 | 3 | 5 | 7 | 6 | 4 | 2 | 1 | 8 |
| 4 | 1 | 6 | 2 | 9 | 8 | 5 | 3 | 7 |
| 1 | 8 | 2 | 9 | 7 | 5 | 3 | 4 | 6 |
| 5 | 4 | 9 | 3 | 8 | 6 | 7 | 2 | 1 |
| 3 | 6 | 7 | 4 | 1 | 2 | 8 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

# பதவி வெற்றிடங்கள்

### எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்- யாழ்ப்பாணம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் 133சர்வதேச நாடுகளில் சிறுவர்களுக்கான சேவையை வழங்கி வருவதுடன் இலங்கையில் 32 வருடங்களாக தனது சேவையை ஆற்றி வருகின்றது. இந்நிறுவனத்தின் யாழ்ப்பாண கிளையில் கீழ்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. இப்பதவிகள் யாவும் நிரந்தரமானதும் ஊழியர்சேமலாப நிதியைக் கொண்டதுமாகும். இதற்கு பின்வரும் தகுதிகளை உடையோர் விண்ணப்பிக்கலாம்.

**1. தாதி**

குறைந்தது 5 வருட கால சேவை அனுபவம்.

**அல்லது**

தாதியர் டிப்ளோமாவுடன் குறைந்தது 3 வருட கால சேவை அனுபவம்.
28-40 வயதிற்குட்பட்டவர்கள்.
சிங்கள மொழி பேசத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது

**2. முன்பள்ளி ஆசிரியைகள் (2 பதவி வெற்றிடங்கள்)**

முன்பள்ளிக் கற்கைநெறியில் டிப்ளோமாவுடன் குறைந்தது 2 வருட கால அனுபவம்.
25-30 வயதுக்குட்பட்டவர்கள்.
ஆங்கிலம், சிங்கள மொழி பேசத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

**3. சிற்றூழியர்கள்- ஆண்கள் (2 பதவி வெற்றிடங்கள்)**

க.பொ.த சாதாரண தரம். நிர்வாகத்திற்கு கட்டுப்பட்டு நடத்தல் .
30-35 வயதிற்குட்பட்டோர்

**நற்பழக்கவழக்கம், நல்லதேக ஆரோக்கியம், வேலைத்தளத்திற்கு அண்மையில் வசிப்போர் விரும்பத்தக்கது.**

விண்ணப்பங்கள் யாவும் இவ்விளம்பரம் பிரசுரமாகும் நாளில் இருந்து 7 நாள்களுக்குள் கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**தொடர்புகளுக்கு:**
**எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்**
**இல. 219, நாயன்மார் வீதி,**
**நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.**

தொ.பே.: 021 221 1101,
077 236 6106,
077 226 4681

மின்னஞ்சல்: arjunan.swaminathan@soscvsrilanka.org
vanitha.senathirajah@soscvsrilanka.org

(C/11626)

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

# நீங்கள் அன்பின் உருவமான தாயா?

**உங்கள் சமூகத்தின் குழந்தைகளுக்குத் தாயாகும் தயாளகுணம் உங்களுக்கு உண்டா?**
**உங்களது தாய்மைப் பண்பை எமது சிறுவர்களோடு பகிர்ந்து கொள்ளும் விருப்பு உண்டாயின்.......**

### எஸ்ஓஎஸ் தாயாகும் அரியவாய்ப்பு

தாய்மை என்ற குணம் தன் கருவில் சுமந்த குழந்தைகளுக்கு மட்டுமன்றி அன்பு நாடும் அனைவர் மீதும் கருணைகாட்டும்.

எமது சிறுவர்கள் பல்வேறுசமூக.அரசியல் காரணங்களினால் தமது தாய் தந்தையரை இழந்துள்ள நிலையில் தங்கள் தாய்மை அவர்கள் இழப்புக்களை ஈடுசெய்யும் என்பது திண்ணம்.

**"உங்கள் வாழ்வை அர்த்தமாக்கி சிறுவர்கள் வாழ்வையும் அர்த்தமுள்ளதாய் வழி காட்டும் தாயாகுங்கள்."**

**எஸ்ஓஎஸ் தாய்**

- வயது: 28-45 இக்கு உட்பட்டு நல்ல தேக ஆரோக்கியமும் நற்பண்பும் கொண்டிருத்தல்.
- குடும்பப் பொறுப்புக்கள் அற்ற தாய்மையுள்ளம் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

**உங்களுக்கு**

- பிள்ளைகளுடன் வாழ்வைப் பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பம்
- உணவு, வதிவிடம், மருத்துவ பராமரிப்பு
- முதல் மூன்று மாதங்களிற்கு மாதாந்தம் 10,000ரூபாய் நான்காம் மாதத்திலிருந்து பன்னிரண்டாம் மாதங்கள் வரை 11,000ரூபாய் ஒருவருடத்தின் பின் 13,000ரூபாய் இரண்டுவருடங்களின் பின் 19,000ரூபாய் வருடாவருடம் 10வீதசம்பளஅதிகரிப்பு
- வேறெங்கிலுமில்லாதவாறு இரட்டை நன்மையாக **ஊழியர் சேமலாப நிதியுடன் வாழ்நாள் ஓய்வூதியமும்**



எனக்கு அம்மா எண்டா நிறைய பிடிக்கும். ஆனா அம்மா சாமியிட்ட போயிட்டா. அப்பாவும் போயிட்டார் இப்ப எனக்கு அம்மா வேணும்....

இந்தக் குரலோடு இணைய விரும்பின்உங்களது சுயவிவரக்கோவையினை இவ்விளம்பரம் வெளியாகும் திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**தொடர்புகளுக்கு:**
**எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்**
**இல 219, நாயன்மார் வீதி,**
**நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.**

தொ.பே.: 021 221 1101,
077 236 6106,
077 226 4681

மின்னஞ்சல்: arjunan.swaminathan@soscvsrilanka.org
vanitha.senathirajah@soscvsrilanka.org

(C/11627)

# ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்



# பு மலர் – 28.08.2013

## தேர்த்திருவிழா சிறக்கட்டும்

முன்னாளில் பொன்னாலயம் என்று அழைக்கப்படும் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம் தோன்றிய காலம் எமக்குத் தெரியாது. திருவடி நிலையில் இந்திரனின் வலையில் ஆமை வடிவில் அகப்பட்ட ஸ்ரீமந் நாராயணன் இவ் வாலயத்தில் ஸ்ரீதேவி பூமிதேவி சமேதராய் எழுந்தருளியுள்ளார். ஆவணி மாத உற்சவத்தில் தேர்த்திரு விழாவும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் உறியடி உற்சவமும், அன்று இரவு நிகழும் கிருஷ்ண ஜெயந்தி விழாவும் சிறப்பான நிகழ்வாகும். மறுநாள் திருவடி நிலையில் நடைபெறும் தீர்த்த திருவிழாவும், அதற்கு மறுநாள் நிகழும் மணவாளக்கோல ஊர்வலமும், திருக்கல்யாண வைபவமும் இன்னும் சிறப்பானவையாகும். இவற்றிலும் இன்று நடைபெறும் தேர்த்திருவிழா விலும் பங்கு பெறும் பக்தர்கள் பெரும் பேறுபெற்ற வராவார்.

கண்டோம் கண்டோம் கண்டோம்
கண்ணுக்கினிய கண்டோம் தொண்டீர்
எல்லோரும் வாரீர் தொழுது நின்றி ருத்தும்
வண்டார் தண்ணந்துழையான் மாதவன்
பூதங்கள் மண்மேல் பண்தான் பாடிப் பரந்து
திரிகின்றனவே கிருஷ்ணஜெயம்

சி.ரங்கராசா
பொதுச் செயலாளர்
பரிபாலனசபை.

## தலமும் இருப்பிடமும்

தட்சிணகைலாச மகாஷேத்திரங்கள் இருக்கப் பெற்றதும் சுவர்க்கத்திலும் பார்க்க அழகுள்ளதுமாகிய இலங்கையின் வட பாகத்தில் வீணாகான புரமென்று சொல்லுகின்ற யாழ்ப்பாணத்தில் மேற்குத்திக்கில் நீர் நிறைந்த குளங்களும் வயல்களும் முன்னே இருக்கவும், உவர் நீர்க் கடலும் சமுத்திர மும்தெற்கு, மேற்கு திசைகளில் பொருந்தவும் பெற்ற தாய் இவற்றுக்கு நடுவண் சதுரங்கமென்னும் மணற் பூமியில் பொன்னாலயம் என்னும் திவ்யஸ்தலம் இருக்கின்றது. ஆலயத் துக்கு முன்னே குறுக்காகச் செல்லும் தெருக் கரை மார்க்கமாகப் பருத்தித்துறை க்குப் போகலாம். ஆலயத்துக்குமுன் (கிழக்கு மேற்காகச்) செல்லும் மண்தெரு, மூளாய் மார்க்கமாக யாழ்ப்பாணம் செல்லும் பிரசித்தமான தெருவைச் சந்திக்கிறது.

தலப்பெயர்கள்

இத்தலத்துக்கு சுவர்ணாலயபுரி, சதுரங்கம், பொன்னாலயம் என்ற பெயர்கள் கூறப்படுகின்றன.

சுவர்ணாலயபுரி

இந்திரன் வசிக்கப்பெற்றதனாலும் இந்திர விமானம் ஆதி கூர்மத்தோடு தோன்றியபடியாலும் இப்பெயர் பெற்றது.

சதுரங்கம்

ஆலய உற்பத்திக் காலத்தில் கடல் அலையினால் ஒதுக்கப்பட்ட பெருமணலில் ஆமையானது விடப்பட்டுக் கல்லானவுடன் அவ் விடத்திலேயே ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. அதனால் இப்பெயர் உண்டாயிற்று. அரங்கம் என்பது விட்டுணுவுக்கு பிரீதியாக அமைந்த தலப் பெயர் பாரதநாட்டிலும் ஸ்ரீரங்கம், ஆதிரங்கம் எனப் பல அரங்கங்கள் உள்ளன.

பொன்னாலயம்

முன்னொரு காலத்தில் விட்டுணு மூர்த்தியை மகாலக்குமி பூசித்த ஸ்தலம் பொன்னென்னும் பல பொருளொரு சொல் ஈண்டு இலக்குமியைக் குறித்து நின்றது. அன்றி பொன்னம்பலம் பொன்னரங்கம் என்பன போல இதுவும் ஒரு காலத்துப் பொன்னால் அமைந்த ஆலயமாய் இருந்திருக்க வேண்டும் என்றும் கூறுவர்.

கோயிலமைப்பு

இந்த ஆலயம் பொன்னாலை என்னும் கிராமத்தின் மேற்கே கிராமத்தைப் பார்ப்பது போல் கிழக்கு நோக்கிய சந்நிதி யுடன் மிக அழகாக விளங்குகின்றது. இதற்கு இப்போது இரு பிரகாரங்களே உள. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் ஏழு பிரகாரங்கள் இருந்தன. அவற்றில் ஏழாவது பிரகாரத்தின் முன்னுள்ள கணேசர் ஆலயம் இப்போதும் உள்ளது.

இப்போது தேர் ஓடும் வீதியில் அதாவது கோயிலுக்குப் போகின்ற முன்னமைப்பில் இவ்வாலயத்தோடு புராதனமாய மைந்தவரும் வரந்தரு பவருமான நரசிங்க பைரவர் வீற்றிருந்தருளுகின்றார். உட்பிரகாரத்தில் தெற்கே நாகதம்பிரான், வட மேற்கே சனீஸ்வரன் கோயிலும், வடக்கே தீர்த்தக் கிணறும் வன்னியும் அடுத்தாற்போல நவக்கிரக கோயிலும் வசந்த மண்டபமும், ஈசான திசையில் யாக மண்டபமும் இருக்கின்றன.

தலப்பெருமை

செய்தற்கு அரிய பெரிய திருப்பணி குளக்கோட்டு மகாராசனால் செய்யப்பட்டது. அவனால் அக்காலத்தில் அமைக்கப்பட்ட ஏழு வீதிகளும் பின்னே ஒல்லாந்தரால் இடிக்கப்பட்டு சங்கானை முதலிய ஏழு இடங்களில் கிறிஸ்தவ ஆலயங்களாகக் கட்டப்பட்டன. இப்போதும் சீரிய முறையில் கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. முன்னே புலவர்களாலும் பக்தர் களாலும் பாடப்பெற்ற பதிகங்கள் அநேகம் இப்போது இல்லாமல் போயின சிலவே உள்ளன. பறாளாய் விநாயகர் பள்ளு என்ற நூலில் இந்தலப் பெருமை கூறப்பட்டுள்ளது. ❋

## வாழ்த்துச் செய்தி

காத்தல் தொழில் புரியும் பொன்னாலை வரதராஜப் பெருமாள் இன்று இரதமேறி பக்தர்களுக்கு அருள் பாலிக்க வுள்ளார். பொன்னாமையாக வந்து பொன்னாலையில் வீற்றிருந்து அருள்பாலிக்கின்ற வரதராஜப் பெருமானின் அற்புதங்கள் அளப்பரியன.

இன்றைய இரதோற்சவத்தின் மூலம் உலகெங்குமுள்ள மக்களுக்கு சாந்தியும் சமாதானமும் கிடைப்பதற்கும் அவர்கள் துன்ப துயரங்களின்றி வாழ வழி சமைப்பதற்கும் எல்லாம் வல்ல எம்பெருமானாகிய பொன்னாலையானை வாழ்த்தி ஆசி கூறி அமை கின்றேன்.

கோவிந்த நாம
சங்கீர்த்தனம்
ஸ்ரீ ராம ஜெயம்.
சிவப்பிரகாசம் கைலநாதன்
பொன்னாலை
தேவஸ்தானத்
தலைவரும்
தர்மகர்த்தாவும்
முகாமையாளரும்,
பரிபாலன சபை.

## ரணையாளர்கள் ★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

(C/10915)
(10,6)

ஈஸ்வரா நெற்கபே
ஈஸ்வரா பல்பொருள் வாணிபம்
காரைநகர் வீதி, சுழிபுரம்.

S.T.PARAMESWARAN & CO. (PVT) LTD,
TRANSPORT SERVICES
Colombo - Jaffna - Colombo
Head Offioe: 182, Central Road, Colombo - 12
Tel: 011 234 7210, Fax: 011 2395472
Branch Office: 79, Stanley Road,Jaffna.
T.P. 021 222 5504

சிவாஸ் மில்
பிள்ளையார் கோயிலடி,
கரைநகர் வீதி, சுளிபுரம், மூளாய்.

பானு ரவல்ஸ்
திருமண வைபவங்கள், விழா நிகழ்வுகளுக்குக் குறித்த நேரத்துக்கு ஒழுங்கு செய்து தரப்படும்.
காரைநகர் றோட், மூளாய்.

New Star Medicals
Main Street Moolal.
T.P. 021 225 0456




கணேஸ் ஸ்ரோஸ்
பல்பொருள் வாணிபம்
மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாயவிலைக்குப் பொருள்களை பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான் வீதி, பண்டத்தரிப்பு.

கேதீஸ் களஞ்சியம்
பல்பொருள் வாணிபம்
மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாய விலைக்கு பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
சத்தியகாட்டுச் சந்தை, சுழிபுரம்.
தொ.பே. 077 908 7939

நகுலேஸ்
ஹாட்வெயார்
கட்டடப் பொருள்கள் (மண் கல் உட்பட),
பெயிண்ட் வகைகள் யாவும்
நியாய விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
தெல்லிப்பளை வீதி, பண்டத்தரிப்பு.
தொடர்பு: 077 717 4445

## பணியாளர் தேவை

1) விற்பனையாளர்
2) சிட்டை எழுதுநர்
3) கணக்காளர்
4) உதவியாளர்
5) மேற்பார்வையாளர்

பழக விரும்பும் இருபாலாரும் தொடர்புகொள்ளவும்.
சம்பளம் 15000 ரூபா வழங்கப்படும்.

யாழ்.போன்சோப்,
இல.9, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே.இல:021 222 3817
077 361 1282

## BRITISH COLLEGE OF LANGUAGE LEARNING

IELTS
U.K. செல்வோருக்கான A1,B1
இத்தாலி மொழி
SPOKEN ENGLISH
புதிய பிரிவுகள் ஆரம்பம்



23, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 077 132 7818
181, பிரதான வீதி, நெல்லியடி. 021 373 4121
(C/11391) (45.6)

## தவறிவிட்டது

NPJA 8047 இலக்க மோட்டார் சைக்கிளுக்குரிய பதிவுச் சான்றிதழ் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தொ.பே. 077 967 1967 உடன் தொடர்புகொண்டு ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## வீடு விற்பனைக்கு

மரவேலைப்பாடுகளுடன் கூடிய 6 அறைகளைக்கொண்ட வீடும், வீட்டுடன் கூடிய 5¾ பரப்பு விஸ்தீரணம் கொண்ட காணியும், பருத்தித்துறை வீதி, இருபாலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 236 6106

## விற்பனைக்கு

18'' அகலம் × 20' நீளம் × 2'' கனம் உடைய பாலை பட்டடைப்பலகை விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 713 0872

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி, நாவலடி வீதியில் 3¼ பரப்புக் காணியும், முதலியார் வீதி, நவாலி, மானிப்பாயில் 4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 075 851 1798

## வீடு வாடகைக்கு தேவை

சகல வசதிகளுடன் கூடிய வீடு கீழ் வரும் இடங்களில் தேவை
- கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
- கோவில் வீதி,நல்லூர்.
- கச்சேரி நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்.

தொடர்பு : 0777 721768

## வாகனம் விற்பனைக்கு

அதி சிறந்த நிலையிலுள்ள ரொயோட்ரா Town Ace டீசல் வான் விற்பனைக் குண்டு.

தொடர்பு:அன்பு 077 788 5011

## அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை முகாமைத்துவத்துக்கும் நிதிக்குமான உதவியாளர்

மேற்கண்ட பதவிக்கான விண்ணப்பங்கள் எம்மால் கோரப்படுகின்றன

தகைமைகள்:

01. க.பொ.த. உயர்தரத்தில், வணிகத்துறையில் சித்தியுடன் டபிள் ஏரி அல்லது எச்.என்.டி.ஏ படித்தவர்.
02. கணக்கீடு சார்ந்த முன் அனுபவம் உடையவர் (விரும்பத்தக்கது).
03. கணினியில் ஆகக்குறைந்தது எம்.எஸ். ஒவ்பிஸ் இல் அனுபவம் உள்ளவர்.
04. ஆவணப் பேணலில் முன் அனுபவம் (விரும்பத்தக்கது).
05. ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் கணினியில் வேலைசெய்யும் திறன் உடையவர்.
06. சொந்தமாக ஆங்கிலம், தமிழ் மொழிகளில் கடிதம் வரையும் ஆற்றல் உடையவர்.
07. ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் எழுதவும் வாசிக்கவும் அறிவு உடையவர்.
08. ஆங்கிலத்தில் பேசும் ஆற்றல் உடையவர் (விரும்பத்தக்கது).
09. 25 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். அல்லது ஓய்வு பெற்றவராயின், மேற்கூறிய முதலாவது தகைமைக்கு சமமான தகைமையுடன் ஏனைய இரண்டாவது தொடக்கம் எட்டாவது வரை கட்டாயத் தகைமைகளாகக்கொள்ளப் படும்.
10. **விண்ணப்பங்கள் யாவும் 12 செப்ரெம்பர் 2013 இக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு** செயலாளர் சி.ஏ.சி.எம்., ஆசிய இல்லம், மருதனார்மடம், சுன்னாகம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

* சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆசிய இல்லம்,
சுன்னாகம்.

(39233) (45.6)

செயலாளர்:
சி.ஏ.சி.எம்.

## STUDY MEDICINE IN RUSSIA

KRUSK STATE MEDICAL UNIVERSITY மற்றும் TVER STATE MEDICAL UNIVERSITY

- SLMC, WHO, UNESCO, AMC, US MEDICAL COUNCIL ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட முதற்தர பல்கலைக்கழகங்கள்
- இலங்கையிலிருந்து 700 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்கின்றனர்
- முற்றிலுமான ஆங்கில மொழிமூல கற்கைநெறி
- வருடத்திற்கு 4000 USD + Hostel வசதி இலவசம்
- மிகக்குறைந்த ஆரம்பக்கட்டணம்
- விண்ணப்பித்து இரண்டு மாதங்களில் ரஷ்யா செல்லலாம்
- VISA 100% உத்தரவாதம்
- விடுமுறை காலங்களில் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று வரக்கூடிய வாய்ப்பு

Russian Education Centre
Sri Lanka

தொடர்புகளுக்கு :
Dr.Sivaraman Sanjey
Mob: 0773460324
Tel: 0114377388/0112769833
Email: snsanjey@yahoo.com

## A/L பரீட்சைகளின் பின் கொம்ப்யூட்டர் படிப்புகளுக்கு அதிகம் ஏன் செலவிட வேண்டும் ?

Mega ஸ்கொலர்ஷிப்
you can Win 75%

### ஸ்கொலர்ஷிப் பரீட்சை

O/L , A/L பரீட்சை முடித்த மாணவர்கள், கொம்ப்யூட்டர் கல்வியில் ஆர்வமுடையவர்கள் மற்றும் 15 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் மெகா இலவச பரீட்சையில் பங்குபற்றலாம்.

செப்டெம்பர் 8th ஞாயிறு

CSC - ASIAN COMPUTER EDUCATION

இலவச பரீட்சை மாதிரி வினாத்தாளையும் (Model Paper) அனுமதிகளையும் எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2G ஸ்ரான்லி வீதி,021-2225677 |
| நெல்லியடி | கொடிகாமம் வீதி,021-2262399 |
| சாவகச்சேரி | கட்டுக்கானி வீதி,021-2270267 |
| கிளிநொச்சி | A9 வீதி,ஆனந்தபுரம்,021-2283925 |
| வவுனியா | 192, குருமன்காடு சந்தி,024-2226050 |

நால்வர்
சுலபமாகப்
பயணிக்க...



பஜாஜ்
முச்சக்கர வண்டி

பயணங்கள் மேற்கொள்ளும் போது குடும்ப அங்கத்தவர்களோ, நண்பர்களோ ஒன்றாகப் பயணிப்பதிலுள்ள சுகமே தனி. குடும்ப அங்கத்தவர்களோ அல்லது நண்பர்களோ வைபவங்களுக்கும் நிகழ்வுகளுக்கும் சென்று வர மிகவும் பொருத்தமான வாகனம் புத்தம் புதிய பஜாஜ் முச்சக்கர வண்டி.

அதுமட்டுமன்றி...
- கைக்கடக்கமான விலை
- எரிபொருள் சிக்கனம்
- குறைந்த பராமரிப்புச் செலவு
- போதியளவு அசல் உதிரிப்பாகங்கள்
- நாடெங்கும் சேவை நிலையங்கள்
- சிறந்த விற்பனைக்குப் பிந்திய சேவை



விலை: ரூ.470,950/-

(C/11393)

நிதி, காப்புறுதி சேவையுடன் மற்றைய வசதிகள் மற்றும் ஆலோசனைகளுடன் விற்பனைக்கு பின்னரான சேவைகளுக்கு எங்களை நாடவும்.

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com

பஜாஜ் முச்சக்கர வண்டி
வாழ்வை வளமாக்கும்
வகையான
குடும்ப வாகனம்.

## பொதுநலவாய மாநாட்டையொட்டி பேச்சு, சித்திர, கட்டுரைப் போட்டிகள்

கொழும்பு.ஓக.28

எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் பாடசாலை மட்டத்தில் கட்டுரை, பேச்சு மற்றும் சித்திரப் போட்டிகள் நடத்தப் படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

'பொதுநலவாய நாடுகளின் அபிவி ருத்தி மற்றும் சமூக சமநிலை' என்ற பொதுவான தலைப்பில் நடைபெறும் இந்தப் போட்டிகளில் தமிழ், சிங் களம் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் கலந்து கொள்ளலாம்.

வலய அடிப்படையில் நடை பெறும் போட்டிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெறும். மாகாண மட்டத்திலான போட்டிகள் செப்டெம்பர் 15 முதல் 30ஆம் திகதி வரை நடைபெறும்.

இந்தப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாண வர்களின் பெயர் விவரங்கள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக் கப்படல் வேண்டும் 6ஆம், 7ஆம், 8ஆம் தர மாணவர்களின் கட்டுரை 250 சொற்க ளுக்குள் அமைய வேண்டும்.

அவ்வாறே 9ஆம், 10ஆம், 11ஆம் வகுப்பு மாணவர்களின் கட்டுரை 350 சொற்களுக் குட்பட்டதாகவும், 12ஆம், 13ஆம் தர மாணவர்களின் கட்டுரை 500 சொற்களை உள்ளடக்கியதாகவும் அமைய வேண்டும்.

பேச்சுப் போட்டி 12ஆம் 13ஆம் தரமாண வர்க ளிடையே மாத்திரம் நடத்த உத்தேசிக்கப்பட் டுள்ளது. இந்தப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறுவோருக்கு பெறுமதியான சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச)

## திறமைசாலிகளை விரட்டுகிறார் ரணில்

கொழும்பு.ஓக.28

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க திறமைசாலிகளை விரட்டியடிப்பதாக போக்கு வரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித் தார். ரணில் விக்கிரமசிங்க திறமைசாலிகளை சரியான முறையில் பயன்படுத்தாத காரணத் தினால் அவர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ பயன்படுத்திக் கொள்கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்று இவ்வாறான ஒரு துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. திற மையான இளைஞர்களை ரணில் விரட்டியடிக் கின்றார். ஆளும் கட்சியில் இணைந்து கொண்ட தயாசிறி ஜயசேகரவின் இடத்தை, சுஜீவ சேனசிங்கவினால் நிரப்ப முடியும் என்று அவர் குறிப்பிட்டார். (ச-சி)

## தூக்குத் தண்டனைகளை வாழ்நாள் சிறையாக குறைக்க ஆலோசனை

கொழும்பு. ஓக. 28

மரண தண்டனை விதிக் கப்பட்டு சிறையில் வாடுபவர் களின் குற்றங்களை ஆராய்ந்து குற்றங்களின் தன்மைக் கேற்ற முறையில் அவர்க ளுக்கு வாழ்நாள் சிறைத் தண்டனை விதிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவை கேட்டுக்கொள்ளும் வகையிலான பரிந்துரை களை வழங்குவதற்கென நீதி அமைச்சு குழுவொன்றை நியமித்துள்ளது.

தூக்குத் தண்டனை விதிக்கப் பட்ட 1,000 பேருக்கும் மேற் பட்ட எண்ணிக்கையானோர் தற்போது சிறைகளில் அடைக் கப்பட்டு இருக்கிறார்கள்.

> தூக்குத் தண் டனை விதிக்கப் பட்ட 1,000 பேருக்கும் மேற்பட்ட எண் ணிக்கையினர் தற்போது சிறைகளில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

ஆனால் 1978 ஆம் ஆண் டுக்குப் பிறகு தூக்குத் தண் டனை விதிக்கப்பட்ட எவருக் கும் அந்தத் தண்டனை நிறைவேற்றப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

இவ்வாறான கைதிகளின் தண் டனைகளை வாழ்நாள் சிறைத் தண்டனைகளாக மாற்றி அமைப்பது பற்றி ஆராய் வதற்காக ஓய்வுபெற்ற மேன் முறையீட்டு நீதிபதி ஒருவரின் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை வெளியிட் டுள்ள நீதி அமைச்சின் செயலா ளர் கமலினி டி சில்வா இது குறித்து மேலும் கூறுகையில்:- "இந்தக் குற்றவாளிகளின் விடயங்களை ஒன்றன்பின் ஒன்றாக நாம் ஆராய்வோம். பின்னர் அரசமைப்பின் 34 ஆவது பிரிவுக்கு அமைவாக ஜனாதிபதியின் முடிவுக்குச் சமர்ப்பிப்போம்"-என்றார். (ப)

## வலி. தெற்குப் பிரதேசத்தில் உள்ள 12 மயானங்களும் புனரமைக்கப்படும்

வலி.தென்மேற்கு.ஓக. 28

வலி.தெற்குப் பிரதேசத்திலுள்ள 12 மயானங்களும் மக்களின் வசதி கருதி சபை நிதியிலிருந்து பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன. இதற்கான ஒழுங்குகளைப் பிரதேச சபை மேற் கொண்டுள்ளது.

வலி.தெற்குப் பிரதேச சபையின் எல்லைக் குள் 12 மயானங்கள் உள்ளன.

இவற்றில் 7 மயா னங்கள் மட்டும் மயான அபிவிருத்திச் சபையின் கீழ் சிறப் பாக இயங்கி வருகின் றன.

அபிவிருத்திச் சபையில்லாமல் இயங்கும் ஏனைய 5 மயானங்களுக்கும் மயான அபிவிருத்திச் சபையைத் தெரிவு செய்வதற்கான நடவ டிக்கைகளில் பிரதேச சபை ஈடுபட்டுள்ளது.

இந்தப் பிரதேசத் திலுள்ள மயானங்கள் பல குறைபாடுகளு டன் இயங்கி வருவத னால் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

இவற்றைக் கருத்திற் கொண்டு பிரதேச சபை ஒவ்வொரு மயா னத்தையும் ஒன் றரை லட்சம் ரூபா செலவில் புனரமைக்க முன்வந்துள்ளது.

சபை நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட விருக்கும் இவ் வேலைகள் இந்த வருடத்துக்குள் முடிவடைய வேண்டியிருப்பதனால், தேவைகள் பற்றி சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மூலம் மதிப்பீடு செய்வதற்கான ஒழுங்குகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஓ-115)


**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள வைத்தியசாலைக்கு கீழ் குறிப்பிட்டுள்ள வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

| |
|---|
| வைத்தியர்கள் ( RMO,RMP,MBBS,MD - Russia ) |
| தாதிமார்கள் |
| சாரதி (வாகன அனுமதிப்பத்திரம் எடுத்து 5 வருடம் இருக்கவேண்டும்) |

தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்
0777 721768

**வீடு காணிகள் விற்பனைக்கு**

மீசாலை வடக்கு APCக்கு அருகில் வசதிகளுடன் கூடிய வீடு, காணி 4¼ பரப்பு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 899 2028
077 620 4728
077 134 5438
(சி 11637)(12.6)

**விற்பனைப் பிரதிநிதி & சாரதி தேவை**

கிளிநொச்சி நகரில் இயங்கி வரும் எலக்றோனிக் நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் உடன் தேவை.
1) விற்பனைப் பிரதிநிதி
2) சாரதி
தொடர்பு: 071 200 7607
021 228 3885
(37612) (12.6)

**வடமாகாண சபைத் தேர்தல் 2013**

**யாழ் மாவட்டம்**



தமிழ்மண் காத்திட
தன்மானம் நிலைத்திட
தந்தை செல்வா வழியில்
சுயாட்சி பெற்றிட
உங்கள் தெரிவு
இலங்கை தமிழரசுக் கட்சி



முதன்மை வேட்பாளர்
**சி.வி. விக்னேஸ்வரன்**
(ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர்)

அனுபவமிக்க பொறியியலாளர்
**வே. சிவயோகன்**




**(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)**

**உள்ளத்தால் உவகை அடைகிறோம்**



**பொன்னம்பலம் உமாசங்கர்**
(B.Com (Jaf)M.Com (Kelaniya)
PGDE(NIE)NDBF, Spi.Trd.Com)

மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் கணக்கியல் துறையில் விரிவுரை ஆற்றுபவரும் காரைநகர் திக்கரை முருகன் ஆலய அறங்காவலரும் இலங்கையின் புகழ்பூத்த பொது அறிவு, நுண்அறிவு நூல் எழுத்தாளரும் சகல போட்டிப் பரீட்சைக்கான கருத்தரங்குகளை நாடளாவிய ரீதியில் நடத்தி வருபவரும் எமது நண்பருமான பொ. உமாசங்கர் இன்று BMICHஇல் நடைபெறும் களனி பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் வணிக முதுமாணி (M.Com) பட்டம் பெறுவதை இட்டு வாழ்த்துவதுடன் அவர் விரைவில் கலாநிதி பட்டத்தினையும் பெற எமது வாழ்த்துக்கள்.

ஆசிரிய நண்பர்கள்: P.கமல்தாசன், T.தனேந்திரன்.
(39207)(12.6.)

**காணி விற்பனைக்கு**

A -9 வீதியில் மீசாலை கமநல சேவை நிலையத்துக்கு முன்பாக புகையிரதப் பாதைக்கு அருகில் 4 பரப்பு வீதம் மூன்று துண்டுகளாகவுள்ள பாதையுடன் கூடிய 12½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
கிளிநொச்சி, கரடிப்போக்கு 5ஆம் வாய்க்காலில் (நாதன் கமம்) உள்ள 3ஏக்கர் 19.6 பேர்ச் வயல்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 308 6717

**கல்வி நிர்வாகசேவை பரீட்சை வழிகாட்டல் சுற்று (6) இறுதிச்சுற்று**

செப்ரெம்பர் 15ஆம் திகதி நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்கான பயில்வுகள் தொடர்கின்றன. அனேக புதிய ஆர்வலர்களின் வேண்டுகோள்களுக்கு இணங்க அனைவருக்குமான விசேட நிபுணத்துவ வழிகாட்டல்.

காலம் : 31.08.2013, 01.09.2013, 07.09.2013, 08.09.2013.
இடம் : யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி.

பா. தனபாலன் (பணிப்பாளர்)
ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்,
528, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P. 077 936 0607




**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**



இன்று (28.08.2013) தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடும் எமது அன்புத் தங்கை
**சிவானுகா வாசுதேவக்குருக்கள்**
அவர்கள் சிவனருளால் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

சிவன் கோயில், சித்தன்கேணி.

வாழ்த்துவோர்
ஓஷலன், சஸ்வினி, சைந்தவி, சிவாத்மிகா, ஸ்ரீநயா.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது கல்வி நிறுவனத்தின் பொது அறிவு நுண்ணறிவுத் துறை விரிவுரையாளரும் மருதானை தொழில்நுட்பக் கல்லூரயின் கணக்கியல்பீட விரிவுரையாளருமான
**பொன்னம்பலம் உமாசங்கர்**
(B.Com.,M.Com,(Kelaniya)PGDE,NDBF,Spl Trd.com)
அவர்கள் இன்று BMICH களனி பல்கலைக்கழகத்தின் முதுவணிகமாணி (M.Com)பட்டத்தினைப் பெறுவதனையிட்டு பாராட்டிவாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்கள் பெற எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக.



Congratulations on your success

**நாவலர் கல்விச் சமூகம்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

# நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம், ஓக. 28
நல்லூர் கந்தன் ஆலய பதினேழாம் திருவிழாவான இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மணி மண்ட பத்தில் சமயச் சொற்பொழிவும், கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

நிகழ்வில் 'பகவத்கீதை காட்டும் வாழ்வியல்' என்ற பொருளில் பு.சந்திரவேலின் சிறப்புச் சொற்பொழிவும், மல்லாகம் பழம்பதி அறநெறிப் பாடசாலை, நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலை, அச்செழு மதுரை மீனாட்சி அம்மன் அறநெறிப் பாடசாலை, வல்வெட்டித்துறை வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

★ ★ ★

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 மணிக்கு தெய்வீக இசையரங்கம் நடைபெறவுள்ளது.

இசை அரங்கில் பாடலை திருமதி யசோதா ஸ்ரீகுமரன், திருமதி கவிதா தில்லைராசா ஆகியோர் வழங்க, அணிசேர் கலைஞர்களாக வயலின்- திருமதி எம்.பிரவீணா, மிருதங்கம்- என்.மாதவன், முகர்சிங்-எஸ்.தில்லைராசா ஆகி யோர் கலந்து கொள்வர்.

★ ★ ★

நல்லூர் கந்தனின் பெருந் திருவிழாவை முன்னிட்டு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் நல்லை ஆதீனத்தில் நடத்தும் தெய்வீக இசை அரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு கலாவித்தகர் திருமதி அமுதா உமாகாந்தனின் வீணை இசை நடைபெறவுள்ளது.

★ ★ ★

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்ட பத்தில் நடைபெறும் மகாபாரத தெய்வீகத் தொடர் இசைப் பேருரை இன்று மாலை 6.30 மணிக்கு ஆரம்பாகும். பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா 'சுபத்திரை கல்யாணம்' பற்றி இசைப் பேருரை நிகழ்த்துவார்.

★ ★ ★

நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இன்று இரவு 7.15 மணிக்கு சின்மயா மிஷன் ஆச்சிரம வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமிகள் 'இறை நாம மகிமை' என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார்.

★ ★ ★

நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் சைவத் தமிழ் பண்பாட்டு கழகத்தினர் நடத்தி வரும் தெய்வீகப் பேரு ரையில் இன்று மாலை 6.30 மணிக்கு "ஆலயமும் ஆன் மிகமும்" என்னும் தலைப்பில் சிவத்திரு எஸ்.கே. என். தவராசாவின் சொற்பொழிவு இடம்பெறும். (ந-86-7-14)



நன்றி நவிலலும்
அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

செல்வி
இரத்தினசபாபதி
ஷியானி
(மு/வித்தியானந்தக் கல்லூரி,
முள்ளியவளை -2015 ஆம் வருட
உயிரியல் பிரிவு மாணவி)

தாயின்மடியில்
16.12.1996

இறைவன் அடியில்
15.07.2013

கடந்த 15.07.2013 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது பாசமிகு மகளின் பிரிவுச் செய்தி அறிந்து வந்து ஆறுதல் கூறியோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைத்து உத்தியோகத்தர்கள், பாடசாலை கல்விச் சமூகத்தினர் அனைவருக்கும் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்ட முல்லை மாவட்ட கால்நடை திணைக்களம், சுகாதாரத்திணைக்களம், கூட்டுறவுச் சங்கங்கள், உதவிப் பணிப்பாளர்கள், கால்நடை வைத்தியர்கள், திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் அனைத்து திணைக்கள பணியாளர்கள் (கச்சேரி - முல்லைத்தீவு) அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் மற்றும் கற்பகவிநாயகர் ஆலயம், குமுழமுனை, கற்பகவிநாயகர் ஆலயம் கணுக்கேணி, நாகதம்பிரான் ஆலயம் குமுழமுனை, குன்றின்மேல் குமரன் ஆலயம் குமுழமுனை, கிராம அபிவிருத்திச் சங்கம், குமுழமுனை மத்தி மு/வித்தியானந்தாக் கல்லூரி முள்ளியவளை, தொலைபேசி, தந்தி மூலமாக ஆறுதல் கூறியவர்களுக்கும் இன்னும் பல வழிகளில் உதவிபுரிந்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

நாளை (29.08.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தயவுசெய்து இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாகக் கருதி கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

6ஆம் வட்டாரம்,
குமுழமுனை, முள்ளியவளை.

குடும்பத்தினர்.

## அலங்காரத் திருவிழா

வலி.வடக்கு, ஓக. 28
சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரியம்மன் (வடலியம்மன்) ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரெண்டு நாள்கள் நடைபெறவுள்ளது. இறுதி நாளான 7 ஆம் திகதி நடைபெறும் சங்காபிஷேகத்துடன் உற்சவம் நிறைவடையும். தினமும் பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்பமாகும் அபிஷேகம் வசந்த மண்டபப் பூசைகளைத் தொடர்ந்து சுவாமி மாலை 6.00 மணிக்கு வெளி வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும். (ந-86)

## யாழ். சிறையில் 5 கைபேசிகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக.28
யாழ். சிறைச் சாலையின் கைதிகளைத் தடுத்து வைத்திருக்கும் பகுதியில் இருந்து 5 கைத்தொலைபேசிகள் திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை தரப்பினர் தெரிவித்தனர்.

சிறையில் உள்ளவர்களை வழமை போன்று திங்கட்கிழமை சோதனையிட்டபோதே அவர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் 5 கைத்தொலைபேசிகளும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்தில் திருட்டுச் சம்பவங்கள் உட்பட பல குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களிடமிருந்தே கைத்தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக மேலும் தெரிவித்தனர். (ந-4)


## மோ.சைக்கிளோட்டிக்கு விபத்தில் பாதிப்பு

தென்மராட்சி, ஓக.28
ஹன்ரர்-மோட்டார் சைக்கிள் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளோட்டிக்கு காலில் பாதிப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கொடிகாமம் பகுதியில் இடம்பெற்றது. அல்வாய் தெற்கைச் சேர்ந்த அச்சுதம்பிள்ளை தமிழ்ச்செல்வன் (வயது-36) என்பவரே காயமடைந்தவர் ஆவார். காயமுற்றவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஓ-9)

## கை கலப்பில் இருவர் காயம்

வியாபாரம் தொடர்பாக எழுந்த வாக்குவாதம் கை கலப்பாக மாறியதில் தாக்குதலுக்கு உள்ளான இருவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற சம்பவத்தில் சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியைச் சேர்ந்த எம்.எச்.நவ்பர் (வயது-30), புத்தளத்தைச் சேர்ந்த எச்.எம். நிமால் (வயது-43) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவார். (ஓ-9)

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவம் செப்.4 இல் ஆரம்பம்



வடமராட்சி, ஓக.28
வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்தப் பெருந் திருவிழா எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 17 தினங்கள் இடம் பெறும் பெருந்திரு விழாவில் ஆறாம் திருவிழாவான 9 ஆம் திகதி வரை சுவாமி உள்வீதியுலா வந்தருள்வார். ஏழாம் திருவிழாவான 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைமுதல் சுவாமி வெளிவீதி உலா வருவார்.

முக்கிய திருவிழாக்களான குருக்கட்டு விநாயகர் தரிசனம் 11 ஆம் திகதி புதன்கிழமையும், வெண்ணெய்த் திருவிழா 12 ஆம் திகதி வியாழக்கிழமையும், துகில் திருவிழா 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், பாம்புத் திருவிழா 14 ஆம் திகதி சனிக்கிழமையும், கம்சன் போர்த்திருவிழா 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், வேட்டைத் திருவிழா 16 ஆம் திகதி திங்கட்கிழமையும் சப்பரத் திருவிழா 17 ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் இடம்பெறும்.

தேர்த் திருவிழா 18 ஆம் திகதி புதன்கிழமையும், சமுத்திரத் தீர்த்தத் திருவிழா 19 ஆம் திகதி வியாழக்கிழமையும், பட்டுத் (கேணித்) தீர்த்தத் திருவிழா 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நடைபெறும்.

தினமும் பகல் திருவிழா காலை 8 மணிக்கும், இரவுத் திருவிழா மாலை 4.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

பெருந்திருவிழாவை ஒட்டி பருத் தித்துறை - மந்திகை ஊடாக வல்லிபுரக்கோயில், பருத்தித்துறை-தும்பளை ஊடாக வல்லிபுரக் கோயில், யாழ்ப்பாணம்- வல்லிபுரக் கோயில் ஊடாக பருத்தித்துறை ஆகிய வழித் தடங்களில் விசேட பஸ் சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (ஓ-8)


## நெல்லியடி ம.ம.வி. 9 ஆம் திகதியே ஆரம்பம்

நெல்லியடி, ஓக.28
தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் நடைபெறவிருப்பதால் நெல்லியடி ம.ம.வி.மூன்றாம் தவணைக்காக எதிர்வரும் 9 ஆம் திகதியே மீண்டும் திறக்கப்படும் என்றும் ஆனால் தரம் 11 மாணவர்களுக்கான வகுப்புக்கள் எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் நடைபெறும் என்றும் அதிபர் அறிவித்துள்ளார். (ஓ)

## மயானத்திலும் தேர்தல் சுவரொட்டி

வடமராட்சி, ஓக.28
வடமராட்சி பிரதேசத்தில் மயானங்களிலும் தேர்தல் பிரசார சுவரொட்டிகள் ஒட் டப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசத்தில் உள்ள துன்னாலை கியான் காடு இந்து மயான மதிற் சுவரில் ஆளும் கட்சி ஒன்றின் வேட்பாளரை ஆதரித்து தாராளமாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (ஓ-8)

நான்காம் ஆண்டு நினைவாக.....



தோற்றம்
10.03.1943

மறைவு
28.08.2009

அமரர்
தம்பியப்பா
தெட்சணாமூர்த்தி
(முன்னாள் உதவித்திட்டமிடல் பணிப்பாளர்)

அன்பிலே இமையமாகி எம் அகத்துளே கோயிலாகி
கண்களுள் மணியாய் எம்மைக் காத்திட நின்ற அப்பா!
தங்கமே! எம்மைவிட்டுத் தரித்திடா நீரோ இன்று
எங்கு தான் நான்கு ஆண்டு ஏகினீர்.....? ஆறோம் அப்பா...!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

19/2, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
[மண்டைதீவு, சரவணை]

உங்கள் நினைவாகவே வாழும்
...னர்.

பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
03.10.1977

உதிர்வு
20.08.2003

திதி:
தேய்பிறை அட்டமி

அமரர்
சிவசுப்பிரமணியம் விஜயன்

கருவறையில் நான் இருக்க காலனவன்
செய்த சதி தந்தை முகம் காணவில்லை
தவிக்கிறது எந்தன் மனம் பத்து ஆண்டு
கடந்த பின்பும் உங்கள் திருவுருவம்
காண்பதற்காய் ஏங்குகின்றேன் அப்பா!

இல.15, கன்னார லேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

மகன்
(கிருஷியன்)

# மாகாண அதிகாரங்கள் போதாதவை ஆயினும் அவற்றை நிராகரிக்க முடியாது

## புத்திஜீவிகளுடனான சந்திப்பில் விந்தன் தெரிவிப்பு

எதிர்வரும் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நாட்டின் இது கால தேர்தல்களைக் காட்டிலும் சர்வதேச முக்கியத்துவமுடையதாக அமைவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபைக்கான யாழ் மாவட்ட வேட்பாளரும் யாழ் மாநகர சபையின் உறுப்பினருமான கே.என்.விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை மாலை நல்லூரில் உள்ள தனியார் விடுதியொன்றில் புத்திஜீவிகளுடன் மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் நடத்திய கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபைத் தேர்தல் என்பது தமிழ் மக்களைப் பொறுத்தளவில் ஓர் ஆரம்பப் புள்ளியே தவிர அது இனப்பிரச்சினைக்கான முடிவான தீர்வல்ல. அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் நாம் ஏற்கனவே ஆராய்ந்திருக்கின்றோம்.

அரசமைப்பில் கொண்டு வரப்பட்ட இத் திருத்தம் இன்று நேற்றுக் கொண்டு வரப்பட்ட திருத்தமல்ல. இலங்கை இந்திய ஒப்பந்தத்துடனேயே கொண்டு வரப்பட்டுவிட்டது.

இந்த நிலையில் இத் திருத்தத்தில் தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்யத்தக்கதாக அதிகாரங்கள் இல்லை என்பதைத் தமிழர்கள் தெளிவாகப் புரிந்து வைத்துள்ளனர்.

இத் திருத்தத்தில் தமிழர் தரப்பில் அதிகாரங்கள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என நியாயபூர்வ மான அபிலாசை எம்மிடமும் எமது மக்களிடமும் உள்ளது.

அதேவேளை சிங்கள இனவாதிகள் பதின்மூன்றாவது திருத்தத்தில் இருந்து காணி பொலிஸ் அதிகாரங்களைப் பிடுங்கி விட வேண்டும் என வீரியமாகச் செயற்படுகின்றனர். இதனை நாம் கண்டிக்கின்றோம். எதிர்க்கின்றோம்.

போரின் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வொன்றைத் தமிழ் மக்களுக்கு வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்.

எனினும் எதனையும் இந்த அரசு தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் வழங்க வில்லை.

பதின் மூன்றாவது திருத்தத்துக்கு அப் பால் சென்று தீர்வை வழங் குவதாகக் கூறினார்.

இவ்வாறான அரசாங்கத்தின் கூற்று உலகத்தை ஏமாற்றுவதற்கானது.

இதனை வெளியுலகும் உணரத் தொடங்கிவிட்டது. தற்போதும் தமிழர்களுக்கு தீர்வொன்றை வழங்குவதாக கூறி உலகத்தை ஏமாற்றுவதற்காகவே இந்த அரசு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது.

இந்த நிலையில் சகலரும் ஒன்றிணைந்த வகையில் செயற்பட்டு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியை பெரு வெற்றியாக மாற்ற முன்வர வேண்டும் - என்றார். (த)



**சிங்கள இனவாதிகள் பதின்மூன்றாவது திருத்தத்தில் இருந்து காணி பொலிஸ் அதிகாரங்களைப்பிடுங்கி விட வேண்டும் என வீரியமாகச் செயற்படுகின்றனர்.**

# மற்றொரு மகேஸ்வரனை உருவாக்க வடக்கு மக்களுக்கு இது அரிய தருணம்

## ஐ.தே.க. முதன்மை வேட்பாளர் உரிமையுடன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்.ஒக.28

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைத் துணிச்சலுடன் முன்வைக்கக் கூடிய முதுகெலும்புள்ள ஒரே அரசியல் தலைமை ஐ.தே.கட்சிதான். அக்கட்சிக்கு வாக்களிப்பதன் மூலம் நீதியான - நிலையான - நீடித்து நிற்கக்கூடிய - ஒரு தீர்வுக்கான தமது உறுதிப்பாட்டை வடபகுதி மக்கள் வெளிப்படுத்த வேண்டும். அதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம் தமிழ் மக்களுக்குக் கிடைத் திருக்கின்றது. அதனை அவர்கள் தவறவிடக்கூடாது

இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார் வடமாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராகவும் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளராகவும் போட்டியிடும் தியாகராஜா துவாரகேஸ்வரன்.

மாகாண சபைத் தேர்தலை ஒட்டி தமது அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தி தாம் வெளயிட்ட அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

ஆயுதப் போராட்ட ரீதியில் புலிகள் துணிச்சலான செயற்பாட்டை வெளிப்படுத்தினார்கள் என்பது உண்மையே.

ஆனால் ஜனநாயகப் போராட்டத்திலே துணிச்சலான செயற்பாட்டை வெளபடுத்தி நிரூபித்தவர்கள் அமரர் தியாகராஜா மகேஸ்வரனும், அவர் பலப்படுத்தி நின்ற ஐ.தே.கட்சித் தலைமையும்தான் என்பதை தமிழர்கள் மறந்துவிடக்கூடாது.

தென்னிலங்கையின் சந்திரிகா அரசு ஜெயபேரிகை முழங்கிக் கொண்டிருந்த சமயத்தில்தான், அதற்கு மாறுபட்டு நின்று தமிழர்களை நோக்கி சமாதான சமிக்ஞையை வெளிப்படுத்தத் தமது ஐ.தே.க. தலைமையைத் தூண்டி வழிப்படுத்தினார் அமரர் மகேஸ்வரன். அதன் விளைவாக பன்னாட்டுக் கண்காணிப்புடனான யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. தமிழர்களுடன் முழு அளவிலான சமாதானத்துக்கு ஐ.தே.க. தலைமையிலான அரசு முன்வந்தது. சர்வதேச அனுசரணையுடன் தமிழர் தலைமையோடு பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. முழு அளவிலான நிறைவேற்று அதிகாரங்களோடு ஜனாதிபதி சந்திரிகா தனது கெடுபிடி நடவடிக்கைகளை ஏவிவிட்டு தடைகளைப் போட்ட சமயத்திலும் கூட, அதனை மீறி, தமிழர்களுக்கு சமஷ்டி அடிப்படையில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வுத் திட்டம் ஒன்றை வழங்கத் தயார் என்று ஒஸ்லோ அறிக்கை மூலம் பிரகடனப்படுத்தும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க முடிவை ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க. அரசு வெளியிட்டது. இந்தத் துணிச்சலான முடிவை ரணிலின் அரசு முன்னெடுக்க முழுப் பலமாகவும் பின்புல சக்தியாகவும் செயற்பட்டவர் எமது மறைந்த தலைவர் தி.மகேஸ்வரன்தான்.

ஆனால், அத்தகைய நீதியான, நியாயமான, தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு ஒன்று தமிழர்களுக்குக் கிட்டக்கூடாது என்றுகங்கணம்கட்டியஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பேரினவாத நிறைவேற்று அதிகாரத் தலைமை அதற்காக ஐ.தே.க. அரசைக் கலைத்து ஆட்சியை ஆக்கிரமித்துக்கொண்டது.



அந்தப் பரிதாப நிலையின் பின்புலத்தில், அந்தச் சூழலில் இருந்து மீண்டு உரிய பிராயச்சித்தம் செய்வதற்கு எமக்குக் கிடைத்த வாய்ப்பை 2005 நவம்பரில் நாம் கோட்டை விட்டோம்.

காலம் காலமாகத் தமிழர்கள் மீது கொடூர வன்முறையையும் தீவிர யுத்தத்தையும் தென்னிலங்கை அரசுகள் ஏவிவிட்ட சமயத்தில் ஐ.தே. கட்சிக்குள் நுழைந்து, அக்கட்சியில் ஒரு பாரிய அரசியல் நிலைமாற்றத்தை ஏற்படுத்தி, அக்கட்சியை ஆட்சி பீடத்தில் ஏற்றி, அமைதி வழியின்பால் தீவிர கரிசனை கொண்ட ஓர் அரசுக் கட்டமைப்பை உருவாக்கும் பேரதிசயத்தை இந்த மிலேனியத்தின் ஆரம்பத்தில் அமரர் தி.மகேஸ்வரன் புரிந்தாரே. அதேபோன்ற ஓர் அதிசயத்தை - பிரமிப்பை - ஏற்படுத்திக் காட்டுவோம் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

அத்தகைய துணிச்சலான அரசியல் செல்நெறியை நோக்கி எமது தலைமையை வழிப்படுத்துவதற்காக எங்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை தாருங்கள் என்று வடமாகாண வாக்காளர்களைக் கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது.

# முக்கியத்துவத்தை உணர்ந்து தேர்தலில் வாக்களியுங்கள்

## அகில இலங்கை மக்கள் ஜனநாயகக் கட்சி வேண்டுகோள்

அம்பாறை. ஒக.28

தமிழின விடுதலைப் பயணத்தில் முக்கிய மைல் கல்லாக வடமாகாண சபைத் தேர்தல் அமைந்துள்ளது. இந்த முக்கியத்துவம் உணர்ந்து தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அமோக வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பாக விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்த நாட்டில் உரிமை பெற்ற, தனித்துவமிக்க இனமாக தமிழர்கள் வாழ வேண்டுமென்பதற்காக உரிமைப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆரம்பத்தில் அஹிம்சை வழியிலும் பின்னர் ஆயுதப் போராட்ட வழியிலும் முன்னெடுக்கப்பட்ட தமிழின விடுதலைப் போராட்டம் இன்று அஹிம்சை வழியில் முன்னெடுக்கப்படுகின்றது.

நம் தலைவர்கள் இன்று முன்னெடுத்துள்ள தமிழின விடுதலைப் பயணத்தில் சில ஒளிக்கீற்றுக்கள் தென்படவும் தொடங்கியுள்ளன.

இந்த நிலையில் நமக்காக நம் தமிழின மக்களுக்காக பல்வேறு தியாகங்களுக்கு மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றே பல்வேறு நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது.

எனவே நம் மக்கள் கூட்டமைப்புக்குப் பெரிதும் பக்க பலமாகத் திகழ வேண்டும்.

அந்த வகையில் இந்த மக்கள் பலத்தை மேலும் வலுப்படுத்தி தமிழின விடுதலைப் பயணத்துக்கு உந்து சக்தியை மேலும் வழங்க வடமாகாண சபைத் தேர்தல் இன்று பெரும் சந்தர்ப்பமாக அமைந்துள்ளது

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பின்னால் தமிழ் மக்கள் ஏகோபித்து அணி திரள்வதன் மூலம் தன்னாதிக்கமுள்ள சபையாக வடமாகாண சபையை எதிர்காலத்தில் மிளிரச் செய்யலாம்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-30)

**ஆரம்பத்தில் அஹிம்சை வழியிலும் பின்னர் ஆயுதப் போராட்ட வழியிலும் முன்னெடுக்கப்பட்ட தமிழின விடுதலைப் போராட்டம் இன்று அஹிம்சை வழியில் முன்னெடுக்கப்படுகின்றது. நம் தலைவர்கள் இன்று முன்னெடுத்துள்ள தமிழின விடுதலைப் பயணத்தில் சில ஒளிக்கீற்றுக்கள் தென்படவும் தொடங்கியுள்ளன.**







சந்திப்பு தி.அமுதன்



# சலுகை அரசியல் வேண்டாம் உரிமை அரசியலே தேவை

## கூட்டமைப்பு வேட்பாளர் சிவஞானம் கூறுகிறார்

மாகாணசபையின் உள்ளூராட்சி மற்றும் கூட்டுறவுத்துறையுடன் நான் மிகவும் பரிச்சயமான ஒருவன். எனவே கைப்பற்றப்படும் மாகாணசபை ஊடாக எங்கள் மக்களுக்கு சிறப்பான சேவையை தன்னால் செய்ய முடியும் என்று தெரிவிக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவராகிய சி.வி.கே.சிவஞானம். வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாரபில் போட்டியிடும் சி.வி.கே. சிவஞானம் உதயனுக்கு வழங்கிய நேர்காணல் இது.

யாழ். மாநாகரசபையின் ஆணையாளராக 16 வருடங்கள் கடமையாற்றியிருக்கின்றேன். இதில் 4 வருடங்கள் தவிரந்து எஞ்சிய 12 வருடங்களும் மாநகர சபையை தனித்து நடத்தியிருக்கின்றேன். நான் நிறைவேற்றுத் தரம் கொண்ட உத்தியோகத்தர். அத்துடன் பட்டயச் செயலாளர்.

1987 ஆம் ஆண்டிலிருந்து அரசியல் தலைமைகள் முடக்கப்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் எனது பெயரைப் பிரேரித்திருந்தார்கள். அந்தக் காலத்திலிருந்து தமிழ் மக்களுக்காக ஏனைய அரசியல் தலைமைகள் குரல் கொடுக்காத காலத்திலும் நான் குரல் கொடுத்திருக்கின்றேன். எனது அரசியல் பிரவேசம் என்பது, 1952 ஆம் ஆண்டு கோப்பாய் தொகுதியில் அமரர் வன்னிய சிங்கம் போட்டியிட்ட போது அவருக்குத் தொண்டனாக இருந்து ஆரம்பமானது. நான் தொடர்ச்சியாக தமிழரசுக் கட்சி ஆதரவாளன். இருப்பினும்நான் அரசசேவையில் இருந்த காலத்தில் தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையில் இருக்கவில்லை. 2001 ஆம், 2004 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல்களில் நான் இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியூடாகப் போட்டியிட்டிருந்தேன். அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணி எனக்கு வேட்பாளர் நியமனத்தை நாடாளுமன்ற தேர்தலில் வழங்கவில்லை என்பதால் தமி ழீழ விடுதலைப் புலிகளே காங்கிர ஸோடு இணைத்து என்னைத் தேர்தலில் களமிறக்கியிருந்தார்கள்.

இலங்கை இராணுவம், இந்திய இராணுவம் இங்கு நிலை கொண்டிருந்த காலத்திலும் பொருளா தாரத் தடைகள் நடைமுறைப்படுத்தப்பட காலத் திலும் இந்த மண்ணிலிருந்து நான் செயற்பட்டவன். பொருளாதாரத் தடை நிலவிய ஆறு ஆண்டுகள் காலப் பகுதியில் யாழ்.பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் தலைவராக இருந்தேன். கப்பல் மூலம் யாழ்.குடாநாட்டுக்கு பொருள்களை இறக்குவித்து நியாயமான விலையில் விநியோகிக்க ஏற்பாடு செய்திருந்தேன்.

இதனைவிட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவராகவும் இருந்திருக்கின்றேன். இப்போதும் சிறுவர் தொடர்பான அரச சார்பற்ற நிறுவனத்தையும் இயக்கி வருகின்றேன்.

மாகாணசபைநிர்வாகம்எங்களுக்கான அரசியல் தீர்வாக அமையாது. மாகாணசபை முறைமை என்பது இந்த நாட்டின் கட்டமைப்பு. கட்டமைப்பு ஊடாக அதில் சில அதிகாரங்கள் இருக்கின்றன குறைபாடுகளும் இருக்கின்றன.

அபிவிருத்தி, திட்டமிடல், உள்ளூராட்சி, கூட்டுறவு போன்ற துறைகள் மாகாணசபை பட்டியலில் ஒதுக்கப்பட்ட விடயங்கள். அந்த விடயங்களில் இன்றைய ஆளுநர் தலைமையிலான மாகாண நிர்வாகம் பக்கச்சாரபாக நடக்கின்றது.

தமிழர் தாயகப் பகுதிகளில் நிலப் பறிப்பு, சிங்களக் குடியேற்றம், இனப்பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. இவற்றை எதிர்த்து நிற்கின்ற அல்லது முறியடிக்கின்ற தேவை எங்களுக்கு இருக்கின்றது. அபிவிருத்தி தொடர்பில் இந்த அரசும் சரி இதற்கு முந்தைய அரசுகளும் சரி எங்களோடு கலந்தாலோசித்ததில்லை. மத்தியிலே எடுக்கப்படும் முடிவுகளை இங்கு திணிக்கின்றார்கள். எங்களைப் பொறுத்த வரையில் மக்களின் உணர்வுகளைப் புரிந்தவர்கள் நாங்கள். அபிவிருத்தித் திட்டமிடலை நாங்கள் மதிப்பீடு செய்து அதனை நாங்களே இந்த மாகாண சபை முறைமையூடாக நடைமுறைப்படுத்த முடியும்.

தமிழ் கட்டமைப்பைக் கொண்ட சபையாக வடமாகாணசபையை உருவாக்குவதன் ஊடாக இதனை ஒரு தளமாக பாவித்து எங்கள் உரிமைப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்க முடியும்.

மக்களுக்கான உதவிகளை புலம் பெயர் தமிழர்களிடமிருந்து பெற்று வழங்க முடியும். இதற்கு எனது அரசார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றிய அனுபவம் முழுமையாக கை கொடுக்கும்.

60 ஆண்டுகளாக இதுவரை நடத்தப்பட்டது சலுகை அரசியலே. இதில் தருபவர்கள் விரும்பிய நேரத்தில் தரலாம் அல்லது தராமல் போகலாம். ஆனால் உரிமை அரசியல் என்பது எப்போதும் எங்களுடையது. அதை நாங்கள் பிரயோகித்து எங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்காகத்தான் வட மாகாண நிர்வாகம் எங்கள் கையில் இருக்க வேண்டும்.

மக்கள் என்னைத் தேரவு செய்ய வேண்டும் என்பதற்கு பல காரணங்கள் உண்டு. இந்த மக்களோடு மக்களாக நின்றவன் நான். ஒரு போதும் இங்குள்ள மக்களை விட்டு விட்டு ஓடவில்லை. அத்துடன் முன்னரே குறிப்பிட்டதைப்போன்று மாநகர ஆணையாளராக, கூட்டுறவுத் துறைத் தலைவராக இருந்து சேவை செய்தவன். இதற்கு மேலாக மக்களது புனர்வாழ்வு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் போதுமான அனுபவம் கொண்டவன். எங்களுடைய இளைய சந்ததியினருக்குரிய தொழில்வாய்ப்புக்களை மாகாணசபையுடாக உருவாக்க முடியும். அதற்கு எனது கல்வியறிவு இருக்கின்றது. எங்களுடைய பிரதேசம் அதிகளவிலான மனிதவளத்தைக் கொண்ட பிரதேசம். தகவல் தொழில்நுட்பம் தொடர்பான நிறுவனங்களை இங்கு உருவாக்க முடியும். இங்குள்ள இணங்கண்ட வளங்களைக் கொண்டு தொழிற் சாலைகளை உருவாக்க முடியும். இவற்றினூடாக தொழில் வாய்ப் புக்களை வழங்க முடியும் - என் றார்.




# சுதந்திரக் காற்றை தமிழர்கள் இதுவரை சுவாசிக்கவேயில்லை

## கூட்டமைப்பு வேட்பாளர் ரதன் ஆதங்கம்

1948ஆம் ஆண்டு இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தபோதும் நாம் எமது மண்ணில் சுதந்திரக் காற்றை இன்னும் சுவாசிக்க வில்லை. கடந்த அறுபது வருடகால எமது போராட்டத்தில் அண்ணன் பிரபாகரன் நடத்திய வீரம் செறிந்த போராட்டமே தமிழினத்தை தலைநிமிர வைத்தது என்றால் அது மிகையாகாது என இலங்கை தமிழரசுக்கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞர் அணித் தலைவரும் வடமாகானசபை வேட்பாளருமான எம்.எம். ரதன் தெரிவித்தார். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வடமாகாண சபைத் தேர்தல் அலுவலகம் ஒன்றை வீரபுரத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ரதன் இவ்வாறு தெரிவித்தார்.

செட்டிகுளம் பிரதேசசபையின் உபதலைவர் எஸ். சந்திரன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது: எமது தாயகத்தின் விடுதலைக்காக தந்தை செல்வா அகிம்சை ரீதியாக முப்பது வருடம் போராடினார். அதனைக் காலத்துக்குகாலம் ஆட்சிப்பீடம் ஏறிய சிங்கள தேசத்தின் தலைமைகள் ஏற்றுக்கொள்ளவில்லை. சத்தியாக் கிரக பேராட்டத்தைக் கூட அவர் கள் கருத்தில் கொள்ளவில்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் 1972 ஆம் ஆண்டு இளையனாக இருந்தபோது எமது இனத்திற்கு எதிரான அநீதிகளைக் கண்டு அண்ணன் பிரபாகரன் ஆயுத வழியிலான போராட்டத்தை ஆரம்பித்தார். அந்தப் போராட்டத்தின் ஊடாக தரையிலும், கடலிலும், வானிலும் என எமது போராளிகள் நிகழ்த்திய வீரம் செறிந்த தாக்குதல்களால் இலங்கைப் படைகள் சின்னாபின்னமானதை யாரும் மறுக்கமுடியாது. அந்தப் போராட் டமே தமிழர்களின் முகவரியான போராட்டம் .சர்வதேச அரங்கில் வரலாற்று முக்கியத்துவம் பெற்றிருக்கும் வாய்ந்த போராட்டம் என்பதை வரலாற்றின் ஊடாக நாம் காண்கின்றோம். அந்த விடுதலை போராட்டத்திலேதான் ஆயிரம் ஆயிரம் வீரமறவர்கள் தமது இன்னுயிர்களை இந்த மண்ணில் அர்ப் பணம் செய்தார்கள். தொடர்ந்தும் நாம் போராடுவோம் என்பதை இத் தேர்தலினூடாக நிரூபிப்போம் என்றார். (கு-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

## தமிழருக்குத் தீர்வுகிட்ட தொடர்ந்து போராடுவேன்

உங்கள் நிலைமைகள் தொடர்பில் நான் நன்கு புரிந்து கொண்டுள்ளேன். உங்கள் பிரச்சினைகளை நேரில் அறிய எனக்கு இந்தச் சந்தர்ப்பம் உதவி இருக்கிறது. பாதிக்கப்பட்ட நீங்கள் அனுபவிக்கும் வேதனைகளையும் பிரச்சினைகளையும் கண்டறிந்திருக்கிறேன். உங்களது காணிகளை (கேப்பா பிலவு மக்களின் ) உங்கள்அனுமதியில்லாமல் இராணுவம் பறித்து வைத்திருக்கிறது என்பதையும், அதற்கு நிவாரணம் தரவில்லை என்பதையும் நான் விளங்கிக்கொள்கிறேன். உங்கள் மனக் குமுறல்களை என்னிடம் எடுத்துக் கூறியிருக்கிறீர்கள். இவை தொடர்பில் நான் அதிக கவனத்தை செலுத்த உள்ளேன். ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது உங்கள் பிரச்சினைகள் குறித்து நிச்சயம் பேசுவேன். அத்துடன் நின்றுவிடமாட்டேன். ஐ.நாவிலும் இது குறித்து அறிக்கை சமர்ப்பிப்பேன். எனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி உங்களுக்குத் தீர்வைப் பெற்றுத் தருவதற்கு போராடு வேன் - என்றார். (கு-5-6-435)

## நிமலரூபனின் தாயாருக்குஆறுதல் கூறினார் நவி

சேர்ந்த 15 பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட நிமலரூபனின் தாயார் தனது மகன் சிறைச்சாலையில் கொடூரமாக அடித்துக்கொல்லப்பட்டதாகத் தெரிவித்து கண்ணீர் விட்டுக் கதறி அழுதார். உடனே அவரைக் கட்டித் தழுவி ஆறுதல் கூறினார் நவநீதம்பிள்ளை.

குறித்த சந்திப்பில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலும், காணாமற்போனோர் தொடர்பிலும் இறுதிக் கட்டப் போரில் சரணடைந்து காணாமற்போனவர்கள் தொடர்பிலும் தெரிவிக்கப்பட்டது.

வலி.வடக்கு மீளக்குடியேற்றக் குழுவின் சார்பில் கலந்து கொண்டவர்களால் 23 வருடங்களாக குறித்த பகுதி உயர்பாதுகாப்பு வலயமாக முடக்கப்பட்டுள்ளமை குறித்து எடுத்து விளக்கப்பட்டது.

அத்துடன் குறித்த பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்து அல்லலுறும் வேளையில் இராணுவத்தினர் அந்த மக்களின் காணிகளில் விவசாயமும் யோக்கட் தொழிற்சாலையும் ஹோட்டலும் நடத்துவது குறித்தும் அவரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனைக் கேட்ட நவநீதம்பிள்ளை குறித்த விடயங்கள் தொடர்பில் தான் முன்னரே அறிந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இராணுவத்தினரின் அதிகரித்த பிரசன்னம், புலனாய்வாளர்களின் நெருக்குதல் தொடர்பிலும் நவநீதம்பிள்ளைக்குச் சுட்டிக்காட்டப்பட்டதுடன், மனுக்களும் கையளிக்கப்பட்டன. (கு-5)

## சாவகச்சேரியில் நேற்றிரவு துப்பாக்கிச் சூடு

தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இதேகுழுவைச் சேர்ந்த மற்றுமொரு ஆதரவாளரான கச்சாய் வடக்கைச் சேர்ந்த விஸ்வராஜன் விஸ்வரூபன் (வயது-30) என்பவர் கல்லால் தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வேட்பாளர் குமார் சர்வானந்தாவிடம் தொடர்புகொண்டு கேட்டபோது.

மூன்று வாகனங்களில் வந்த வேட்பாளர் அங்கஜனின் குழுவினரே எம்மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர். நாம் அவர்களை நேரில் பார்த்தோம். இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளோம் என்று தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் அங்கஜன் இராமநாதனுடன் தொடர்புகொள்ள முயன்றபோது அவரது கைத்தொலைபேசி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அங்கஜனின் பிரத்தியேக செயலாளரைத் தொடர் புகொண்டு கேட்டபோது.

"நாம் வழக்கம் போல் தேர்தல் பிரசாரத்தை முடித்துவிட்டு வரும் வழியில் சாவகச்சேரியில் எமது கட்சி அலுவலகத்தின் முன் வாகனத்தை நிறுத்திவிட்டு இறங்கினோம். அவ்வேளை குமார் சர்வானந்தா அங்கஜனை நோக்கித் துப்பாக்கியால் சுட்டார். பொலிஸார் அங்கஜனைத் தள்ளிவிட அவர் தப்பித்துக் கொண்டார். எனினும் பொலிஸ் உத்தி யோகத்தர் மீது சன்னம் பாய்ந்தது. இதனால் அவர் காயமுற்றார் -என்றார்.

இதுகுறித்து தாம் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-9-86)

## மண்ணில் புரண்டு கதறிய உறவுகள்

யாழ்ப்பாணத்துக்கு சென்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்தப் போராட்டம் நடந்தது. மு.ப. 10 மணிக்கு ஆரம்பமான இந்தப் போராட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த காணாமற்போனோரின் உறவினர்கள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.

இதில் காணாமற்போனோரின் பெற்றோர், மனைவிமார், சகோதரர்கள், பிள்ளைகள் எனப் பலரும் தமது உறவுகளின் படங்களை கையில் ஏந்தியிருந்தனர். அவர்கள் நிலத்தில் புரண்டு கண்ணீர் விட்டு கதறியழுத காட்சிகள் அங்கு நின்ற அனைவரையும் நெஞ்சுருகச் செய்தது.

இந்தப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனின் மனைவி அனந்திஎழிலனும்பங்கேற்றார்.

போராட்டத்தில் ஈடுபட்டோர், யாழ். பொது நூலகத்தில் வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடலில்ஈடுபட்டிருந்த நவநீதம்பிள்ளையிடம் தமது பிரச்சினைகளை கூற செல்ல முற்பட்டவேளை பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். எனினும், அவர்கள் பொலிஸாரையும்பொருட்படுத்தாது பொலிஸாரின் தடைகளை தகர்த்து நூலக வாசலருகில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் நவநீதம்பிள்ளையின் ஒழுங்கமைப்புக் குழு அவரை நூலகத்தின் பின் வழியாக யாழ். ஐ.நா. அலுவகத்துக்கு அழைத்துச் சென்று விட்டனர். இதையறிந்த மக்கள் தமது போராட்டத்தை நிறுத்தினர். (கு-4)

## விபத்தில் தந்தை சாவு மகன் படுகாயம்

உயிரிழந்ததுடன் இவரது மகனான ம.முகிலன் (வயது -10) என்பவர் படுகாயமடைந் தார். விபத்தை அடுத்து வல்வெட்டித்துறைப் பொலிஸார் இ.போ.ச. பஸ் சாரதியை கைது செய்துள்ளதுடன், விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-4-8)

## நீங்களும் காணாமற்போவீர்கள்

விவரங்களை திரட்டும் நடவடிக்கையில் புலனாய்வாளர்கள் மும்முரமாக ஈடுபட்டனர் என்றும் குற்றம் சாட்டப்பட்டது. புலனாய்வாளர்களின் இந்த நடவடிக்கை குறித்து அங்கிருந்தவர்களால் உடனடியாக ஐ.நா. மனித உரிமை ஆணை யாளரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதது.

நவநீதம்பிள்ளை மக்களுடன் உரையாடிய இடங்களுக்கு சிவில் உடையில் சென்ற புலனாய்வாளர்கள் அவருடன் உரையாடியவர்களின் விவரங்களை பெற்றுக்கொண்டதாகவும் இதனால் அந்தப் பகுதிகளில் அச்ச நிலை ஏற்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இது குறித்து உடனடியாகவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

அதேவேளை, நேற்று ஆணையாளர் பயணம் செய்த முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு வீதிகளில் இராணுவத்தினர் இல்லை. பொலிஸாரே கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இராணுவத்தினரில் பெருமளவானோர் சிவில் உடையில் நடமாடினர் என்றும் சில இடங்களில் நவநீதம்பிள்ளையுடன் பேசக் கூடாது என்று மக்கள் மிரட்டப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது. (கு-5-6)

## நவிப்பிள்ளைக்காகப் பரந்தனில் காத்திருந்த மக்கள் விரட்டியடிப்பு

முன்னணியினரும் பரந்தன் சந்தியில் நேற்றுக்காலை 9.30 மணி முதல் காத்திருந்தனர்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் தமது மனக் குமுறல்களையும் வேதனைகளையும் எடுத்துக் கூறுவதோடு தமது உறவுகளின் நிலை தொடர்பாக அறிய உதவுமாறு அவரிடம் வேண்டுகோள் விடுப்பதற்காகவே இவர்கள் காத்திருந்தனர்.

ஆனால் அங்கு சென்ற பொலிஸாரும் புலனாய்வாளர்களும் 'இங்கே இன்று ஆர்ப்பாட்டம், கவனயீர்ப்பு எதுவும் இல்லை. உடனடியாக இவ்விடத்தை விட்டுச் செல்லுங்கள் என்று கூறி அங்கு கூடியிருந்தவர்களை விரட்டினர்.

பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்களின் இந்த நடவடிக்கை தமது வேதனையை மேலும் அதிகரித்துள்ளதாக அங்கு கூடியிருந்த மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, பரந்தன் - பூநகரி வீதி, பரந்தன் - முல்லைத்தீவு வீதி ஆகியவற்றில் பஸ்ஸுக்காகக் காத்திருந்தவர்களும் அந்த இடங்களைவிட்டு அப்புறப் படுத்தப்பட்டனர்.

இவர்களில் பலர் பலவந்தமாக பஸ்களில் ஏற்றப்பட்டு வேறு இடங்களில் இறக்கிவிடப்பட்டதாகவும் தெரியவருகின்றது. (க-426-6)

# எமது பிள்ளைகளை மீட்டுத் தாருங்கள் உங்களை நம்பியே வந்திருக்கிறோம்

பிலவு பகுதிகளைச் சேர்ந்த மக்களை நேரில் சந்தித்து உரையாடினார்.

முள்ளிவாய்க்கால் முருகன் கோயிலடி புதிய வீட்டுத் திட்டத்துக்கு சென்ற ஆணையாளர் அங்குள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினார். அப்போது அந்த மக்கள் தமது பிரச்சினைகளை ஆணையாளருக்கு எடுத்துக் கூறினர்.

மீளக்குடியேற்றப்பட்டு நான்கு வருடங்கள் கடந்துள்ள போதும் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை என்றும் வீட்டுத் திட்டமும் கிடைக்கவில்லை என்றும் வேலைவாய்ப்பும் அரச செல்வாக்கு உடையவர்களுக்கு மட்டுமே இடம் வழங்கப்படுகிறது என்றும் தகுதி உள்ளவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்றும் அப்பகுதி மக்கள் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரிடம் முறையிட்டனர்.

"இறுதிக் கட்டப் போரின் போது எங்கள் பிள்ளைகளை எங்கள் கண்முன்னாலேயே படையினரிடம் கையளித்தோம். அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று உறுதியளிக்கப்பட்டதாலேயே படையினரிடம் அவர்களை கையளித்தோம். எங்கள் கண்முன்னால் அவர்கள் பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டார்கள். ஆயினும் இப்போது எமது பிள்ளைகள் உயிருடன் இல்லை என்று எமக்குக் கூறப்படுகிறது. எங்கள் கண் முன்னால் கொண்டு சென்ற பிள்ளைகள் எங்கே? பிள்ளைகளை இல்லை என்று சொல்வதற்கு படையினருக்கு என்ன அருகதை இருக்கிறது?" என்று அங்கு வந்திருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர்களில் ஒருவரான இளம்பரிதியின் (ஆஞ்சிநேயர்) தாயார், தளபதி குமரனின் தாயார் ஆகியோர் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் கூறினார்கள்.

முள்ளிவாய்க்கால் மக்கள் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஆர்ப்பாட்டம், போராட்டம் என்று நாங்கள் புறப்பட்டால் இராணுவப் புலனாய்வாளர்கள் எம்மை மிரட்டுகிறார்கள். அண்மையில் காணாமற்போன எமது பிள்ளைகளை மீட்டுத் தருமாறு கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்யப் புறப்பட்ட நாங்கள் வவுனியாவில் தடுத்து நிறுத்தப்பட்டோம். பொலிஸாரே எம்மை இவ்வாறு தடுத்து நிறுத்தினர். கொழும்பு சிங்களவருக்கு மட்டும் தலைநகர் அல்ல. அது தமிழருக்கும் தலைநகர் தான்.

முல்லைத்தீவு, வெலிஓயா, கொக்குத்தொடுவாய் ஆகிய பகுதிகளில் இருந்து 30 வருடங்களுக்கு முன்னர் நாம் படையினரால் வெளியேற்றப்பட்டோம். அந்த இடங்களில் நாங்கள் மீளக்குடியமர்ந்துள்ள போதும் எமது வயல் நிலங்கள் இப்போது சிங்களவரிடம் வழங்கப்பட்டுள்ளன. சொந்த உறுதிகள் எம்மிடம் இருக்க, போலி உறுதிகளை தயாரித்து வயல்களை சிங்களவருக்கு வழங்கி இருக்கிறார் ஜனாதிபதி - என்றனர்.

புதுமாத்தளன் அந்தோனியார் கோயிலடியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில், சிங்கள மீனவர்களின் அத்துமீறலால் தாம் மோசமாகப் பாதிக்கப்படுவ தாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் சிதைக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் எடுத்துக் கூறினர்.

உங்களின் வருகையை முன்னிட்டு இங்குள்ள பல இடங்களில் உள்ள இராணுவம் வெளியேறி உள்ளது என்று ஐ.நா. ஆணையாளரிடம் கூறிய புதுமாத்தளன் மக்கள், வெளியேறிய வீடுகளுக்கு தாம் மீண்டும் வருவோம் என படையினர் தம்மிடம் கூறிச் சென்றதாகவும் குறிப்பிட்டனர்.

கேப்பாபிலவில் நடைபெற்ற சந்திப்பில், எங்கள் காணிகளில் படையினர் நிலை கொண்டுள்ளனர். இதனால் நாம் சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாமல் அந்தரிக்கிறோம். சொந்த நிலம் எமக்குவேண்டும் என்று நவநீதம்பிள்ளையிடம் முறையிட்டனர்.

இதன்பின்னர் தனது பயணத்தை முடித்துக்கொண்டு இரணைமடு விமான தளம் ஊடாக திருகோணமலைக்கு பயணமானார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர். (கு-5)


### உடனடி வேலை வாய்ப்பு

INNOVAGE INTERNATIONAL (PVT) Ltd.

அமெரிக்க நிறுவனத்தின் 5 புதிய கிளைகள் வடக்கு, வடகிழக்கில் ஆரம்பம், நிரந்தர வேலைவாய்ப்பு.



* Customer Service
* Marketing executive
* Managers
* Asst. Managers

குறைந்தபட்ச கல்வித் தகைமை O/L
தகைமைக்கேற்ப பயிற்சி வழங்கப்படும்
பயிற்சியின் போது ரூபா. 12,000/= 15,000/-
பயிற்சியின் பின் ரூபா. 30,000/- -50,000/- சம்பளம்.
வெளிநாட்டில் தொழில் புரிய வாய்ப்பு வழங்கப்படும்.

NOTE
கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசத்தினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தங்குமிடவசதி இலவசம்
077 632 0962, 0778920777
077 190 8997.

### கார் விற்பனைக்கு

14-XXXX தொடரிலக்கமுடைய Toyota Corrilla Ae81 நல்ல நிலையிலுள்ளது உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0774488029

### வேலை ஆள்கள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை.
நாள் ஒன்றுக்கு ரூபா 300/= வழங்கப்படும்.
வயது 18 தொடக்கம் 30வரை.
வேலை நேரம் காலை 8மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை
தொடர்பு: 11A, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
021 222 3857


## நவிப்பிள்ளைக்கு எதிராகவும் போராட்டம்

இலங்கைக்கு ஏழு நாள் பய ணமாக வருகை தந்த நவநீதம்பிள்ளை, வடக்குக்கு இருநாள் பயணமாக நேற்றுமுன்தினம் வருகை தந்திருந்தார்.

இந்த நிலையில், யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று பஸ்களில் கொண்டுவரப்பட்டுக் கூடிய மக்கள் நவநீதம்பிள்ளைக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் காணாமற்போகச்செய்யப்பட்டவர்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் நவநீதம்பிள்ளை எடுக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டிய போராட்டக்காரர்கள், நவநீதம் பிள்ளைக்கு எதிராக கோஷங்களையும் எழுப்பினர். சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களே பங்கெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (கு-5)


### சீட்டிழுப்பு முடிவுகள்

குப்பிளான் தெற்கு நரசிங்க வைரவர் ஆலய வளர்ச்சிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 25.08.2013 ஞாயிற்றுக்கிழமை அதிர்ஷடம் பார்க்கப்பட்டது.

வெற்றிபெற்ற இலக்கங்கள்
1ஆம் - 5939 2ஆம்- 7176 3ஆம் -12266

ஆறுதல் பரிசில்கள்
(1) 293 (2) 7702 (3) 4296
(4) 14051 (5) 15888 (6)16024
(7) 9162 (8) 6227
(9) 9972 (10) 13219

தொ.பே.: 0777578851
(39261)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்.ஓக. 28
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று புதன் கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 3.45 மணி
தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகம் எதிர் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம்.
பி.ப. 4.45 மணி
தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் எதிர் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம். (ற-23)

-----------------

யாழ்ப்பாணம்.ஓக. 28
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று புதன்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்;
பி.ப. 3.30 மணி
ஞானமுருகன் 'பி' அணி கலைமதி 'ஏ' அணி.
பி.ப. 4.30 மணி
நியூட்டன் 'பி' அணி எதிர் ஞானமுருகன் 'ஏ' அணி. (ற-23)

-----------------

யாழ்ப்பாணம்.ஓக. 28
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று புதன்கிழமை பொமர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 4 மணி
நியூட்டன் 'ஏ' அணி எதிர் உடுப்பிட்டி யுத்
பி.ப. 4.45
சென்.சேவியர் 'ஏ' அணி எதிர் பொலிகை பாரதி வி.க.
(ற-23-422)

# வென்றார்கள் நல்ல நண்பர்கள்



யாழ்ப்பாணம். ஓக.28
கழக ஸ்தாபகர் எ.வி.தேவதாஸ் அடிகள் ஞபகாரத்தமாக காரைநகர் நல்ல நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்திய பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் நல்ல நண்பர்கள் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.
கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை இளந்தென்றல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற 7 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் நல்ல நண்பர்கள் விளையாட்டுக் கழகமும் கோவளம் விளையாட்டுக் கழகமும் மோதின.
முதலில் துடுப்பெடுத்தாடிய நல்ல நண்பர்கள் விளையாட்டுக் கழகம் 5 இலக்குகளை இழந்து 85 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.
86 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கோவளம் விளையாட்டுக் கழகம் 4 இலக்குகளை இழந்து 7 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் 60 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. நல்ல நண்பர்கள் விளையாட்டுக்கழகம் 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.
தொடர் ஆட்ட நாயகனாக நல்ல நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு வீரர் கோ.எடின்பரோவும், சிறந்த பந்து வீச்சாளராக கோவளம் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மயூரனும் தெரிவு செய்யப்பட்டனர்.
இந் நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக அமெரிக்கன் மிஷன் சார்பில் பிரான்ஸிலிருந்து வருகைதந்த தர்மக் கொடையாளர்கள் அக்னஸ் மற்றும் கிகோ ஆகியோர் கலந்து கொண்டனர்.
இந்தத் தொடரில் மொத்தமாக 9 கழங்கங்கள் பங்குப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ற-10)

## றோயல் உதைபந்துத் தொடர் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்.ஓக. 28
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று. நேற்று முன் தினம் திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் அரியாலை ஐக்கிய 'ஏ' அணி, ஞானமுருகன் 'ஏ' அணி ஆகியவை வெற்றி பெற்றன.
அரியாலை ஐக்கிய 'ஏ' அணிக்கும், அராலி சில்வெஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக 'ஏ' அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
ஞானமுருகன் 'ஏ' அணிக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக 'பி' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஞானமுருகன் 'ஏ' அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(ற-23)

## இலங்கை மேசைப்பந்து அணித்தலைவர் யாழில்



யாழ்ப்பாணம்.ஓக. 28
இலங்கை மேசைப் பந்தாட்ட அணித் தலைவர் சிறிசேன றொகான் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.
யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்றும் நாளையும் யாழ்.மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள மேசைப்பந்தாட்ட பயிற்சி முகாமில் பயிற்சிகளை வழங்குவதே அவரின் யாழ்ப்பாணப் பயணத்தின் நோக்கமாகும்.
தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வீர, வீராங்கனைகளுக்கான இந்த மேசைப்பந்தாட்டப் பயிற்சி முகாமில், இலங்கை தேசிய மேசைப் பந்து அணி வீரரான என். மலிந்தவும் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கவுள்ளார். (ற-23)

## போட்டி முடிவுகள்

யங்கம்பன்ஸ் உதைபந்துத் தொடர்



யாழ்ப்பாணம்.ஓக. 28
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் மனோகரா விளையாட்டுக்கழகம், கலைமதி விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.
மனோகரா விளையாட்டுக் கழக அணிக்கும், தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சிறந்த வீரனாக அனோஷன் தெரிவு செய்யப்பட்டார்
யங்கென்றிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், கலைமதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சிறந்த வீரனாக நிமல் தெரிவு செய்யப்பட்டார். (ற-23)

## போட்டி முடிவுகள்

நவசக்தி வி.க. உதைபந்துத் தொடர்

யாழ்ப்பாணம், ஓக. 28
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்படும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் பூமகள் விளையாட்டுக் கழகம், பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.
பூமகள் விளையாட்டுக் கழக அணிக்கும், செஞ்சுடர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பூமகள் விளையாட்டுக் கழகம் 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
ஆனைக்கோட்டை கலைஒளி விளையாட்டுக் கழக அணிக்கும் பொமர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையி லான ஆட்டத்தில் பொமர்ஸ் விளையாட்டுக் கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23-422)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம். ஓக. 28
நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் நேசராஜ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் எதிர்வரும் சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள அரையிறுதியாட்டங்களில் மோதவுள்ள அணிகள்:
பி.ப. 3.30 மணி
சென்.மைக்கல் வி.க. எதிர் அரியாலை ஐக்கியம் வி.க.
பி.ப. 4.30 மணி
றோயல்
அண்ணா
வி.க. (ற-23)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு
25.05.1945

உதிர்வு
30.07.2013

கடந்த 30.07.2013 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

### திருமதி சிவசுப்பிரமணியம் தங்கம்மா

அவர்களின் வீட்டுகிருத்தியக் கிரியைகள் நாளை(29.08.2013)வியாழக் கிழமை மு.ப.11.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை. குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சற்குணநாதன் (அத்தான்)




கந்தரோடை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சற்குணநாதன் (அத்தான்) நேற்று முன்தினம் (26.08.2013) திங்கட்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் மகேஸ்வரி (கனடா) தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- தையலம்மை தம்பதியரின் மருமகனும் கனகாம்பிகையின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும் நளினி (பிரான்ஸ்), சுமதி (பிரான்ஸ்), துஸ்யந்தி (பிரான்ஸ்), கலைவாணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் முகுந்தகுமார், சத்தியா, சுதன், கன்டோ (லண்டன்), பிறேமினி ( இலங்கை), சாந்தி (பிரான்ஸ்), மீனா (பிரான்ஸ்), சிந்து (பிரான்ஸ்), இராசன் (பிரான்ஸ்), தாசன் (லண்டன்) ஆகியோரின் மாமனும் பவா (கனடா), ரஜனி (கனடா), ரவி (சுவிஸ்), காலஞ்சென்ற பவி மற்றும் ரஞ்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரன் (கனடா), மலர்(சுவிஸ்), ஊக்கத் (பிரான்ஸ்), இளவரசி (லன்டன்), காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் கனகம்மா (பிரான்ஸ்), பாலசிங்கம் (நெதர்லான்ட்) ஆகியோரின் மைத்துனரும் செல்வம் (இலங்கை), கண்ணன் (பிரான்ஸ்), சோமன் (பிரான்ஸ்), ரஜனி (பிரான்ஸ்), இந்து (பிரான்ஸ்), வக்சலா (லண்டன்) ஆகியோரின் சிறியதந்தையும் சித்தார்த், சாகித்தியன், மிதுலன், நந்து, சகான், வசீகரன், முகிலன், அகசி, அக்சரா, நிதீஸ், கிருசான், அஸ்விந், அஷாந்த், காருண்யா, நந்தனா, தீபிகா, விஷால், மோனிசா, ரொஷீபா, ரக்ஷிகா, ஓவியா, நேகா, அனிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (27.08.2013) செவ்வாய்க்கிழமை, இன்று (28.08. 2013) புதன்கிழமை ஆகிய தினங்களில் காலை 9.30 மணி தொடக்கம் 11.30 மணி வரையும் 01.30 மணி தொடக்கம் பி.ப. 4.30 மணிவரையும் 07 Boulevard demenil montint, Paris-75011 (Metro Philippe auguste, Ligne 02) என்னும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு நாளை (29.08.2013) வியாழக்கிழமை மு.ப. 11.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை மேலுள்ள முகவரியில் கிரியைகள் இடம்பெற்று பின்னர் 2.30 மணிக்கு Cimetiere Due pere- Lachaise, 16,rue due repos 75020 paris metro gambetta மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகாம்பிகை (மனைவி) 0033143638392
ரஜனி 0033623280371 சுதன் 0033670955999
கன்டோ (லண்டன்) 00447984674027
சத்தியா 0033781454215 செல்வம் 0777555068 (சி/11396)(23-16-14)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்,
குடும்பத்தினர்.



# சாதிப்பாரா கலிஸ்

தென்னாபிரிக்காவின் சகலதுறை ஆட்டக்காரரான ஜாக்விஸ் கலிஸ் துடுப்பாட்டத்தில் நிலைத்து ஆட ஆரம்பித்தால் பின்னர் அவரை ஆட்டமிழக்க செய்வது என்பது எளிதான காரியமல்ல.

இது அவரது பள்ளி நாள்களிலிருந்தே அவருடைய இயல்பாக இருந்தது என்கின்றார் அவருடைய சிறிய வயது பயிற்சியாளரும், வழிகாட்டியுமான கீத் ரிச்சர்ட்சன்.

விரோதம் பாராட்டும் ஆஸ்திரேலியர்கள் கூட கலிஸ் விளையாட ஆரம்பித்தால் தனி உலகத்தில் இருப்பார் என்று கூறுவதுண்டு.

கலிஸ் இதுவரை 162 டெஸ்ட் (274 இன்னிங்ஸ்) ஆட்டங்களில் விளையாடி 13,128 ஓட்டங்களை எடுத்துள்ளார். அவரது சராசரி ஓட்டவீதம் 56.10 ஆக உள்ளது. சச்சின் டெண்டுல்கர் 198 ஆட்டங்களில் (327 இன்னிங்ஸ்) ஆடி 15,837 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இவரது ஓட்ட விகித சராசரி 53.86ஆக உள்ளது. எனவே கலிஸ் தொடர்ந்து 327 இன்னிங்ஸ் விளையாடினால் தற்போது அவருக்கு உள்ள ஓட்ட விகிதத்தில் நிச்சயம் சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முந்தும் என்று கூறப்படுகின்றது.

சச்சினை விட இரண்டரை வயது சிறியவரும், ஆட்டத்திறன் கொண்டவருமான கலிஸ் கடந்த 17 டெஸ்ட் போட்டிகளில் 46 ஓட்ட சராசரியில் 1181 ஓட்டங்களை எடுத்துள்ளார். சச்சின் 31 ஓட்ட சராசரியில் 872 ஓட்டங்களை எடுத்துள்ளார். இதனைப் பார்க்கும்போது கலிஸின் பயிற்சியாளரான கீத் ரிச்சர்ட்சன். கலிஸ் சச்சினின் சாதனையை முறியடிக்காமல் ஓய்வு பெறமாட்டார் என்று உறுதிபடக் கூறுகின்றார். (ற)



# சாதனைக்குக் காத்திருக்கும் செரீனா

ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் தொடரான அமெரிக்க ஓபன் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் செப்ரெம்பர் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஆடவர் ஒற்றையர் பிரிவைப் பொறுத்தவரையில் ஓர் அரையிறுதியில் நடப்பு சம்பியன் ஆன்டி முர்ரேவும், உலகின் முதல் நிலை வீரரான நோவக் ஜோகோவிச்சும் மோத வாய்ப்புள்ளது. அதனால் ஆடவர் ஒற்றையர் பிரிவில் முன்னணி வீரர்களாக திகழும் இவர்கள் இருவரில் ஒருவர் அரையிறுதியோடு வெளியேறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மற்றொரு அரையிறுதியில் ஸ்பெயினின் டேவிட் பெரருடன், சகநாட்டவரான ரபேல் நடால் அல்லது 17 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் ஆகியோரில் ஒருவர் மோதலாம்.

அண்மைய ஆட்டங்களில் பெடரர், ஆரம்ப சுற்றுகளிலேயே தோற்றுள்ளதால், இந்தப் போட்டியில் அவருடைய ஆட்டம் எப்படியிருக்கும் என்று எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. எப்படியானாலும், பெடரர், நடால் ஆகியோரில் ஒருவர் காலிறுதியோடு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மகளிர் பிரிவைப் பொறுத்தவரையில் ஓர் அரையிறுதியில் செரீனா வில்லியம்ஸுடன் சீனாவின் லீ நா அல்லது போலந்தின் அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா ஆகியோரில் ஒருவர் மோதலாம். மற்றொரு அரையிறுதியில் பெலாரஸின் விக்டோரியா அசரென்காவுடன், இத்தாலியின் சாரா எர்ரானி மோத வாய்ப்புள்ளது.

**ரூ.651 கோடி பரிசு**

இந்தத் தொடருக்கான மொத்தப் பரிசுத் தொகை ரூ.651 கோடியாகும். அதிக பரிசுத் தொகையைக் கொண்ட கிராண்ட் ஸ்லாம் தொடர் இதுதான்.

**புதிய சாதனை படைக்க காத்திருக்கும் செரீனா**

நடப்புச் சம்பியனும், 16 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவருமான செரீனா வில்லியம்ஸ் இந்த முறை சம்பியனாகும் பட்சத்தில், அமெரிக்க ஓபனில் பட்டம் வென்ற மூத்த வீராங்கனை என்ற சாதனையைப் படைப்பார்.

அமெரிக்க ஓபனில் சம்பியன் பட்டம் வென்ற மூத்த வீராங்கனை என்ற பெருமை ஆஸ்திரேலியாவின் மார்க்ரெட் கோர்ட் வசம் உள்ளது. அவர் 1973ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க ஓபனில் பட்டம் வென்றபோது 31 வயது 55 நாள்கள் ஆகியிருந்தது. இந்த முறை செரீனா பட்டம் வென்றால் அப்போது அவர் 32 வயதை எட்டுவதற்கு 18 நாள்கள் மட்டுமே இருக்கும்.

இதுதவிர செரீனா இந்த முறை பட்டம் வெல்லும் பட்சத்தில், கடந்த 20 ஆண்டுகளில் அமெரிக்க ஓபனில் தொடர்ச்சியாக இரு முறை சம்பியன் பட்டம் வென்ற 4ஆவது வீராங்கனை என்ற பெருமையைப் பெறுவார். இதற்கு முன்னர் ஸ்டெஃபி கிராப் (1995, 1996), வீனஸ் வில்லியம்ஸ் (2000, 2001), கிம் கிளிஸ்டர்ஸ் (2009, 2010) ஆகியோர் மட்டுமே தொடர்ச்சியாக இரு முறை பட்டம் வென்றுள்ளனர்.

ரஷியாவின் மரியா ஷரபோவா காயம் காரணமாக விலகிவிட்ட நிலையில், இந்த முறை செரீனாவுக்கு சவால் அளிக்கக்கூடிய ஒரே வீராங்கனை பெலாரஸின் விக்டோரியா அசரென்காதான். ஆஸ்திரேலிய ஓபனில் இரு முறை சாம்பியன் பட்டம் வென்றவரான அசரென்கா, சமீபத்தில் நடைபெற்ற சின்சினாட்டி மாஸ்டர்ஸ் போட்டியில் செரீனாவை தோற்கடித்தது குறிப்பிடத்தக்கது. (ற)

# வில்வித்தையில் தங்கப்பதக்கம்



போலந்தில் நடைபெற்ற உலகக் கிண்ண வில்வித்தைப் போட்டியின் (4ஆவது சுற்று), மகளிர் ரீகர்வ் பிரிவில் இந்திய அணி தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தது.

இறுதிப் போட்டியில் நம்பர் 1 அணியான தென் கொரியாவுடன் நேற்றுமுன்தினம் மோதிய இந்தியா 219,215 என்ற புள்ளிக் கணக்கில் அபாரமாக வென்று முதலிடம் பிடித்தது.

நட்சத்திர வீராங்கனை தீபிகா குமாரி, லைஷ்ராம் பாம்பேலா தேவி, ருமில் புருயிலி ஆகியோர் அடங்கிய இந்திய அணி தொடர்ச்சியாக பெறும் 2ஆவது தங்கப் பதக்கம் இது.

முன்னதாக, மெடல்லின் நகரில் நடந்த 3வது சுற்றிலும் இந்திய மகளிர் அணி தங்கம் வென்றிருந்தது. நான்காவது சுற்றில் அபாரமாக விளையாடிய இந்திய அணி இந்தோனேசியா (217,216), மெக்சிகோ (211,202), டென்மார்க் (214,206) அணிகளை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு முன்னேறியமை குறிப்பிடத்தக்கது. (ற)

# தோற்கடிப்பது கடினம் - குக் மீளுவது உறுதி - கிளார்க்

"எங்களை தோற்கடிப்பது கடினம்" என்று சவால் விடுத்துள்ளார் இங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் அலெஸ்ரைன் குக்.

ஆஷஸ் தொடரை 3:0 என்ற ரீதியில் தனதாக்கிக் கொண்டது இங்கிலாந்துஅணி. அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே குக் இவ்வாறு சவால் விடுத்துள்ளார்.

வெற்றி குறித்து குக் மேலும் கூறும் போது,

"ஆஷஸ் தொடர் தொடங்கும் முன், இங்கிலாந்து அணி குறித்து பல்வேறு விமர்சனங்கள் வைக்கப்பட்டன. சொந்த நாட்டில் நடக்கும் ஆட்டம் என்பதால் இங்கிலாந்து அணிக்கே நெருக்கடி அதிகமாக இருக்கும் என்று கூறப்பட்டது.

ஆனால் எங்கள் அணி தொடரில் சிறப்பாகச் செயற்பட்டு வெற்றிகளைப் பெற்றது. வேண்டியபோது ஓட்டங்களையும், இலக்குகளையும் எங்கள் வீரர்கள் பெற்றுக்கொண்டனர்.

இதன்மூலம் எம்மைத் தோற்கடிப்பது கடினம் என்ற நிலையை எங்கள் அணி எட்டியுள்ளது. அடுத்த ஆஷஸ் தொடர் ஆஸ்திரேலியாவில் எதிர்வரும் நவம்பர் மாதம் தொடங்க உள்ளது.



ஆஸ்திரேலியாவில் அந்நாட்டு அணியினர் பலம் வாய்ந்தவர்களாக இருப்பர். ஆனால், அதனை சமாளிக்கும் வகையில் எங்கள் அணி உள்ளது" என்று தெரிவித்தார்.

அதேவேளை, நாங்கள் தோல்வியில் இருந்து மீளுவோம் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க்.

இதுகுறித்து அவர் கூறும்போது, "டெஸ்டில் அசைக்கமுடியாத இடத் தைப் பெற்றிருந்த ஆஸ்திரேலிய அணி, தற்போது தடுமாறி வருகிறது.

ஆஷஸ் தொடரை இழந்து விட்ட போதும், எங்கள் அணியின் செயற்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இத்தொடரில் 2 ஆட்டங்களில் வெற்றி பெறும் வாய்ப்பு எங்களுக்கு இருந்தது. ஆனால் மழையினால் அது மாறிப்போனது. 5ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் ஷேன் வொட்சன், ஸ்டீவன் ஸ்மித், கிறிஸ் ரோஜர்ஸ் ஆகிய வீரர்கள் சிறப்பாகச் செயற் பட்டனர். ஆஷஸ் தொடரின் கடைசி 3 ஆட்டங்களிலும் எங்கள் அணி சிறப்பாகச் செயற்பட்டமை மகிழ்ச்சி அளிக்கிறது" என்று தெரிவித்தார் கிளார்க். (ற)

# தெரிவு சங்காவிடமே

இலங்கையின் '20/20' சம்பியன்களாகத் தெரிவான கந்துரட்ட அணி சார்பாக முக்கிய பங்கை வகித்திருந்த குமார் சங்கக்கார, இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணி சார்பாக ஒப்பந்தம் செய்துள்ளார். சம்பியன்ஸ் லீக் '20/20' தொடருக்கு இரு அணிகளும் தகுதிபெற்றுள்ள நிலையில், வீரர்களுக்கான ஒப்பந்தத்தின் அடிப்படையில் குமார் சங்கக்காரவை தெரிவு செய்யும் முதல் உரிமை சண் றைசர்ஸ் ஹைதராபாத் அணிக்கே காணப்பட்டது.

எனினும், தற்போது சம்பியன்ஸ் லீக் '20/20' தொடரின் ஏற்பாட்டாளர்கள் ஆட்ட விதிமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர். புதிய மாற்றத்தின்படி, வீரரொருவரின் இரண்டு அணிகள் சம்பியன்ஸ் லீக் '20/20' தொடருக்குத் தெரிவு செய்யப்பட்டால், எந்த அணியில் விளையாடுவது என்ற முடிவை அந்த வீரரே எடுக்க முடியும்.

இதன்படி, கந்துரட்ட அணிக்காக விளையாடுவதற்கு குமார்சங்கக்கார முடிவு செய்தால் அவர் தனது ஐ.பி. எல் ஊதியத்தில் 20 சதவீதமான 140,000 ஐக்கிய அமெரிக்க டொலரை இழக்க வேண்டியிருக்கும். மறுபுறத்தில் குமார் சங்கக்கார சண் றைசர்ஸ் அணிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் கந்துரட்ட அணி க்கு 150,000 ஐக்கிய அமெரிக்க டொலரை சண் றைசர்ஸ் அணி வழங்க வேண்டியிருக்கும். (ற)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

GERMAN LANGUAGE ACADEMY
ஜேர்மன், சுவிஸ், ஒஸ்ரியா நாடுகளுக்கான டொச் மொழிகள் A 1 பரீட்சைக்கு ஏற்றவாறு இலகுவான வழியில் கற்பிக்கப்படும்.
N.Soft Academy
No.23, Vairavar Kovil Road, Vairavar Puliyankulam, Vavuniya. (38209) (23-10-14)
German Language Academy
No.20, Palaly Rd, Jaffna. 0779707322

காலகளை பராமரியுங்கள்
லாவா வைத்தியசாலை
Tel :021-2224333
கிரமமான சோதனை இன்மையால் நாட்பட்ட நோய்களின் விளைவாக கால்களை இழக்கவேண்டி வரலாம்!
கால்களின் நரம்புப்பாதிப்பினை அறிந்து கொள்ள கணினி மயப்படுத்தப்பட்ட பரிசோதனையும் வைத்திய ஆலோசனையும்.
Foot Care Centre
Lava Hospitals
LH
No 75, temple road. Jaffna

SHAMROCK
ஈச்சமோட்டை
25 Years
2014/ 2015
பொருளியல்
P.பிரதாப்
அரசியல்
P.லிகோறி
சிங்களம்
பேச, வாசிக்க.
சனி, ஞாயிறு
(39256) (23-10-14) 03.00 pm

கடை வாடகைக்கு
திருநெல்வேலி கல்வியங்காட்டு றோட் MCSக்கு அருகில் கடைவாடகைக்கு உண்டு. தொடர்பு:- 077 3606835

## தவறிவிட்டது

கந்தையா மகேந்திரம் என்பவருடைய 15 கையடக்கத் தொலைபேசி காரைநகர் கடற்கரையில் (25.08.2013) தவறிவிட்டது. எ (தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு:- 0776621845

லப்டொப்கள் தேவை Used Laptops
நல்ல நிலையில் உள்ள பாவித்த லப்டொப்கள் கணினிகள் தேவை. 0779086737
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை தவச்செல்வம்

இளவாலை துன்மலையைப் பிறப்பிடமாவும் ஹொலண்டை வதிவிடமாக்வும் கொண்ட கணபதிப்பிள்ளை தவச்செல்வம் நேற்று (27.08.2013) செவ்வாய்கிழமை ஹொலண்டில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் சோதியின் (ஹொலண்ட்) அன்புக் கணவரும், தவேந்திரனின் (கனடா) அன்புச் சகோதரனும், சுகன்ஜா (கனடா) இரகுமாலா (கனடா), சிவரஞ்சினி (கனடா), சிவகுமாரன் (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் விக்னேஸ்வரன் (கனடா), துஷ்யந்தன் (கனடா), ஜெயக்குமார் (கனடா), செல்வபாலினி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்வினி, அக்ஷஜா, அனிக்கா, கிருத்திக், கம்சிகா, ஆதிரை ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஹொலண்டில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல் :-
சி. இராசரத்தினம்
மைத்துனர்.

மாதகல் கிழக்கு,
மாதகல். (39266)

## மரண அறிவித்தல்

### கந்தையாபிள்ளை செல்வரத்தினம்

(உரிமையாளர், செல்வம் ஸ்ரோர்ஸ் நெடுங்கேணி)

காரைநகர் சந்தம் புளியடியைப் பிறப்பிடமாகவும் சிதம்பரா மூர்த்தி கேணியடியை வதிவிடமாகவும கொண்ட கந்தையாபிள்ளை செல்வரத்தினம் நேற்று (27.08.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்.

S.M. கேணியடி,
காரைநகர்.

IELTS
LMC is an effective & efficient learning centre in Sri Lanka
IELTS: Academic & General
புதியபிரிவுகள் ஆரம்பம் Week days: 28.08.2013, 02.09.2013 Weekends: 01.09.2013
➢ Full time & part time class
➢ Week/ Weekend Days: 9.30am - 1.00pm
➢ UK student visa செய்யும் மாணவர்களுக்கு இலவச IELTS classes
➢ British Council test registered centre
➢ British Council trained lectures
LONDON METROPOLITAN COLLEGE
LONDON MERTOPOLITAN COLLEGE
197, Arasady Road, Jaffna, Sri Lanka
Contact No: 0212227230 | 0217538395
Web: www.lmcjaffna.edu.lk

உணவு இருப்பிடம் இலவசம்
மாதம் 2 இலட்சம் ரூபாய் சம்பாதிக்கலாம்
ஐரோப்பிய நாடான (Holland) நெதர்லாந்தில் படிக்க, உழைக்க சட்ட ஆலோசனை
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090



புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியியல் கற்கைநெறிகள்
CBF&DBF
Batch 1:- Saturday & Sunday 7.00 -1.00 medium English
Batch 11:- Saturday & Sunday 7.00 -1.00 medium Tamil
Batch 111:- Saturday & Sunday 12.00 -5.00 medium Tamil
Batch 1v:- Weekdays 3.00 -6.00 medium Tamil
Chartered
CAB 1 & CAB 11
Batch 1:- Saturday & Sunday 8.00 -1.00 medium English
Batch 11:- Saturday & Sunday 8.00 -1.00 medium Tamil
Batch 111:- Weekdays 3.00 -6.00 medium Tamil
External degree
GAQ, BA1, BA (Final)
1st in com, BCOM(part 1), BCOM(part 11), BCOM(final)
Further Details:
JAFFNA COLLEGE
UNDERGRADUATE Dept,
464, Hospital Road, Jaffna.
0212223382

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரான்ஸ், கனடாவுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழிஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். (கிளிநொச்சி, முல்லைத்தீவை சேர்ந்தவர்களும் இங்கு படிக்கிறார்கள்). France இல் தொடர்ந்து French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தின் Certificate உதவுகின்றது. ஏனெனில் உலகில் பிரெஞ் கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம். இன்றே பதிவுசெய்யுங்கள்
புதிய வகுப்பு: விரைவில்...
61, Kachchery-Nallur Road, Jaffna T.P.021.222.8093
கச்சேரி பஸ்தரிப்பிடத்தை அடுத்துவரும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்




பிறீமா சிக்கின் - (Prima Chicken)
விற்பனை பிரதிநிதி தேவை (Sales Rep)
யாழ்ப்பாணத்தில் Prima Chicken விற்பனை செய்வதற்கு தகுந்த விற்பனை பிரதிநிதிகள் தேவை. ஆர்வமுள்ளவர்கள், முன் அனுபவமுள்ளவர்கள் தங்களது சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகமளிக்கவும்.
வயதெல்லை : 18 - 35
காலம் : 28.08.2013, 29.08.2013 மு.ப. 10.30 தொடக்கம்
இடம் : Blue Haven Hotel No-70, Racca Road, Jaffna.
மேலதிக தகைமை : மோட்டார் சைக்கிள் / சாரதி அனுமதிப் பத்திரம், ஆங்கில அறிவு.
தொடர்புகளுக்கு: 077 775 5482 / 077 571 7721
ஏக விநியோகஸ்தர்கள்: பிறீமா சிக்கன் யாழ்ப்பாணம்
இங்கு பிறீமா சிக்கன் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.





சி.சரன்ஜா

A/L கணிதத்துறை மாணவியாகிய நான், ஓர் பொறியியல் பட்டதாரியாக வேண்டும் என்ற எனது கனவை IIS City Campus இல் இணைந்ததன் ஊடாக நனவாக்கிக் கொண்டு உள்ளேன் தற்போது எனது இறுதியாண்டு பயிற்சிக் காலத்தை கொழும்பில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றேன். IIS CITY CAMPUSஇல் இணைந்தது எனது வாழக்கைக்கு ஓர் பெரிய திருப்பு முனையை ஏற்படுத்தியுள்ளது.


வி.விமலன்

IIS City Campus இல் நான் பெற்ற உயர்கல்வி (Software Development) எனது வாழ்க்கையில் ஓர் திருப்பு முனையாக இருந்தது. உயர்கல்வி கற்பது என்பது ஒரு பெரிய விடயம் அல்ல, தேர்ச்சி பெற்ற துறையிலேயே வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்வதே இன்றைய இளைஞர் யுவதிகளின கனவாக உள்ளது. அந்த வகையில் கற்ற துறையிலேயே சிறந்த சம்பளத்துடன் வேலை வாய்ப்பை பெற்றுக் கொண்ட மாணவர்களில் நானும் ஒருவன் என பெருமையுடன் கூறிக் கொள்கின்றேன்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சிலருக்கு ஒரு கண் மட்டும் அடிக்கடி துடிக்கும். அவ்வாறு துடிக்கும் போது, அது குறித்த ஒருசில மூடநம்பிக்கைகள் மக்கள் மத்தியில் வழக்கில் உள்ளன. அது என்னவென்றால், ஆண்களுக்கு வலது கண் துடித்தால் நல்லது நடக்கும், அதுவே பெண்களுக்கென்றால் தீமை ஏற்படும் என்றும் ஆண்களுக்கு இடது கண் துடித்தால் கெட்டது நடக்கப் போகிறது. அதுவே பெண்களுக்கானால் நல்லது நடக்கும் என்று நம்புகின்றனர்.

உண்மையில் இது மிகப்பெரிய முட்டாள்தனமான ஒரு மூடநம்பிக்கை என்றுதான் சொல்ல வேண்டும். நல்லது கெட்டது நடப்பதற்கும் கண்களுக்கும் எப்படி தொடர்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று சிந்திக்காமல் குருட்டுத்தனமாக பலர் இதனை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் இந்த மாதிரி கண்கள் துடிப்பது உடலில் ஒருசில பிரச்சினைகள் உள்ளது என்பதற்கான அறிகுறியாகும். அதுமட்டுமல்லாமல் கண்கள் துடிப்பதற்கு ம்யோகிமியா (myo-kymia) என்று பெயர்.

இத்தகைய கண் துடிப்பு அல்லது தசைச் சுருக்கம் ஏற்படுவதற்கு அதிகப்படியான மன அழுத்தம், தூக்கமின்மை, மற்றும் பலவும் காரணங்களாகும். சிலருக்கு கண் துடிப்பானது ஒரு வாரம் அல்லது ஒரு மாதம்கூட தொடர்ச்சியாக இருக்கலாம்.

**மன அழுத்தம்**
மன அழுத்தம் அதிகம் இருந்தாலும் கண்கள் துடிக்க ஆரம்பிக்கும். எனவே மன அழுத்ததைக் குறைக்கும் செயல்களில் ஈடுபட்டால், அடிக்கடி கண்கள் துடிப்பதைத் தவிர்க்கலாம்.

**தூக்கமின்மை**
மன அழுத்தம் அதிகம் இருந்தால் தூக்கமின்மை பிரச்சி னையைச் சந்திக்க நேரிடும். இவ்வாறு சரியான தூக்கம் இல்லாவிட்டால், கண்கள் துடிக்கும்.


**கண்களுக்கு சிரமம்**
கண்களுக்கு அதிகமான சிரமத்தைக் கொடுத்தாலும் கண்கள் துடிக்க ஆரம்பிக்கும். உதாரணமாக படிக்கும்போது சரியாக தெரியாவிட்டால் அப்போது கண்களை பரிசோதித்து, அதற்கு கண்ணாடி போடாமல் சிரமப்படுத்தி அப்படியே படித்து கண்களுக்கு சிரமம் கொடுத்தாலும் கண்கள் துடிக்கும். மேலும் நீண்ட நேரம் கணினி அல்லது கைபேசிகளைப் பார்த்துக் கொண்டே இருந்தால் கண்கள் களைப்படைந்து விடும். இதனால் கண்களுக்கு அழுத்தம் ஏற்பட்டு துடிக்க ஆரம்பிக்கும். ஆகவே கணினி அல்லது கைபேசி பயன்படுத்தும் போது, சரியான கண்ணாடிகளை அணிந்து கொண்டு பயன்படுத்தினால், கண் துடிப்பில் இருந்து விடுபடலாம்.

**மதுசாரம்**
மதுசாரம் அதிகம் குடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு, கண்கள் துடிக்கும். ஆகவே மதுசாரத்தை அதிகம் பருகாமல், மருந்து போன்று எடுத்துக் கொள்வது நல்லது.

**ஊட்டச்சத்து குறைபாடு**
உடலில் ஊட்டச்சத்து குறைபாடு இருந்தால் கண்களில் உள்ள தசைகள் துடிக்க ஆரம்பிக்கும் என்று சில ஆய்வுகள் சொல்கின்றன. அதிலும் மக்னீசியம் குறைபாடு இருந்தால், கண்கள் துடிக்கும் என்று கூறுகிறது. ஆகவே சரியான ஊட்டச்சத்து நிறைந்த உணவுமுறைகளை மேற்கொண்டால், கண்கள் துடிப்பதைத் தவிர்க்கலாம்.

**ஒவ்வாமை**
சிலருக்கு கண் ஒவ்வாமை ஏற்படும். கண் ஒவ்வாமைகளான கண்களில் அரிப்பு, வீக்கம், கண்கள் சிவப்பாகி கண்ணீர் வடிதல் போன்றவற்றின்போது, கண்களைத் தேய்த்தால் வெளிவரும் ஹிஸ்டமைன் கண் திசுக்களில் நுழைந்து, கண்களைத் துடிக்க வைக்கும். எனவே கண் ஒவ்வாமை இருந்தால், கண்களைத் தேய்க்காமல், கண் மருத்துவரை அணுகி, சரியான மருந்துகளை எடுத்துக் கொண்டால், கண் துடிப்பில் இருந்து விடுபடலாம்.

# எதற்காக கண் துடிக்கிறது?



● மயூரி


# அகத்தியர் கண்டுபிடித்த 'ஷொக்' அடிக்கும் மின்சாரம்

குட்டை உருவமும் நீண்ட தாடியும் கொண்ட ஒரு சாமியாரும் ஒரு மண் குடுவையும் ஒரு சில ஆங்கில வார்த்தைகளும் உங்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கலாம். முதலில் யார் இந்தச் சாமியார் என்பதைத் தெரிவித்து விடுகிறோம். இவர் தான் அகத்தியர். சரி, இவருக்கும் இந்தப் பதிவுக்கும் என்ன சம்பந்தம் என்பதைப் பார்க்கலாம்.

தமிழர்கள் மற்றும் இந்தியர்களின் பழங்கால அறிவியல் தொழில் நுட்பத்தைப் பற்றி ஏற்கனவே ஒரு சில பதிவுகளை நாம் தந்திருந்தோம். சுமார் 9000 ஆண்டுகளுக்கு முன் இந்தியர்கள் கண்ட விமான அறிவியல், வானவியல் சாஸ்திரம் என்ற வரிசையில் இப்போது சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழன் அறிந்து வைத்திருந்த ஓர் அரிய தொழில் நுட்பத்தைப் பற்றி விவரிப்பது தான் இந்தப் பதிவு.

சன்ஸ்தப்ய ம்ரின்மாய பத்ரே
தாம்ரப்பத்ரம் சுசான்ஸ்க்ரிதம்
சாட்யெச்சிகிக்ரிவன் சர்த்ரார்ப்ஹி
கஷ்த்பம்சுப்ஹி
தஸ்தலொஷ்தோ நிததவ்யாஹ்
பர்தச்சடிதஸ்த்ஹா
சன்யோகஜ்ய்தே தேஜோ
மித்ரவருனசங்கியதம்


புரியவில்லை என்றால் விடுங்கள். நீங்கள் இப்போது படித்த வரிகள் பைந்தமிழ் முனிவர் அகத்தியர் எழுதிய அகத்திய சம்கிதம் என்ற அறிவியல் பொக்கிஷத்தின் ஒரு பகுதி.
இதற்கான விளக்கத்தை இப்போது பார்க்கலாம்.
ஒரு மண் குடுவையை எடுத்து அதனுள்ளே தாமிர தகடை செலுத்தி சிறிதளவு சிகிக்ரிவம் நிரப்ப வேண்டும். பின்னர் அதை ஈரமான மரத்தூள், பாதரசம் மற்றும் துத்தநாகத்தைக் கொண்டு பூசி, இரண்டு கம்பிகளை இணைத்தால் மித்ர



வருண சக்தியைப் பெறலாம்
மித்ரவருணசக்தி என்றால் என்ன? சித்தர்கள் தவமிருந்து கிடைக்கிற சக்தியா?
Rao Saheb Krishnaji Vajhe 1891 ஆம் ஆண்டு புனேவில் தமது பொறியியல் படிப்பை முடித்துவிட்டு தமது துறை சார்ந்த விடயங்களை பண்டைய கால படைப்புகளில் தேடலைத் தொடங்கினார். அப்போது உஜ்ஜெய்னி மாகாணத்தைச் சேர்ந்த Damodar Tryambak Joshi (சுருக்கமாய் ஜோஷி) ஜோஷியிடம் ஒரு சில பண்டைய ஆவணங்களைப் பெற்றுத் தனது ஆய்வுகளைத் தொடர்ந்தார். அது சுமார் கி.மு 1550 ஆம் ஆண்டின் ஆவணம். நாம் மேலே பார்த்த அந்த வரிகளைப் படித்த உடன் அதைப்பற்றி தெரிந்து கொள்ள சமஸ்கிருத வல்லுனரான Dr.M.C. Sahastrabuddhe (சுருக்கமாய் புத்தே) அவர்களை அணுகினார்.

புத்தே அப்போது நாக்புர் பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறைத் தலைவர். அவர் இதைப் படித்துப் பார்த்ததும் ஆச்சரியத்துடன் அதிர்ந்துபோய் இது ஏதோ ஒரு டானியல் செல்லைப் போன்ற மின்கலத்தின் கட்டுமானத்தைப்போன்று இருக்கிறது என்றார். சரி இதை மேலும் ஆராய வேண்டும் என்ற ஆர்வம் தொற்றிக் கொள்ள புத்தே அதை நாக்பூரைச் சேர்ந்த பொறியியல் வல்லுனர் P.P. Hole (பி.பி. ஹோல்) அவர்களிடம் அதைக் கொடுத்து ஆராயச் சொன்னார். இதைக் கேட்டதும் நமது கிருஷ்ணாஜிக்கு உற்சாகம் பீறிட்டு வர அவரும் களத்தில் குதித்தார்.

ஒவ்வொன்றாய் படித்து படித்து அதில் கூறப்பட்டதைப் போன்றே தனது மின்கலத்தை வடிவமைக்கும் போது அவர் வந்து முட்டி மோதி நின்ற இடம் சிகிக்ரிவம் என்ற சொல். நாமும் கூட அதை படிக்கையில் என்ன அது என்று சற்று யோசித்தி ருப்போம். அவர்களும் இது என்னவாய் இருக்கும் எனத் திணறும் போது ஒரு சமஸ்கிருத அகராதியில் மயிலின் கழுத்துப் பகுதி என்று இருந்ததைப் பார்த்தார்கள்.
உடனே அவர்கள் இருவரும் பக்ஹ் என்ற ஒரு மயில் சரணாலயத்தில் தலைமைப் பொறுப்பாளராய் இருந்தவரிடம்




போய் ஏதாவது இறந்த மயில்களின் உடல்கள் உள்ளனவா அல்லது இங்கி ருக்கும் மயில்கள் எப்போது சாகும் என கேட்க அவருக்கு கோபமே வந்துவிட்டது. பின்னர் இவ்விருவரும் நிலை மையை விளக்கிக் கூற, உடனே பக்ஹ் சிரிக்க ஆரம்பித்துவிட்டார். இருவரும் திகைப்புடன் அவரை நோக்க அது மயிலின் கழுத்து அல்ல மயிலின் கழுத்தைப்போன்ற நிறம் உள்ள பொருள். என்று சொன்னார் பக்ஹ். இதைக் கேட்டதும் அவர்களுக்கு சிந்தனை முளைத்தது. ஆஹா! ஆம்! அது தான் அது!. மயிலின் கழுத்து நிறம்! அதே தான். கொப்பர் சல்பேட்! கண்டுபிடிக்கப்பட்டது.

அடுத்த சில மணி நேரங்களில் மின் கலமும் தயாரானது. அந்த மின் கலத்தை ஒரு மல்டி மீட்டரை வைத்து ஆராய்ந்த போது 1.38 Open Circuit Voltage மற்றும் 23 milli-ampere Short Circuit Current. கிடைத்தது. ஆமாம்! வெள்ளைக்காரன் Electric current என்றதை அலுப்பே இல்லாமல் மின்சாரம் என்று பெயர் மாற்றி பயன் படுத்தி வருகிறோமே அதற்கு எம் மூதாதையர் இட்ட பெயர் மித்ரவருண சக்தி.


● வலையவன்

இந்த மித்ரவருண சக்தி என்ற பெயருக்கும் கூட விளக்கமுண்டு. வருணன் என்றால் தண்ணீர் என்பது நாம் அறிந்ததே. மிதரன் என்றால் சூரியன் என்று பொருள். ஆனால் இங்கே ஹைதரஜன் என்ற பொருளைக் கொள்ளும். ஏனெனில் சூரியனின் சக்தி ஹைதரஜனில் தான் உள்ளது. அதனால் இங்கே ஹைதரஜனைக் குறிக்க மித்ரா என்று குறிப்பிடுகிறார். தண்ணீரில் இருந்து ஹைதரஜனைப் பிரித்து எடுத்தால் மாபெரும் சக்தியை நாம் பெறலாம். எனவே அவ்வாறு பெறப்பட்ட சக்தியையே மித்ரவருண சக்தி என்கிறார் அகத்தியர்.

**சுமார் 9000 ஆண்டுகளுக்கு முன் இந்தியர்கள் கண்ட விமான அறிவியல், வானவியல் சாஸ்திரம் என்ற வரிசையில் இப்போது சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழன் அறிந்து வைத்திருந்து ஒரு அரிய தொழில் நுட்பத்தைப் பற்றி விவரிப்பது தான் இந்த பதிவு.**

என்னப்பா இது? அந்தக் காலத்தில் மின்சாரமா என்று கேட்கிறீர்களா? தேடுங்கள் கூகுள் தளத்தில், பக்தாத் பற்றரி என்று ஆங்கிலத்தில்.
இதுபோல 100 கலன்களைச் செய்து தண்ணீரைப் பயன்படுத்தினால் அது ஒட்சிசனாகவும் ஹைதரஜனாகவும் பிரியும் என்கிறார். இந்த ஹைதரஜன் மிதக்கும் தன்மையுடை யது எனவும் இதை ஒரு பையில் அடைத்தால் பறக்கப் பயன்படுத்தலாம் எனவும் தெரிவிக்கிறார். அது மட்டுமல்லாமல் இதே அகஸ்திய சம்ஹிதாவில் நமது நவீன கால electroplating என்று சொல்லக் கூடிய அதே முறையை தெள்ளத் தெளிவாக விவரித்து செயற்கையாக தங்கத்துக்குச் சாயம் பூசுவது எப்படி என்றும் குறிப்பிட்டுள்ளார்.
குறிப்பு : அகத்தியர் வாழ்ந்த காலகட்டம் குறித்த தெளிவான புள்ளி விவரம் கிடைக்கப்பெறவில்லை. சுமார் 9000 ஆண்டுகளுக்கு முன் இருந்து 3500 ஆண்டுகளுக்கு முன் வரை வெவ்வேறு காலகட்டங்களில் அவர் வாழ்ந்ததைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. அதனால் இந்த அறிவியல் பொக்கிஷம் நிச்சயம் குறைந்தது 3500 - 4000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தமிழனால் கண்டுபிடிக்கப்பட்டது என்று கூறலாம்.

# மனித உடல் பற்றி சில தகவல்கள்



மனித உடலின் வளர்ச்சி 21 வயதோடு நின்றுபோய் விடுகிறது. கடைசிவரை வளர்வது காது மட்டுமே. ஆயிரம் வருடம் வரை உயிர் வாழ்ந்தால் நமது காது ஒரு குட்டி யானைக் காது அளவுக்கு இருக்கும்.

விதம் விதமான பல்லாயிரக்கணக்கான வேலைகளை அலட்சியமாக செய்யக்கூடிய ஒரே ஆயுதம் நமது கை.

இதயம் ஒரு நாளைக்கு சுமார் ஒரு லட்சம் தடவை சுருங்கி விரிகிறது.

வருடத்துக்கு நான்கு கோடி தடவை சுருங்கி விரிகிறது. இதயத்தின் இடது பக்கத்தை விட வலது பக்கம் சற்று பெரியதாக இருக்கும்.



# புற்றுநோயைக் காட்டிக் கொடுக்கும் 'கண்கள்'



கண்கள் உடம்பின் கண்ணாடி என்று எவ்வளவு அர்த்தத்துடன் கூறியிருக்கிறார்கள் என்பதை. இதைப் படித்ததும் தெரிந்து கொள்வீர்கள். உடலுக்குள் எங்கே என்ன கோளாறு என்றாலும், அதைக் கண்கள் காட்டிக் கொடுத்துவிடும்.

அந்தவகையில் புற்றுநோயின் அறிகுறிகளையும் கண்களில் கண்டுபிடிக்கலாம் என்றால் நம்ப முடிகிறதா? உடலின் எந்தப் பாகத்தில் புற்று நோய் வந்தாலும் அதன் அறிகுறிகள் கண்களில் பிரதிபலிக்கும்.

கண்களில் தண்ணீர் கசிவது, நடுத்தர வயதுக்கு பிறகு பெண்களுக்கு மார்பகப் புற்றுநோயும், ஆண்களுக்கு நுரையீரல் புற்றுநோயும் தாக்குகிற வாய்ப்புகளை வெளிப்படுத்தும். திடீர் என எடை குறைவது, இரத்தத் தோடு வெளியேறும் சளி இப்படி புற்றுநோய்க்கான பொதுவான அறி குறிகளைத் தாண்டி கண்களிலும் அதைக் கண்டு பிடிக்கலாம்.

**கண்களில் தண்ணீர் கசிவது, நடுத்தர வயதுக்கு பிறகு பெண்களுக்கு மார்பகப் புற்றுநோயும் ஆண்களுக்கு நுரையீரல் புற்றுநோயும் தாக்குகிற வாய்ப்புக்களை வெளிப்படுத்தும்.**

# குழந்தைகளுக்கான உணவுப் பழக்கவழக்கங்கள்



குழந்தைகளை வளர்க்கும்போது. பெற்றோர்களும் அவர்களுடன் சேர்ந்து வளர்கிறார்கள். குழந்தைகளுடன் சேர்ந்து பெற்றோர்களும் தினம் தினம் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் ஏராளம் உண்டு. அதிலும் குழந்தை இந்த பூமியில் கால் பதித்தவுடனே பெற்றோர்களின் புதிய பொறுப்பு தொடங்கி விடுகிறது.

குழந்தை வளர்ப்பு மற்றும் பராமரிப்பு என்பன ஒவ்வொரு பெற்றோர்களின் வாழ்க்கையிலும் முக்கியமான கட்டமாகும். குழந்தைகளை வளர்ப்பது எளிதான விடயம் அல்ல. தினம் தினம் ஆயிரம் பிரச்சினைகளை சந்திக்க வேண்டியிருக்கும். அப்படிப் பெற்றோர்கள் சந்திக்கும் முக்கிய பிரச்சனை தன் குழந்தைகளை உண்ண வைப்பது.

அவ்வாறு உண்ண வைக்கும்போது. குழந்தைகள் அடம்பிடிப்பார்கள். எனவே குழந்தைகளுக்கான ஆரோக்கியமான அடிப்படை உணவுப் பழக்க வழக்கங்களை பின்பற்றிவந்தால், குழந்தை நல்ல உணவுப் பழக்கத்துடன், நன்கு ஆரோக்கியமாக வளரும்.

வீட்டில் அனைவரும் விரும்பும் உணவைத் தேர்ந்தெடுங்கள். அவற்றில் குழந்தைகள் விரும்பாத ஓரிரு உணவையும் சேர்த்து விடுங்கள். அதனால் அவர்களால் அதனை கண்டு பிடிக்க முடியாது.

பொதுவாக குழந்தைகளுக்கு உணவு கொடுக்கும்போது. அவர்களுக்கு முதலில் அளவாக உணவைப் பரிமாறவும். இதனால் உணவு வீணாவதைத் தடுக்கலாம்.


சில குழந்தைகள் உணவு உண்ணும் போது அடம்பிடிப்பார்கள். அவ்வாறு குழந்தைகள் அடம்பிடிக்காமல் இருக்க வேண்டுமெனில், குழந்தை உண்ணும்போது. குழந்தையின் நண் பனை அழைத்து உடன் இருக்க வையுங்கள். அப்படி அவர்கள் கூட இருக்கும்போது, குழந்தைகளும் அவர்களுடன் உணவை உண்ண வாய்ப்பு உள்ளது.

குழந்தைக்கு பிடித்த ஒரு நபரை உண்ணும்போது அருகில் இருக்கச் சொல்லுங்கள். அது குழந்தையின் மாமா, நண்பன் என யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். குழந்தைகளுக்கு பிடிக்காத உணவை உண்ணுமாறு வற்புறுத்தாதீர்கள்.

உணவு உண்ணும் நேரத்தை கலகலப்பாக வைத்திருக்க குழந்தையிடம் பேச்சுக் கொடுங்கள்.

குழந்தை உணவு உண்ட பிறகு தண்ணீர் அல்லது பழச்சாறைக் கொடுங்கள். இது அவர்களின் பசியைப் பாதிக்காமல் இருக்கும். குழந்தை பசியுடன் இருக்கும் போது புதுவகை உணவுகளை அவர்களுக்கு கொடுங்கள். இதனால் பல புதிய சுவைகள் அவர்களுக்கு பழக்கமாகும்.


# மூளையைப் பாதிக்கும் விடயங்கள்



காலையில் உணவு உண்ணாமல் இருப்பவர்களுக்கு இரத்தத்தில் குறைவான அளவே சர்க்கரை இருக்கும். இது மூளைக்குத் தேவையான சக்தியையும் தேவையான ஊட்டச் சத்துக்களையும் கொடுக்காமல் மூளை அழிவுக்குக் காரணமாகும்.


புகை பிடிப்பதால் மூளை சுருங்குவதற்குக் காரணமாகிறது. அதிக சர்க்கரை உண்பது மூளை வளர்ச்சிக்குப் பாதிப்பாகிறது. மாசு நிறைந்த காற்றை சுவாசித்தல், நமக்குத் தேவையான ஒட்சிசனை நாம் பெறுவதிலிருந்து தடை செய்கிறது. மூளைக்கு ஒட்சிசன் செல்லாவிட்டால் மூளை பாதிப்படையும்.

நல்ல உறக்கத்தின் மூலம் மூளைக்கு ஓய்வு கொடுக்கும். தூங்காமலிருப்பது மூளைக்கு நீண்டகாலப் பாதிப்பை ஏற்படுத்தும். உடல் நோயுற்ற காலத்தில் மிக அதிகமாக மூளைக்கு வேலை கொடுப்பதும், தீவிரமாகப் படிப்பதும் மூளையைப் பாதிக்கும்.



# இலட்சியத்தை கைவிடாதே!

நமது சிறந்த நல் வாழ்வுக்கு உயர்ந்த இலட் சியத்தை உருவாக்கிக் கொண்டு செயற்படல் அவசியமாகும். நாம் ஒரு இலட்சியத்தையே கொண்டிருத்தல் வேண்டும். எம்மில் சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட இலட்சியங்களைக் கொண்டிருக்கின்றனர். அது தவறாகும். நாம் ஒரே ஒரு இலட்சியக் கனவுடன் நோக்கிப் பயணித்தல் வேண்டும். நாம் இலட்சியமின்றி இருத்தல், துடுப்பில்லாமல் கடலில் செல்லும் படகுக்கு ஒப்பானது. எமது இலட்சியமா னது உயர்ந்த நல்லஇலட்சிய



மாக இருப்ப துடன் அந்த இலட்சியம் நடைமுறைக்கு சாத்தியமாகவும், தெளிவானதாகவும் இருத்தல் அவசியம்.


நாம் நமது இலட்சியத்தை அடைய ஒரு சிறந்த இலட்சியத்தைத் தெரிவு செய்து அதனை அடைய குறிக்கோள்களை உருவாக்கிக் கொண்டு வரும் சவால்களை எதிர்கொண்டு இலட்சியத்தை அடைதல் வேண்டும். நமது சமூகத்தில் சோதனைகளைச் சாதனைகளாக்கி தமது இலட்சியத்தை அடைந்த பெரி யோர்கள் பலர் உள்ளனர். அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு நாமும் தமது இலட்சியத்தை அடைவோம்.

இ.கலைப்பருதி,
தரம் -7B,
J/V.G.H.S

## எனது ஊர்

1) இயற்கை அன்னயையின் எழில் வனப்பையெல்லாம் கொண்டு விளங்கும் வரணியே எனது ஊராகும்.
2) இங்கு விவசாயிகள் நெல்லைப் பயிரிடுவார்கள்.
3)இங்கு பல சமயங்களையும் சேர்ந்தோர் இருக்கிறார்கள்.
4) எனது ஊரில் வரலாற்று சிறப்புமிக்க ஆலயம் உண்டு.
5) இங்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் உள்ளன.
6) எனது ஊரை நான் நேசிக்கின்றேன்.

இ.டர்சனா, தரம்-2 'சி'
யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை




ஆசிரியர்: குழந்தை எங்கிருந்து வருகிறது என்று யாருக்கேனும் தெரியுமா?'
மாணவன்: எனக்குத் தெரியும் ஆசிரியர்
ஆசிரியர்: (அதிர்ச்சியுடன்) உனக்குத் தெரியுமா? சொல்...
மாணவன்: மருத்துவ மனையிலிருந்து வருகிறது.

இ.பாதுஷா, தரம்- 7 E
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.


## தானங்களில் சிறந்தவை

தான்ங்களில் சிறந்தது அன்னதானம்
தவறாமல் இறைவனைச்
சிந்தித்திருப்போர்க்கு.
தானங்களில் சிறந்தது கல்வித் தானம்
தவறாமல் கல்வியை விற்பனை
செய்யாதோர்க்கு.
தானங்களில் சிறந்தது இரத்ததானம்
தவறாமல் எளிமையாக வாழ்பவர்க்கு.
தானங்களில் சிறந்தது கோமா தானம்
தவறாமல் பசுவை வணங்குவோர்க்கு.
தானங்களில் சிறந்தது புத்திர தானம்
தவறாமல் குழந்தைவரம் கேட்பவர்க்கு.
நானங்களில் சிறந்தது பூமிதானம்
தவறாமல் வீடு, நிலம் இரப்போர்க்கு.
தானங்களில் சிறந்தது பெண்தானம்
தவறாமல் கை நீட்டி வாங்காதவர்க்கு.
நானங்களில் சிறந்தது நிதானம்
தவறாமல் அலுக்காது பேசுபவர்களுக்கு.

கே.எஸ். சிவஞானராஜா.
கொக்குவில்.

## அறிவியல் துறைகளும் தந்தையரும்

கணக்கியல் - லூக்கா பேசியோலி



மின்சாரம் - மைக்கல் ஃபரடே



அரசியல் - அரிஸ்டோட்டில்



சமூகவியல் - மக்ஸ்வெயர், ஹொம்ரே



கணினி - சாள்ஸ் பபேஜ்




சு.ஆர்த்திகா, தரம் -9டி.
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

## நான் படிக்க வேண்டும்

ஓர் ஊரில் திலகன் என்ற ஏழைச் சிறுவன் வசித்து வந்தான். அவன் அந்த ஊரில் இருந்த பண்ணையார் நாகலிங்கம் வீட்டில், ஆடு, மாடுகளை மேய்த்து வந்தான். நிறையப் புற்கள் இருக்கும் பக்கமாக அவைகளை மேய விட்டு விட்டு, அங்குள்ள பெரிய புளிய மரத்தடியில் அமர்ந்திருந்து யோசிப்பான். 'நானும் பட்டணத்தில் இருந்தால் பாடசாலைக்குச் சென்று படிக்கலாம். இந்தக் கிராமத்தில் எந்த வசதியும் இல்லையே...' என்று தினமும் நினைப்பான்.

சூரியன் உச்சிக்கு வந்ததும், பண்ணையார் அம்மா தந்த சோற்றை உண்டு விட்டு மரத்தடியிலேயே ஒரு தூக்கம் போடுவான். தூங்கி எழுந்ததும் ஒவ்வொரு திக்கில் இருக்கும் ஆடு மாடுகளை விரட்டி ஒன்று சேர்த்து வீட்டுத் தொழுவத்தில் கட்டி ஒழுங்கு செய்துவிட்டு வீடு திரும்பி வர மாலை 6 மணியாகி விடும். குடிசையில் அவனும், அவனது தாயும் மட்டும் தான். காலையில் அவனது தாயும் வயல் வேலைக்குப் போய் மாலை தான் திரும்பி வருவார்.



அவனுக்கோ பெரிய படிப்பெல்லாம் படித்து அம்மாவை நல்ல வீட்டில் வசதியாக வைத்துப் பார்க்க ஆசை. ஆனால், மனதிலுள்ள ஆசையை அடக்கிக் கொண்டு பண்ணையாருக்கு உதவியாக ஆடு, மாடுகளை மேய்க்கும் வேலையை ஒழுங்காகச் செய்து வந்தான்.

அன்றும் வழக்கம் போல் எழுந்து பல் துலக்கி சாப்பிட்டு விட்டு ஆடு, மாடுகளைக் காட்டுக்குக் ஓட்டிச் சென்று மேயவிட்டு விட்டு, புளிய மரத்தடியில் வந்து அமர்ந்தான், "ஆண்டவா நான் படிக்க வேண்டும் என்ற ஆசையை எப்படி நீ நிறைவேற்றப் போகிறாய்..." என்று மனதுருகி வேண்டினான். காற்றும் கண்களை அசத்த அப்படியே படுத்து உறங்கிவிட்டான். எவ்வளவு நேரம் உறங்கினானோ அவனுக்கே தெரியவில்லை.

சூரியன் மறைய ஆரம்பித்தது. என்ன இன்று இப்படித் தூங்கி விட்டோமே என்று அவசர அவசரமாக எழுந்து ஆடு, மாடுகளை விரட்டி ஒரு பக்கமாக இழுத்து வரும் போதுதான் கறுப்புக் காளையைக் காணவில்லையே என்பது தெரிந்தது. வழியில் பெரிய குரலில் அம்மா என்று கத்தும் சத்தம் கேட்க அங்கு ஒரே ஓட்டமாக ஓடினான் திலகன். மாட்டின் ஒரு கால் ஒரு பள்ளத்தில் சிக்கிக் கொண்டு மாடு வலியுடன் கத்தியது. அதைக் கண்டு துடித்துவிட்டான். மாட்டின் காலை பள்ளத்தில் இருந்து மெல்ல விடுவித்து ஊலைத் தடவிக் கொடுத்தான். அதுவும் துள்ளி மேலே ஏற ஆரம்பித்தது. வழியில் புதிதாகத் தோண்டிய மண் போன்ற ஒரு பகுதி விசேஷமாக இருந்தது. அத்துடன் அந்த இடத்தை யாரோ அடையாளமிட்டிருப்பது தெரிந்து வேக வேகமாக அந்த மண்ணைத் தோண்டினான்.

அங்கு ஒரு மண் பானை புதைந்து இருப்பது தெரிந்தது ஆவலுடன் அதை வெளியில் எடுத்து பானையின் மூடியைத் திறந்து பார்த்த திலகன் பயந்து விட்டான். அதில் சில நகைகளும் ரூபாய் நோட்டுக் கட்டுகள் நான்கும் இருந்தன. ஐயோ இது யார் வீட்டில் களவுப்போனதோ? யார் இங்கு புதைத்து வைத்தார்களோ? ஒன்றும் தெரியவில்லையே, என்ன செய்யலாம்?' என்று சிறிது யோசித்துவிட்டு, எதுவானாலும் இதை வீட்டுக்கு எடுத்துப் போய் அம்மாவிடம் கொடுத்துவிடலாம் என்று பானையை மூடி பத்திரமாகத் தன் இடுப்புத் துண்டை அவிழ்த்து மூடி, கையில் எடுத்துக் கொண்டு ஒரே ஓட்டமாக ஓடிப் போய் பானையைத் தாயிடம் கொடுத்து நடந்ததைச் சொன்னான். அவனது தாயோ, கட்டு கட்டாகப் பணத்தையும், நகைகளையும் பார்த்து பயந்து விட்டாள். நன்கு உற்றுப் பார்த்த போது அந்த நகைகள் பண்ணையார் அம்மாவின் நகைகள் போல் தெரிந்தது.

உடனே பண்ணையார் வீட்டுக்கு ஓடினர். பண்ணையார், வீட்டு நகைகள் திருட்டுப் போய் திருடனை பிடிக்க வேண்டும் என்பதற்காக நாலாபுறமும் ஆட்களை அனுப்பிக் கொண்டிருந்தார். இந்தப் புதையல் பானையை பார்த்ததும் அதில் உள்ள நகைகளைக் கண்டதும் துள்ளினார் பண்ணையார்... இது எப்படி உனக்கு கிடைத்தது?" என்றார். விபரத்தைச் சொன்னான் திலகன். அவனைக் கட்டித் தழுவி முத்தமிட்ட பண்ணையார்,

"இனி நீ என் மகன். உனக்கு என்னடா ஆசை!" என்றார்.

நான் படிக்க வேண்டும் ஐயா!" என்றான் திலகன். நாளைக்கே உன்னை நம்முடைய பள்ளியில் சேர்க்கிறேன். உன் அம்மா நம் வீட்டிலேயே இருக்கட்டும்?" என்றார்.

திலகன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அவனுக்கோ பெரிய படிப்பெல்லாம் படித்து தாயை நல்ல வீட்டில் வசதியாக வைத்துப் பார்க்க ஆசை. ஆனால், மனதிலுள்ள ஆசையை அடக்கிக் கொண்டு பண்ணையாருக்கு உதவியாக ஆடு, மாடுகளை மேய்க்கும் வேலையை ஒழுங்காகச் செய்து வந்தான்.

# ஊருக்குத்தான் உபதேசம்...

"ஊருக்குத்தான் உபதேசம்: உனக்கல்லடி பெண்ணே" என்றொரு முதுமொழி எம் மத்தியில் வழக்கில் உண்டு. நல்லூர் முருகனின் மஞ்சத் திருவிழாவில் மாலை நேரப் பூசை முடிவடைந்து முருகன் வெளி வீதியில் சன சமுத்திரத்தின் மத்தியில் ஊர்ந்து கொண்டிருந்தான்.

முருகன் வீதி வலம் வந்த காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. பக்தர்கள் அனைவரும் பக்திப் பரவசத்தில் மூழ்கிப் போயிருந்தனர். நானும் ஒருவனாக அந்தக் கூட்டத்தில் கலக்கிறேன். அந்தக் கூட்டத்தில் ஒரு பெரியவர் "நடந்த சம்பவங்களையே நடக்கேல்லை என்று பொய் சொல்லுகிறவைகள் இருக்கிற வரைக்கும், எங்கடை நாடு உருப்படாது. அதுவும் கமராவில் பதிவாயிருக்கிற சம்பவத்தையே 'பொய்', அப்படி ஒன்றுமே நடக்கவில்லை என்று சொல்கிறார்கள்" என்று அவருடன் பக்கத்தில் வந்து கொண்டிருந்த பெரியவர்களுக்கு சொல்லிக்கொண்டு போனார். அந்தக் கூட்டத்தில் நானும் ஒருவனாக நின்றதால், அந்தப் பெரியவர் சொன்னது எனது காதிகளிலும் விழுந்தது. அந்தப் பெரியவரைப் பார்த்தேன். ஆசாரமாக வேட்டி சால்வையுடன் உடம்பு முழுவதும் வீபூதிப் பட்டையுடன் சுவாமி ஊர்வலத்தில் வந்து கொண்டிருந்தார். அந்தக் கூட்டத்தில் அவரோடு கூட வந்து கொண்டிருந்த பெரியவர்கள் பொறுப்பு வாய்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள். யாராவது பெரியவர்கள் தாங்களுக்குள் கூடிக் கதைத்தால், அவர்கள் என்ன தான் கதைக்கிறார்கள் என்று கேட்பது என்னிடம் உள்ளதொரு கெட்ட பழக்கம்.

ஏதோ ஒன்றைப் பற்றித்தான் சொல்ல வருகிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. சரி, பெரியவர்கள் என்ன தங்களுக்குள் கதைக்கிறார்கள் என்றுதான் பார்த்து விடுவோமே என்று நெருங்கி அவர்கள் பக்கம் சென்றேன். பெரியவரோ, நல்லூருக்கு 600 பொலிஸாரை கடமைக்குப் போட்டிருக்கிறார்கள். ஒரு அசம்பாவிதம் நடந்தாலும் அப்படி ஒன்றும் நடக்கவில்லையே என்று தான் சொல்வார்கள். முழுப் பூசணிக்காயையே சோற்றுக்குள் புதைக்கத்தக்க திறமை உள்ளவர்கள் அவர்கள். முள்ளிவாய்க்காலிலேயே ஒன்றுமே நடக்கவில்லை என்று சொன்னவர்கள் தானே. சின்னச்சின்ன விடயங்களை மறைப்பது அவர்களுக்கு பெரிய விடயமல்ல" என்றார். கூட வந்த மற்றொரு பெரியவரோ, அந்தக் காலத்தில் கமரா பாவனை வலுகுறைவு. ஆனாலும் ஒரு குற்றச் சம்பவம் நடந்தால் தேடித் துருவி விசாரித்துக் கண்டுபிடித்து, நடந்த சம்பவங்களை அப்படியே நிரூபித்து விடுவார்கள். இப்பத்தைக் காலம் பெடியள், பெட்டையளிலை இருந்து பெரியவர்கள் வரை, கையில் கமராவுடன் திரியிதுகள். ஆனால் உண்மைச் சம்பவங்களை நிரூபிக்க முடியாமல் இருக்கிறது. இந்த இடத்தில் எத்தனை பேரின்ரை கையில் கமரா இருக்குது பார்த்தியளோ" என்றார். மூன்றாவது பெரியவரோ "உதுகள் முருகனைக் கும்பிடாதுகளாம். கமராவைப் பிடித்துக் கொண்டு திரியிதுகள். நல்லூர்க் கந்தனை பணக்கார கடவுள் என்றுதான் சொல்லுகினம்.

**கோப்பாய் சண்முகம்**

**கதையோடு செய்தி**

ஒவ்வொருநாள் திருவிழாவிலும் முருகன் எவ்வளவு அழகாக அலங்கரித்து வெளி வீதி வலம் வருகிறான். இதனைப் பார்த்தாவது எங்கட பெண் பிள்ளைகள் வரலாம் தானே. முருகன் வேலுடன் இடுப்பில் ஒரு துண்டுடன் காட்சி கொடுத்தானாம். தாம் இடுப்பில் துண்டுடன் வந்தால் என்னவாம் என்று இப்பத்த பெட்டையள் எங்களைப் பார்த்து கேட்கிறார்கள்" என்றார். மூன்றாவது பெரியவரோ "கமராவில் படம் எடுக்க வெல்லோ கோயிலுக்கு வருகினம். கமராவில் முருகனைப் படம் எடுத்தால் பரவாயில்லை. பெட்டையளையெல்லோ படம் எடுக்கினம்" என்று சொன்னவர் "அங்கே பாருங்கோ, ஒரு பெடியன் பெட்டையளைப் படம் எடுக்கிறதை" என்றார். நானும் அந்தப் பக்கம் பார்த்தேன். தங்களைத்தான் பெடியள் படம் எடுக்கிறாங்கள் என்ற பயம் இல்லாமல் அதுகளும் படத்துக்கு போஸ் கொடுக்கிற மாதிரி சிரித்துக் கொண்டு போச்சுதுகள் அந்தப் பெண் பிள்ளைகள். பெரியவரோ "முருகன் இன்னும் வெளி வீதி சுற்றி வாசலுக்கு வர இல்லை. அதுக்குள்ள ஐஸ்கிறீம் கடைப் பக்கம் நிற்கிற சனத்தைப் பார்த்தியளே? எல்லாம் ஐஸ்கிறீம் குடிக்கவா போகுதுகள்?" என்றார். இரண்டாவது பெரியவர் "ஐஸ்கிறீம் குடிக்கிதுகளோ, இல்லையோ, பெடியள் பெட்டையளுக்கு நல்லா ஐஸ் வைக்கினம். இது எங்க கொண்டு போய் விடப் போகுதோ தெரியவில்லை?" என்றார். மூன்றாவது பெரியவரோ "நேற்றுத் திருவிழா முடிந்து சாயந்தரம் ஐஸ்கிறீம் ஒன்று குடித்துவிட்டுப் போவம் என்று ஐஸ்கிறீம் கடைப் பக்கம் போனன். அங்கை சனக் கூட்டத்துக்குள்ள ஏதோ ஒரு பிரச்சினை. அமளி துமளியாய் இருந்தது. என்ன ஏது என்று பார்ப்பம் என்று அந்தப் பக்கம் போனன். 20 வயது மதிக்கத்தக்க ஒரு பெடியன் தலையிலை இருந்து கால் வரை ஐஸ்கிறீமில் தோய்ந்து போயிருந்தான். அங்கை நின்ற வர்களிடம் என்ன பிரச்சினை என்று கேட்ட போது ஆரோ சில பெட்டையள் அவனுக்கு ஐஸ்கிறீமை உடம்பு முழுக்க ஊற்றி விட்டு ஓடிவிட்டார்கள் என்று சொன்னார்கள். ஓஹோ, இப்ப எல்லாம் பெட்டையள் வலு துணிச்சல்காரர்கள் தான் என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்து ஐஸ்கிறீம் கடைக்குள் சென்று ஒரு மேசையில் இருந்து ஐஸ்கிறீம் குடித்துக் கொண்டிருக்கும் போது பக்கத்து மேசையில் இருந்து ஐஸ்கிறீம் குடித்துக் கொண்டிருந்த நான்கு இளைஞர்களில் ஒரு இளைஞன் சொன்னான் "சரியான அடிதான். அவன் அவளுக்கு நேற்று ஐஸ்கிறீமை உடம்பில் கொட்டினான். இன்றைக்கு பதிலுக்கு அவள் தன்ரை சிநேகிதிமாரோடை சேர்ந்து அவனை ஐஸ்கிறீமால் குளிப்பாட்டி இருக்கிறாள்" என்று சொல்லி சிரித்தான். அப்பொழுதுதான் உணர்ந்து கொண்டேன் அது ஒரு ஐஸ்கிறீம் மோதல் என்று, இது கடைசியில் வேறு ஒரு மோதலில் கொண்டு போய் விடப் போகுது என்று எண்ணிக் கொண்டேன் என்றார். முருகன் வடக்கு வீதியில் சன வெள்ளத்தில் பவனி வந்து கொண்டிருந்தான்.

இரண்டவாவது பெரியவரோ "நல்லூர் வெளி வீதியில் சகலதும் நடக்குது பாருங்கோ. கேட்டால் முருகனே இரண்டை வைத்திருக்கிறான். நாங்கள் ஒன்றுக் குத் தானே முயற்சி செய்கிறோம் என்று பெடியள் தரவளி சொல்லுகினம். முருகன்ரை வரலாற் றைச் சொல்லி எங்களை மடக்கப் பார்க்கினம். இந்தக் கேள்வியை முருகனிட்டைத்தான் கேட்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே வரும் போது 20 வயது மதிக்கத்தக்க ஓர் இளைஞன் ஓடி வந்து "தாத்தா, இந் தாருங்கோ, என்ரை கமராவை ஒருக்கால் வைத்திருங்கோ" என்று சொல்லி கமராவை தாத்தாவின் கையில் கொடுத்து விட்டுச் சென்றான். இதைப் பார்த்த அந்தக் கூட்டத்தில் வந்த ஏனைய பெரியவர்கள் கமராவுடன் நின்ற அந்தப் பெரியவரை ஒரு மாதிரியான ஏளனப் பார்வையுடன் பார்த்தனர்.

அந்த முதியவரோ கமராவையும் கூட வந்த மற்ற பெரியவர்களையும் மாறி மாறி பார்த்து வெட்கத்துடன்ஓர் அசட்டுச் சிரிப்பை உதிர்த்தார். அவராலை அந்த நேரத்திலை வேறு என்னதான் செய்ய முடியும்? அப்பொழுது தான் நான் விழித்துக் கொண்டேன்.

நல்ல வழிகளைக் கூறும் பெரியவர்கள் தங்கடை வீட்டுப் பிள்ளைகளின் போக்கை, நடவடிக்கைகளைக் கண்டும் காணாதது போல் நடந்து கொள்கிறார்கள் என்பது நிதர்சன உண்மையாக மனதில் உறைத்தது. இந்தப் போக்குத்தான் பிரச்சினைகளுக்கு வழி வகுக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்வது எப்போது?

# செயற்கை சுவாசத்தின் தந்தை

Forrest Bir - (ஃபொரெஸ்ட் பேர்ட்) Baby Bir- என செல்லமாக அழைக்கப்பட்ட இவர் இன்று உலகில் பலர் உயிரோடு வாழ்வதற்கு ஏது செய்தவராகவுள்ளார்.



1921 இல் அமெரிக்காவில் பிறந்தார் பேர்ட். முதலாம் உலகப்போரில் பங்கேற்ற விமானியின் மகனான பேர்ட், தந்தையின் தூண்டுதலின் உதவியுடன் தனது 14 ஆவது வயதிலேயே தனியாக விமானமோட்ட கற்றுக் கொண்டார். விமான ஓட்டத்தில் ஈடுபாடும் அதீத திறனும் கொண்டிருந்த போர்ட் இரண்டாம் உலகப் போரின்போது விமான ஓட்டிக ளுக்கும் விமானங்களுக்கான தொழில் நுட்ப வல்லுனராக நியமிக்கப்பட்டார். இதன் விளைவாக போர்ட் பல்வேறு நவீனரக விமானுங்களை ஓட்டிப்பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது..

நவீனரக விமானங்களில் சில அதி உயரத்தில் பறக்கையில் விமானிகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதை அனுபவ மூடாக கண்டறிந்துகொண்டார் பேர்ட். இதனால் அதி உயரத்தில் பறக்கும்போது இயற்கையாக சுவாசிக்க முடியாத நிலையில் நிச்சயமாக செயற்கையான சுவாசக்கருவி ஒன்றை கண்டறிய வேண்டும் என்ற எண்ணம் அவருக்குள் தீயாக எழுந்தது!.

ஆனால், விமானியாக இருந்துகொண்டு தன்னால் இதை சாதிக்கமுடியாது என்பதை உணர்ந்துகொண்ட பேர்ட், தனது உயர் பதவியை விட்டெறிந்துவிட்டு மருத்துவப் படிப்பில் மாண வராக இணைந்துகொண்டார். நெஞ்சில் இருந்த தீரா வேட்கையுடன் மனித உடல் இயங்கும் முறையையும் சுவாச முறையையும் சுவாசத்துக்கு உதவும் வேதியல் பொருள்கள் எவை என்பதையும் சிறிதும் சந்தேகமின்றி கற்றறிந்து கொண்டார். அதன் விளைவு செயற்கை சுவாச மண்டலம் தயாரானது.

முதலாவது Bird ( Ventilator இற்கு ஒத்த சாதனம்) சாதனம் உருவானது. விமானியாக விமானிகளுக்கு தீர்வு தேடிய பேர்ட் இறுதியில் தான் கற்ற மருத்துவக் கல்வி கடும் மூச்சுத் திணறலால் பாதிப்புற்று உயிர் நீக்கும் ஜீவன்களைக் காப்பாற்ற பயன்பட வேண்டும் என்ற எண்ணத்திற்குள் இட்டுச்சென்றது..

இச்சாதனத்தின் செயற்பாடு பற்றி பேர்ட் எந்த வித சந்தேகமும் அல்லாதிருந்தபோதும் சமுதாயம் சந்தேகம் கொண்டது. எனினும் செயற்கை சுவாசம் கொடுத்தால் மட்டுமே உயிர் பிழைக்கக் கூடும் என்ற நிலையில் சாவின் எல்லையில் இருந்தோரிடம் போர்ட்டின் சாதனத்தை பரீட்சித்துப்பார்க்க அனுமதி கோரப்பட்டது. அவர்களும் அதற்கு ஒப்புதல் அளிக்க முன்னோட்டமே பலரது உயிரைக்காத்தது.

196[illegible] breathing equipment [illegible] னம் மூலமாக தனது [illegible] ந்த ஆரம்பித்தார். ( [illegible] னம் Bird corporation என பெயர் மாற்றப்பட்டது.).


1972 இல் பிறந்த உடனே மூச்சுத்திணறல் ஏற்பட்டு இறந்துபோகும் குழந்தைகளின் உயிரைக்காக்கும் அளவுக்கு அவரது இயந்திரம் மேம்படுத்தப்பட்டது..

1980 களில் தொடர்ச்சியாக மேற்கொண்ட ஆய்வுகளின் விளைவாக மேம்படுத்தப்பட்ட நவீன Ventilator சாதனம் உருவாக்கப்பட்டது. இது செயற்கை சுவாசத்துக்கு மட்டுமின்றி; அசுத்த இரத்தத்தை சுத்திகரிக்கும் ஒரு சாதனமாகவும் செயற்பட்டது.

மருத்துவ வரலாற்றில் கண்டுபிடிக்கப்பட்டு அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்ட சாதனங்களில் பேர்ட்டின் Ventilator இற்கு தனி இடம் எப்போதும் உண்டு.

> **“ நெஞ்சில் இருந்த தீரா வேட்கையுடன் மனித உடல் இயங்கும் முறையையும் சுவாச முறையையும் சுவாசத்துக்கு உதவும் வேதியல் பொருள்கள் எவை என்பதையும் சிறிதும் சந்தேகமின்றி கற்றறிந்து கொண்டார்.**





# மன அமைதி

யாராவது உங்களை ஏசினாலோ, மனம் நோகும்படி நடந்துவிட்டாலோ, உடனே உங்களது மனம் வருத்தப்படுவதோடு மீண்டும் அவர்களை ஏதாவது செய்யவேண்டும் என யோசிக்க ஆரம்பித்து விடும். அப்பொழுது மன அமைதி என்பதைத் தேடினாலும் உணர முடியாது. அம்மாதிரியான சூழல்களில் சிறிது நேரம் மனதை அமைதிப் படுத்த முயலுங்கள். கண்டிப்பாக முடியும் உங்களால், பின்பு நன்றாக மூச்சை இழுத்து விடுங்கள். மூச்சு பயிற்சி செய்யும்போது, அப்படியே அதில் கவனம் செலுத்தி உங்களுக்குள் பார்க்க முயற்சி செய்யுங்கள். நம்மை நாமே உள்நோக்கிப் பார்க்கும்போது ஒருவித அமைதியை உணர முடியும்.

அதற்குத்தான் சொல்லுவார்கள் பிரார்த்தனை, தியானம் போன்றவற்றை செய்வது நல்லது என்று. இவை எல்லாம் நம்மை அமைதிப் படுத்தும் செயல்கள். இதை நாம் செய்யும்போது, நாம் எமக்குள் பயணம் செய்ய ஆரம்பிப்போம். இம்மாதிரிச் செய்யும் போது எம்மைப் பற்றிய தெளிவும் அறிவும் எமக்கு அதிகமாகும். இத்தெளிவு மன நிறைவோடு கூடிய அமைதியைக் கொடுக்கும். எமக்கு உள்ளே நாம் கவனிக்கும் பொழுது எம்முடைய நிறை குறைகளைத் தெரிந்து கொண்டு முன்னேற்றத்துக்கு தேவையானவற்றை கற்றுகொள்ள ஆரம்பிப்போம். அதனால் தேவையில்லாத சிந்தனைகள் அகற் றப்பட்டு எமக்கு என்னதேவை, நாம் எதை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதில் ஓர் உணர்தல் ஏற்படும். உங்களையே நீங்கள் கவனிப்பதால் வரும் அத் தெளிவு, உங்களையே உங்களுக்கு பிடிக்கவும், மற்றவர்களிடத்தில் அதிக அன்பு செலுத்தவும் உங்களை ஊக்குவிக்கும். இதெல்லாம் ஒருசேர நடக்கும் போது வாழ்வில் ஒரு பிடிப்பும் சந்தோசமும் அதிகமாக மன அமைதியும் உங்களுக்கே சொந்தமாகும்.

## சலனமில்லாத மனதில் இருக்கும் அமைதி


நாம் ஒவ்வொருவரும் ஒரு நாளில் அல்லது வாரத்தில் ஒரு தடவை ஒரு வித அமைதி எம் மனதில் இருப்பதை உணர்வோம். அந்த அமைதிக்கு என்று சில காரணங்கள் இருக்கும், அதைக் கண்டுபிடித்தால் நாம் என்றுமே மன அமைதி மற்றும் மன நிறைவுடன் இருப்பதற்கான வழியைத் தெரிந்து கொள்ளலாம்.

உதாரணமாக எனக்கு தெரிந்த ஒரு நண்பர் குழந்தைகளுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட கல்வியைக் கற்றுக் கொடுப்பதில் ஆர்வம் உடையவர். அவர் சொல்வார், சந்தோசத்தையும் மன அமைதியையும் அவர்களுக்கு கற்று கொடுக்கும் வேளையில் என்னால் உணரமுடிகிறது. இவ்வாறாக எமக்கு எதை செய்தால் சந்தோசம் கிட்டுகிறது என்பதைக் கண்டுபிடித்தல் முக்கியம்.

முதலில் உங்களை உங்களுக்குப் பிடிக்க வேண்டும், அப்பொழுதுதான் நம்மால் என்ன முடியுமோ அது எம்மை எவ்வளவு சந்தோசப்படுத்தும் என்று தெரிந்து அதில் ஈடுபட்டால் மன அமைதி யும் சந்தோசமும் எம்முடன் என்றுமே இருப்பதாய் உணரலாம்.

## மன அமைதியும் சந்தோசத்தையும் உருவாக்குவோம்

நாம் ஒவ்வொருவரும் மற்றவருக்காகத் தான் வாழ்கிறோம். வாழ்வது ஒரு வாழ்க்கை. எப்படியும் சாகப் போகிறோம். தவறு என்றாலும் கூட கடிந்து கொள்வதில் எந்த வித மாற்றத்தையும் காண முடியாது. அன்பால் மட்டுமே மாற்றத்தைக் காண முடியும். முடிந்தவரை அன்பைக் காட்டுவோம். முடியாதபோது அன்பை வேறு விதமாக காட்டுவோம். எந்தவித சூழலிலும் மற்றவர்களிடையே சந்தோசத்தை உருவாக்க முடியும். நீங்கள் நினைத்தால். உறுதி எடுப்போம் அமைதியாக வாழ.



## புதுமை படைப்பதும் மனஅமைதியும்

ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கு என்று புதுமை படைக் கும் ஆற்றல் உண்டு. அதை நாம் எந்தளவுக்குப் பயன்படுத்தப் பழகி இருக்கிறோமோ, அதைப் பொறுத்து எம் வாழ்வில் சந்தோசமும் மன அமைதியும் ஏற்படும். புதுமை படைப்பது அதாவது creativity என்பது ஆங்கிலத்தில், நம் பேச்சில் இருந்து, நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களிலும் எம்முடைய creative ஆற்றலை பயன்படுத்தி அங்கே ஒரு புதுத் தன்மையை, புதுப் பரிமாணத்தை ஏற்படுத்தும் பொழுது நமக்கு என்று ஓர் அங்கீகாரத்துடன் ஒருவித சந்தோசத்தையும் நாம் பெறமுடியும். . இப்படியாக ஒவ்வொரு நாளிலும், பல இடங்களில், அவரவருக்கே உரித்தான புதுமையான சிந்தனைகளைச் செயற்படுத்த ஆரம்பித்தால், ஒருவித தன்னம்பிக்கையுடன் கூடிய மன அமைதியை உணர முடியும்.

புதுமையைப் படைப்பது என்பது ஒரு தனித்திறமை. இதில் என்ன ஆச்சர்யம் என்றால், ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்திறமை இருக்கும். ஆனால் புதுமை படைப்பது என்பது எல்லோருக் குமே இருக்கிற ஒரு திறமை, அதை நாம் கண்டுபிடித்து பயிற்சியின் மற்றும் பழக்கத்தின் அடிப்படையில் அதை வளர்த்துக்கொள்ளலாம். அவ்வாறு நீங்கள் வளர்த்துக் கொண்டபின் அது ஒரு தனித்திறமையாகக் கருதப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, எனது நண்பர் ஒருவர் அவருக்கு வரும் forward message தை, அப்படியே திருப்பிப் புதுமையாக சிலதை சேர்த்து அனுப்பியவருக்கே திருப்பி அனுப்புவார். இதுவும் கூட ஒருவித creativity தான். இப்படியாக நம் வாழ்வில், பல சந்தோசங்களை நாம் அனுபவிப்பதோடு, நம்முடன் சேர்ந்தோரையும், எம்முடைய புதுமை படைக்கும் திறமையினால், அவர்களைச் சந்தோசப்படுத்தி ஒருவித மன அமைதியை அவர்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

பேச்சில், எழுத்தில், நடவடிக்கையில், செயல்களில், மற்றவர்களுடன் உறவை மேம்படுத்துவதில், நம் வாழ்க்கை முன்னேற்றத்தில், எம் சமூகத்தை வழிநடத்துவதில், என்று பல இடங்களில் நாம் மாற்றத்தை ஏற்படுத்தி, பழையன இல்லாமல், புதுமையான கண்ணோட்டத்தில் உலகைப் பார்வையிட நமக்கே உரித்தான புதுமை படைக்கும் ஆற்றலை வளர்ப்போம், மனித வாழ்வில் புதுமை படைத்தவர்கள் தான் தனியாக அடையாளம் காட்டப்படுகிறார்கள் என்பதை யாவரும் அறிவோம்.

அதனால் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, மனதில் இருக்கும் ஏனைய கஷ்டத்தையும், கவலையையும் பின்னுக்குத் தள்ளி, எப்போதும் மன அமைதியைப் பெற்றிடுவோம்.

## மன அமைதிக்கு குடும்பத்தின் பங்கு

ஒரு மனிதனுக்கு அவன் குடும்பம் மிகவும் முக்கியம். குடும்ப உறுப்பினர்களின் ஒரே ஒரு கடமை இக்கட்டான சூழலில் ஆறுதலான வார்த்தைகளை சொல்வதும், அரவணைப்பதும் மட்டுமே. புத்தகத்தில் இருந்து அறிவும், ஊடகத்தில் இருந்து செய்தியும், வலைத்தளத்திலோ என்னவெல்லாம் தேவையோ அத்தனையும் கிடைக்கும். இப்படி இருக்க குடும்பம் எனபது மட்டுமே அன்பைக் கொடுத்து ஆனந்தத்தை உருவாக்கும் இடமாக இருக்க முடியும். என் தோழி ஒருத்தி அடிக்கடி சொல்லுவாள் அவளது அண்ணனை பற்றி. அவன் நிறைய படிப்பானாம். அவளிடம் எதாவது பேசுவது என்றால் அவனுக்கு தெரிந்த அறிவியல் கோட்பாடுகள் பற்றித்தான் பேசுவானாம். இவள் இதைப்பற்றி ஒருபுறம் பெருமையாகச் சொன்னாலும் மறுபுறமோ அவனின் அன்பு அவளுக்கு கிடைக்கவில்லை என்பது தெளிவாகப் புரிந்தது. குடும்ப நபர் ஒவ்வொருவரின் எதிர்பார்ப்பையும் ஒருத்தரால் நிறைவு செய்ய முடியாது. அதற்காக அவர்களை வெறுத்து விட்டால், அதை விடக் கொடுமை எதுவும் இருக்க முடியாது. குழந்தை பள்ளியில் இருந்து வீடு திரும்பியதும் தேவைபடுவது அன்பு ஆதரவு மற்றும் மனதுக்கு அமைதி. இதைத் திருப்தியாக தந்தால் எப்பேர்ப்பட்ட குழந்தையும் படிப்பில் கெட்டிக்காரராக முடியும். இது குழந்தைக்கு மட்டும் அல்ல அனைவருக்கும் பொருந்தும். அதை விட்டு அட்வைஸ் பண்ணுவதும், அதைப் படி, இதை படி என்று கஷ்டம் கொடுப்பதும் ஒருவரின் மன அமைதியைக் கெடுக்குமே தவிர பெரிய மாற்றத்தைக் கொடுக்காது. இனிமையான வார்த்தை களால் குடும்ப நபரைப் பாராட்டி, அவர்களுடைய நல்லதை எடுத்து சொல்லி மகிழ்வூட்டி . அவர்களோடும் குடும்பத்தார் அனைவரோடும் சந்தோசமாகவும் அமைதி யாகவும் வாழ்வோம். வெற்றிகளும் சாதனைகளும் தானே எம்மைத் தேடி வரும்.

# பாடும் பறவைகள்

பாடும் பறவைகளை பறவைகளில் சிறப்பு தன்மை உடைய பறவைகள் எனலாம். இவற்றில் 4500 இனங்கள் உண்டு. இந்த லிஸ்டில் காகம், நைட்டிங்கேல், அண்டங்காக்கை பொதுவானவை.

பாடும் பறவைகள், காகம், ஃபிஞ்சஸ்(Finches), லார்குகள், மோர்க்கிங்(mocking), நைட்டிங்கேல் (nightingales), அண்டங்காக்கை (Ravens), சிட்டுகுருவி (Robins), த்ரஸ்ஷஸ்(thrushes), தூக்கணாங்குருவி(weaver bird), வாப்ளர் (Warblers)எனப்பலவகைகள் உள்ளன.


பாடும் பறவைகளின் சிறப்பு அவற்றின் தொண்டையில் இருக்கும் குரல்வளை (Syringers) அமைப்பு. இவைதான் இவற்றுக்குச் சப்தம் எழுப்ப உதவுகிறது. வுட் த்ரஸ் என்று சொல்லப்படும் பறவையின் குரல்வளை அமைப்பு பிரமாதமானது. ஒரே சமயத்தில் இரண்டு விதமான பாடல்களைப் பாடும்.

பறவைகளின் மூளையில் இந்தப் பாடல்களைக் கிரகிக்க ஒரு சிறப்புப் பகுதி உண்டு. இது ஒரு பாடலை கற்றுக் கொள்கிறது. ஞாபகம் வைத்துக் கொள்கிறது.

பறவைகள் ஏன் பாட வேண்டும் ? பெரும்பான்மையான ஆண் பறவைகள் சப்தமிட்டுப் பாடும். இது பெண் பறவைகளை ஈர்ப்பதற்குத்தான். ஆண் பறவையே பெண் பறவைக்கு பிடிக்கும். பறவைக் குஞ்சுகள் பாடுவதற்கு தந்தை தாய் பறவையைப் பார்த்தே கற்றுக்கொள்கின்றன. சாதாரணமாக நீங்கள் பார்க்கும் பறவைகளில் 10 க்கு 8 பாடும் பறவைகள். பாடும் பறவைகளின் ஆயுள் 5 வருடங்களே. பிறந்த ஒரு வருடத் திற்குள்ளாக முட்டையிட்டு குஞ்சு பொரித்துவிடும். பாடும் பறவைகளின் முட்டையிலிருந்து பத்து நாள்களில் குஞ்சு எட்டிப்பார். பாடாத பறவை அல்பட்ராஸ் (Albatross) குஞ்சுக்கும் பொரிக்க 80 நாள்கள் ஆகிறது. வுட் த்ரஸ் (wood thrush) மெலடியாகப் பாடும் புல்லாங்குழல் இசைப்பதைப் போல. அதன் பாடலை கேளுங்கள்..

ஸ்டார்லிங்ஸ் விநோதமான பறவை மற்ற பறவைகளின் குரல்களைக் கேட்டு அப்படியே பாடும் திறமை கொண்டது....

காணொலியில், பழக்கப்படுத்தப்பட்ட பறவை கேட்கும் குரல்கள் சப்தங்களை அப்படியே ஒலித்துக் காட்டுவது நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது....





# தடைகளை

## தகர்த்தால் இனிய இல்வாழ்க்கை!

பெண்கள்படித்துமுடித்துவேலைக்கு போய் உழைத்து, பணம் சேர்த்து, வீடுவாங்கி... இப்படி நீண்டுகொண்டே போகிறது அவர்களுடைய வாழ்க்கை. அது சரி...திருமணம் எப்போது? கல்வி, உத்தியோகம், பணம் இதெல்லாம் வாழ்க்கைக்குத் தேவைதான்.

அதற்கென்று காலகட்டங்கள் உள்ளன. அதையெல்லாம் வசமாக்கிக்கொண்டபிறகும் திருமணத்தை தள்ளிப்போட்டுக் கொண்டே போவது அவர்களுடைய வருங்காலத்தையே கேள்விக்குறியாக்கி விடாதா? பால்ய விவாகம் எப்படி தவறானதோ அப்படியே முதிர் விவாகமும் தவறானது.

அவர்கள் பெரும்பாலும் உடல் ரீதியாக பல பிரச்சினைகளை சந்திக்க வேண்டியிருக்கும். காலதாமதமாக ஆகும் திருமணத்தால் குழந்தைப்பேறும் சுகப் பிரசவமும் சிரமமான விடயம். இதையெல்லாம் மனதில் கொண்டு காலத்தோடு திருமணம் செய்து கொள்வதே சரியாகும். 'பருவத்தே பயிர் செய்' என்ற கூற்றிற்கேற்ப பருவம் என்பது முக்கியம்.

அதேபோல் காலம் கடந்த திருமணம் நல்ல பயனைத் தராது. பெண்களுக்கு ஆண்களிடம் பிடிக்காத விடயங்களும், ஆண்களுக்கும் பெண்களிடம் பிடிக்காத பல விடயங்களும் இருக்கலாம். ஒருபோதும் அது திருமணத்திற்கு தடையாகஇருக்கக்கூடாது. அவற்றைதிருமணத்துக்குமுன்பேமாற்றிக்கொள்ளவேண்டும். பெண்கள் தைரியமாக இருக்க வேண்டியது அவசியம். அதேநேரம் தைரியம் என்ற பெயரில் அவர்கள் செய்யும் முரட்டுத்தனங்களை ஆண்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. பெரியவர்களை மரியாதையில்லாமல் பேசுவது, பல ஆண்களுடன் பழகுவது, ஊர் சுற்றுவது இதெல்லாம் பாதுகாப்பான விடயமே அல்ல. பணிவான பெண்களே எல்லோரையும் கவர்கிறார்கள்.

இனிமையான பேச்சு, சாந்தமான சுபாவமே ஆண்களுக்கு பிடித்த விடயம். பெரிய வீராங்கனை என்ற எண்ணத்தில் ஆண்களைத் தூக்கி எறிந்து பேசுவது, நேரம் காலம் இல்லாமல் நண்பர்களுடன் அரட்டையடிப்பது இதெல்லாம் திருமணத்துக்கு ஒரு முற்றுப்புள்ளியாக அமைந்து விடும். மேடையில் பலர் முன் பாராட்டப்படும் பெண்கள் கூட திருமணம் என்றவளையத்துக்குள் வரத் தயங்குகிறார்கள்.

ஆண்களை விட நாங்கள் புத்திசாலிகள், அறிவாளிகள் என்று அலட்டிக்கொள்ளும் பெண்களால் எவரையும் கவர முடியாது. அறிவு என்பது நல்ல பண்பின் அடித்தளத்தில் அமைக்கப்பட வேண்டியது. அகங்காரம், ஆணவம் அறிவை ஆளக்கூடாது. அது முற்றிலும் மன அழுத்தத்தைத் தரும். திருமணம் என்ற பந்தமே அன்பின் அடித்தளத்திலும் விட்டுக் கொடுக்கும் மனோபாவத்திலும் அமைவது. அப்படிப்பட்ட மனப்பக்குவம் தான் அவர்களை உயர்த்தும். இன்றைய பெண்களிடம் கல்வி, தொழில், பணம் எல்லாமே இருக்கின்றன. ஆனால் எதுவுமே இல்லாதது போலத் தோன்றுகிறது. அவர்களால் வாழ்க்கையில் பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியவில்லை. எதையுமே தாக்குப் பிடிக்கும் மனப்பக்குவம் அவர்களிம் இல்லை.

அழகாக ஆரம்பித்த வாழ்க்கையை பாதியிலேயே அலங்கோலமாக முடித்துக் கொள்கிறார்கள். காரணம் எதிலுமே ஒரு பதட்டம், பொறுமையின்மை, எதுவும் தனக்கு சாதகமாக அமையவேண்டும் என்ற எதிர்பார்ப்பு, அதீத கோபம் இவையெல்லாம் வாழ்க்கையை சிதறடித்து விடுகிறது. வாழ்க்கையை மேன்மைபடுத்திக் கொள்ளத்தானே அறிவு.

திருமண வாழ்க்கையை சிதைத்துக் கொள்ளவா உங்கள் அறிவு பயன்பட வேண்டும்? வாழ்க்கையின் போக்கு எப்படி இருந்தாலும் அதை வகையாக சீரமைத்துக் கொள்ளத் தெரிந்தவள் தான் அறிவாளிப் பெண். சுயமரியாதை என்பது அனைவருக்கும் தேவை. அதே போல அடுத்தவருக்கு நாம் கொடுக்கும் மரியாதை தான் எம் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள பயன்படும். தாம் திருமணம் செய்து கொள்ளப்போகும் பெண் தமது குடும்பத்தில் உள்ளவர்களையும், நண்பர்களையும் மதிக்க வேண்டும் என்று ஆண்கள் விரும்புவார்கள். அந்த மரியாதை அவர்களிடம் அன்பாகத் திரும்பி வரும். அந்த அன்பு அவர்களுடைய வாழ்க்கையைப் பாதுகாக்கும். வெளியிலிருக்கும் நபர்களும், வீட்டிலிருக்கும் உறுப்பினர்களும் ஒரே மாதிரி பழக முடியாது.

வீட்டில் நாம் பல விடயங்களை பொறுத்துக் கொள்ள வேண்டி வரும். சுயமரியாதை என்பது நமக்கு நாமே கொடுத்துக் கொள்ளும் மரியாதை. அந்த வகையில் நம்மிடமிருந்து வரும் சொற்கள், அதை தொடர்ந்து வரும் செயல்கள், தூய்மையாக இருந்தால் தான் சுயமரியாதையை காத்துக்கொள்ள முடியும். வார்த்தைகளில் அன்பும், அனுசரிக்கும், தன்மையும், மென்மையும் கலந்திருக்க வேண்டும்.

அது எமது கல்விக்கும், திறமைக்கும் கொடுக்கும் மரியாதை. தேவையற்ற வீண்விவாதம் பல பிரச்சினைகளுக்கு காரண மாக இருக்கிறது. வீண் விவாதத்தால் நியாயங்கள் எடுபடா. அதனால் சண்டை தான் உருவாகும். உஷ்ணமான நேரத்தில் உருவாகும் வார்த்தைகள் வேறு திசையில் சென்று வேறு மாதிரியான பிரச்சினைகளைக் கொண்டு வந்துவிடும்.

எமது மனம் ஒத்துக் கொள்ளாத விஷயமாக இருந்தால் சிறிது அமைதி காத்து பின் நிலைமை இயல்பு நிலைக்குத் திரும்பியதும் நியாயத்தை எடுத்துச் சொல்லலாம். நாம் சொல்லும் நியாயங்களை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் மற்றவர்களுடன் விட்டுக் கொடுத்துப் பேசவேண்டும். இதில் சிறிதளவேனும் கோபம், எரிச்சல், குமுறல், பழைய காயம் தெரிந்து வி...க்கூடாது.

இக்காலப்பெண்களுக்கு அந்தளவு பொறுமை இல்லை என்பது தான் இதில் சோகம். எதிலும் ஆண்களை மீறி செயற்பட வேண்டும் என்ற நினைப்பு, அவர்களுக்கு கோபம் ஏற்படுத்தும் விதத்தில் பதற்றமான பேச்சு, மற்றவர்களை எப்போதும் குறைகூறும் மனப்போக்கு இதெல்லாம் பல பிரச்சினைகளை வீட்டுக்குள் கொண்டு வரும். இதை ஆண்கள் விரும்ப மாட்டார்கள். தன் மனைவியால் தன்னை சுற்றியிருப்பவர்கள் சொல்லாலும், செயலாலும் பாதிக்கப்படுவதால் மேலும் பிரச்சினைகள் உருவாகலாம் என்று பயப்படுவார்கள். இந்தமாதிரி சந்தர்ப்பங்களில் தான் சிறு நெருப்புப்பொறி மாதிரியான வார்த்தைப் பிரயோகம்கூட பெரும் நெருப்பாகி உறவுநிலை கருகிப் போக காரணமாகி விடுகிறது.

தனது மனைவி எப்போதும் மற்றவர்களால் பாராட்டப்பட வேண்டும் என்று ஆண்கள் விரும்புவார்கள். அதற்கு அழகும் படிப்பும் பணமும் மட்டும் போதாதவை. நல்ல பண்பும் அவசியம். பலராலும் திறமைசாலி என்று பாராட்டப்படும் பெண்களைக் கூட சிற்சில விடயக்குறைபாடுகளால் ஆண்கள் விரும்பமாட்டார்கள்.

விரைவாக பதற்றமாவது, சின்னச் சின்ன விடயங்களுக்கும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வது, அடிக்கடி அழுவது இதெல்லாம் ஆண்களுக்குப் பிடிக்காதது. தங்களைப் பலசாலிகள் என்று காட்டிக்கொள்ளும் பெண்கள் இப்படிப்பட்ட விடயங்களால் பலவீனமாகி விடுகிறார்கள். ஒரு சின்ன விடயத்தைக் கூட சுயமாகச் சிந்தித்து தீர்வு காணமுடியாத பெண்கள் திருமணத்துக்கு சற்றும் பொருத்தமானவர்கள் அல்லர்.

எல்லா விடயத்தையும் சுற்றியிருக்கும் எல்லாரிடமும் சொல்லி தீர்வு காண நினைப்பது கையாலாகாத்தனம். அலுவலகத்திலும் வீட்டிலும் வெளியிலும் புலம்பிக் கொண்டே இருக்கும் பெண்களால், தாமும் நிம்மதியாக இருக்கவோ மற்றவரையும் நிம்மதியாக வைத்துக் கொள்ளவோ இயலாது. திருமண வாழ்க்கை என்பது ஒருவருக்கொருவர் ஆதரவாய் இருப்பது. மலர்களின் சிறப்பே நறுமணம் தானே. மணமில்லாத மலர்களை யாரும் விரும்புவார்களா? பண்பில், அன்பில், பொறுமையில், நிதானத்தில், சகிப்புத்தன்மையில் தங்களை உருவாக்கிக்கொள்ளும் பெண்களே மணவாழ்க்கையிலும் மணக்கிறார்கள். வாழ்வின் எல்லாத் தருணங்களிலும் சிறக்கிறார்கள்.



## உங்கள் மீதான நம்பிக்கையை இழக்காதீர்கள்!



உடல் ரீதியான, பாலுணர்வு ரீதியான துன்புறுத்தல்கள், வன்முறை, பொருளாதார ரீதியாக பாதுகாப்பற்ற நிலை, குறைந்த அந்தஸ்தில் இருப்பதை எண்ணி வருந்துதல், மற்றவர்களைப் பாதுகாப்பாக கவனித்துக்கொள்ள வேண்டுமே என்ற தொடர் பொறுப்பு ஆகியவற்றால் மனிதர்களுக்குத் மன அழுத்தம் ஏற்படுகிறது.

சோகமான எண்ணங்கள், தினமும் ஒரு முறையாவது, அனைவருக்கும் எழுந்து அடங்குவது இயற்கையே. ஆனால் ஒரு சோக நினைப்பு தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு மேல் ஒருவர் மனதை ஆக்கிரமிக்கும்போதோ அன்றாட வேலைகளில் தடையை ஏற்படுத்தும்போதோ அந்த நிலை தான் மன அழுத்தம்' என்றழைக்கப் படுகிறது.

பிரியமான நடவடிக்கைகளில் நாட்டம் இல்லாமல் இருப்பது சோர்வு, சுறுசுறுப்பின்மை, தூக்கமின்மை, கவனத் தடுமாற்றம், முடிவு எடுப்பதில் குழப்பம், பசியின்மை அல்லது அளவுக்கு அதிகமாக உண்பது. எந்தக் காரணமும் இன்றி உடலில் எங்காவது வலி தோன்றுவது, எதிர்மறையான நிகழ்வுகளைத் தான் இனி சந்திக்கப் போகிறோம் என்ற எண்ணம் ஆகியவை மன அழுத்தத்துக்கான அறிகுறிகள். தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் தோன்றும்; அதற்கான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்று தோன்றும். பெண்களிடையே மன அழுத்தம் சர்வசாதாரணமாகக் காணப்படுகிறது.

### மன ஓட்டங்களை கட்டுப்படுத்த திணறும்போது...

நம்பகமான அக்கறை கொண்ட நண்பர் களிடம் மனக்குறைகளைப் பகிர்ந்து கொள்ளலாம்.

உடல் ரீதியான, பாலுணர்வு ரீதியான துன்புறுத்தல்கள், பொருளாதார ரீதியாக பாதுகாப்பற்ற நிலை, குறைந்த அந்தஸ்தில் இருப்பதை எண்ணி வருந்துதல், மற்ற வர்களைப் பாதுகாப்பாக கவனித்துக் கொள்ள வேண்டுமே என்ற தொடர் பொறுப்பு ஆகியவை இதற்குக்காரணங்களாக அமைகின்றன. உங்கள் மனதை சாந்தப்படுத்தும் இசை, தோட்டப் பராமரிப்பு நல்ல புத்தகங்களைப் படிப்பது, மனதுக்குப் பிடித்த உணவு உண்பது. உங்கள் மீதான நம்பிக்கையை இழக்காமல் இருப்பது. யோகா, தியானம் இவற்றை நாள் தவறாமல் செய்து வருவது என்பவற்றால் உங்கள் மனதை இதப்படுத்தி, மன அழுத்தத்திலிருந்து வெளி வர இயலும்.

### மாத்திரையைத் தவிருங்கள்!

உங்களுக்கு மன அழுத்தம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிந்தால் அதைத் தீர்க்க நீங்கள் முழு முயற்சியில் இறங்க வேண்டும்.

மனநல ஆலோசகரிடம் ஆலோசனை பெறும் போது முதல் கட்டமாக அவர்கள் பிரச்னையைக் கேட்டுத் தெரிந்து கொள்ள முற்படுவர். இது நல்லது தான் என்றாலும் முன் பின் தெரியாத ஒருவரிடம் உங்கள் மனக்குறையைச் சொல்ல நீங்கள் தயங்கலாம்.

எனவே, மிக மிக நம்பிக்கையான நண்பர் ஒருவரிடம், உங்கள் பிரச்சினையை எடுத்துச் சொல்லுங்கள்; மனதில் உள்ள அனைத்தையும் கொட்டி விடுங்கள். உங்கள் மீது அன்பு வைத்திருப்பவர் நிச்சயம் இதற்கான தீர்வு சொல்வார்.

மன அழுத்தம் தீர்க்க மாத்திரை சாப்பிடுகிறேன் எனச் சொல்வதை விட தற்காலிக உபாயங்களை நாடுவதை விட, மனதில் உள்ளதை உங்களுக்கு நெருங்கிய ஒருவரிடம் கொட்டித் தீர்ப்பது நல்லது.